மே 17 - 23, 2004 | 24 பக்கங்கள் | 16.00

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

# சுடர் ஒளி

THE SUDAR OLI සුඩර් ඔළි வார மலர்



## சமாதானம்:
## மீண்டும் ஒரு மரதன் ஓட்டம்

## சிறைக்கம்பிகளின் பின்னால்.........

# சமாதானத்துக்கெதிரான செயற்பாடுகளை கண்டும் காணாதிருக்க முயற்சிக்கும் அரசு

கடந்த மாதம் இடம் பெற்ற முதலாவது நாடாளுமன்ற அமர்வு முடிவடைந்த கையோடு, ஏககாலத்தில் ஜனாதிபதி நோர்வே அரசுக்கும், இந்தியாவுக்கும் சமாதான முயற்சிகளில் அனுசரணையாளராக செயற்பட வருமாறு அழைப்பு விடுத்திருந்தார்.

அவரது அழைப்புக்குறித்த அறிவிப்போடு, புதுடில்லிக்கு அமைச்சர் கதிர்காமர் சென்று திரும்பினார். நோர்வேயிலிருந்து எரிக் சொல்ஹேய்ம் தலைமையின் குழுவினர் வந்து சென்றுவிட்டார்கள்.

அரசு தரப்பில் இருந்து வரும் அறிவிப்புக்கள் எப்படியோ தாம் சமாதானத்தின் மீது ஆர்வமாக இருப்பதாக காட்டிக்கொண்ட போதும், நாட்டில் அன்றாடம் நடைபெறும் நிகழ்வுகள் சமாதானத்தின் மீது அவநம்பிக்கை ஏற்படுவதும் நிகழ்வுகளாகவே தென்படுகின்றன.

## உரிமை கோரப்படாத தாக்குதல்களும் மரணங்களும்

ஆயித்திய மலை விடுதலைப்புலிகள் முகாம் மீதான தாக்குதலுக்குப் பின்பு இரண்டு வாரகால இடைவெளியில், 4 சம்பவங்கள்



கதிர்காமர்

நடந்து விட்டன. இதில் ஒரு சம்பவம் புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதியிலும், ஏனைய மூன்று இராணுவத்தின் கட்டுப்பாட்டுப் பகுதியிலும் நிகழ்ந்திருக்கின்றன.

விடுதலைப் புலிகளுக்கெதிராக இலக்கு வைத்தே கணிசமான தாக்குதல்கள் நடைபெற்றன. இதுபற்றி இதுவரை அரசு எந்த அறிவிப்பையும் வெளியிட்டதாக இல்லை.

இது தொடர்பாக விடுதலைப் புலிகள் விடுத்துள்ள அறிக்கையில், தக்குதல் நடத்தப்பட்டுள்ள வழிமுறைகளில் அரசபடை சம்பந்தப்பட்டிருப்பது பற்றி தமக்கு சந்தேகம் இருப்பதாக கூறியுள்ள போதும், இது பற்றி அரசு மௌனமாகவே இருந்துவருகிறது.

விடுதலைப்புலிகளை ஏகப்பிரதிநிதிகளாக ஏற்றுக்கொண்டு, அவர்களுடன் தனித்தரப்பாக பேச்சுக்கள் நடத்த உடன்பட்டிருக்கும் அரசு, பேச்சுக்களில் புலிகள் கொண்டுள்ள சந்தேகம் குறித்து மௌனமாக இருப்பது அனைத்து தரப்பாலும் சந்தேகத்துக்குரியதாகவே நோக்கப்படுகின்றது.

## ஜே.வி.பி.யினரின் சர்ச்சையான பேச்சுக்கள்

42 ஆசனங்களை தனக்கென நாடாளுமன்றத்தில் கொண்டிருக்கும் ஜே.வி.பி. கட்சியினர் அரசின் நடவடிக்கை தொடர்பாகவும், தமிழ் தரப்பு மற்றும் விடுதலைப் புலிகள் குறித்தும், வெளியிட்டுவரும் கருத்துக்கள் அரசின் எந்த செயற்பாடுகளையும் குழப்புவதாக அமைந்திருப்பதுடன் தேவையற்ற சர்ச்சைகளையும் தூண்டிவருகிறது.

அரசு, தான் கூறியவற்றையே மறுதலிக்கும் வகையில் நடந்து கொள்வது ஒரு புறமிருக்க, ஜே.வி.பியினர் ஏற்படுத்தும் குழறுபடிகள் எதிலுமே எவரும் நம்பிக்கை வைக்க முடியாத அளவுக்கே அமைந்திருக்கின்றன.

மகாவலி அபிவிருத்தி அமைச்சை தமக்கு கொடுக்க வில்லையெனக் கூறி தனது அதிருப்தியை வெளிப்படுத்தி அதனை ஜே.வி.பி பெற்றுக் கொண்டது.

இதன் பின்னர், இப்போது தனக்கு வழங்கப்பட்ட அமைச்சில் திரைப்படக்கூட்டுத்தாபனம் குறித்த விவகாரங்களை ஜனாதிபதி எடுத்துக் கொண்டுவிட்டதாகக் கூறி தனது எதிர்ப்பை அரசுக்கு தெரிவித்திருக்கிறது.

இப்போது பொதுத்துறைகளை அரசு தனியார் மயப்படுத்த முயற்சிகளை மேற்கொண்டுவருவதாக கூறி, இது தாம் ஏற்கனவே அமைத்துக் கொண்ட உடன்படிக்கைக்கு முரணானதென்றும் அது தனது ஆட்சேபனைகளை அரசுக்கெதிராக தெரிவித்திருக்கின்றது.

பிந்தியதாக, சமாதானப் பேச்சுக்கள் குறித்து அது தெரிவித்துள்ள கருத்தில், புலிகளை தனித்தரப்பாக ஏற்றுப் பேசுவதற்கு தாம் இணங்குவதாகவும், ஆனால், விடுதலைப் புலிகள் தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் என்பதில் தாம் உடன்படவில்லை என்றும் ஜே.வி.பி கருத்துக் கூறியுள்ளது.

ஜே.வி.பியின் இந்தக் கருத்துக்கள், தொடரப்போகும் சமாதான முயற்சிகளை எங்காவது இடையில் இவர்கள் முறித்துக் கொள்வார்கள் என்பதை உறுதிப்படுத்துவதாகவே தென்படுகிறது.

அரசின் பிரதான பங்காளிக் கட்சியான ஜே.வி.பி. இவ்வாறு கூறுவது குறித்து அரசு எதுவும் பேசாது இருப்பது, சமாதானத்தின் மீதான அரசின் உறுதிப்பாடு குறித்து மேலும் சந்தேகத்தை ஏற்படுத்துவதாகவே உள்ளது.

## அமைச்சர் கதிர்காமரின் புதுடில்லி விஜயத்தின் பின்பு

இந்திய பாதுகாப்பு அமைச்சர், மற்றும் அதிகாரிகளை அமைச்சர் கதிர்காமர் சந்தித்து, இலங்கையுடனான இந்திய அரசின் ஈடுபாடுகள், மற்றும், வர்த்தகம், தேசிய பாதுகாப்பு என்பவை தொடர்பாக விரிவான பேச்சுக்களை நடத்தியிருந்தார்.

அதன் பின்பு அவர் ஊடகங்களுக்கு வெளியிட்ட கருத்துக்கள்,விடுதலைப் புலிகளின் தன்னாட்சி அலகு தொடர்பாக உறுதியற்ற நிலைப்பாட்டையே வெளிப்படுத்தின.

முறையான சமாதானச் சூழலொன்று ஏற்படுத்தப்படாத நிலையில் வடக்கு கிழக்கில் இந்திய அரசின் நேரடிக்கண்காணிப்பின் கீழ், நிவாரணப்பணிகளை செய்வதிலேயே கதிர்காமரும், அரசும் ஆவலாக இருப்பதை அவர்களது பேச்சுக்களில் இருந்து அறியக்கூடியதாக இருந்தது.

பிந்தியதாக இந்திய உயர் ஸ்தானிகர் நிருபம் சென். குறிப்பாக தமிழ் ஊடகங்கள், இந்திய அரசு தொடர்பாக கூறிவரும் கருத்துக்களுக்கு தெரிவித்துள்ள கண்டனங்கள் இந்திய அரசின் இலங்கை மீதான மேலாண்மையை நிலைப்படுத்துவதாகவே அமைந்திருக்கின்றன.

இந்தியக்கொள்கையானது, இலங்கையினதும், இந்தியாவினதும் தேசிய நலன்களின் சேர்மானத்தின் அடிப்படையில், அமைந்திருப்பதாக கூறும் நிருபம் சென், உகந்த முறையில் தகவல்களைப் பெறாததும், நேர்மையற்றதுமான இலங்கைத்தமிழ் பத்திரிகைகளின் விமர்சனங்களினால் இந்தியாவின் கவனம் திசை திரும்பப் போவதில்லை என்றும் கூறியுள்ளார்.

இவரது பேச்சுக்கள் ஒரு புறமிருக்க, இந்திய பாதுகாப்பு அதிகாரிகளும் – இலங்கை பாதுகாப்பு அதிகாரிகளும் கூட்டாக பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்றைச் செய்திருப்பதாக நாளேடுகளில் வெளியாகியுள்ள செய்தியும் இங்கு கவனத்திற்குரியதாகவே உள்ளது.

இலங்கையின் தேசிய பாதுகாப்பை உறுதி செய்யும் நோக்கில் இராணுவ தளபாட விநியோகம் மற்றும், வேண்டிய இராணுவ பயிற்சிகள், கூட்டுப் பாதுகாப்பு நடவடிக்கைகள் உள்ளடங்கலாக அந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டிருப்பதாகவும் அச் செய்தியில் தெரிவிக்கப்பட்டிருப்பதையும் இங்கு குறிப்பிட வேண்டும்.

கடந்த அரசின் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட சமாதான முயற்சிகளை. நாட்டைப் பிரிக்கப்போவதாக கூறி இடையில் முறித்துக்கொண்ட தற்போதைய அரசாங்கம், நடைபெறப்போகும் பேச்சுக்கள் குறித்த ஒரு தெளிவான நிலைப்பாட்டைக் கூட இதுவரை தெரிவிக்கவில்லை.

இந்த நிலையில் இந்திய அரசுடனான அதன் உறவுகள், ஊடாட்டங்கள் நம்பிக்கை தருவனவாக இல்லை என்பதை மட்டும் இங்கு கூறுவதுடன் நிறுத்திக்கொள்கின்றோம்.

## நோர்வே தரப்பு அரசிடம் விடுத்துள்ள 5 கோரிக்கைகள்

சம காலத்தில் நோர்வே தரப்பால் சமாதானத்திற்காக மேற்கொள்ளப்படும் முயற்சிகள் மிக நிதானமாகவே மேற்கொள்ளப்படுகின்றன என்பதை இப்போதைக்கு ஓரளவுக்குக் கூறிக்கொள்ள முடியும். இந்தியாவுடனான இலங்கை அரசின் நட்புறவு முயற்சிகள் பற்றி நோர்வே அரசு அவ்வளவுக்கு அலட்டிக் கொண்டதாகத் தெரியவில்லை.

இந்திய உறவில் இலங்கை அரசு காட்டும் அக்கறை குறித்து சம்பந்தன் எம்.பி. எரிக் சொல்ஹெம்மிடம் வினாவியபோது தமது பேச்சுக்கள் குறித்த அனைத்து விவரங்களும் இந்திய அரசுக்கு தெரிவிக்கப்பட்டிருப்பதாகவும், தமது முயற்சிகள் குறித்து இணக்கப்பாடான தன்மையை இந்திய அரசுடன் பேணிவருவதாகவும் அவர் தெரிவித்திருக்கிறார்.

அதேவேளை, அரசுக்கு விடுத்துள்ள 5 அம்சக் கோரிக்கைகளும் கவனத்திற்குரியவையாக உள்ளன. அரசு பேச்சுக்களின்போது அதனைக் குழப்பிக்கொள்ளாத வகையிலும், பொறுப்புணர்வுடன் அரசு நடந்து கொள்வதை உறுதிப்படுத்தும் வகையிலும் அவை அமைந்துள்ளன.

வெளிநாட்டு உதவிகளைப் பெறும் நோக்கில் சமாதான பேச்சுக்களை ஏற்பாடு செய்தலை தவிர்த்தல், பேச்சுக்கள் குறித்து அனைத்துப் பொறுப்பையும் ஜனாதிபதி ஏற்றல், குறிப்பிட்ட காலத்துள் பேச்சுக்களை நிறைவு செய்தல், விடுதலைப்புலிகள் சமர்ப்பித்துள்ள தன்னாட்சி அலகின் அடிப்படையில் பேச்சுக்களை தொடர்தல் ஆகிய இந்த 5 நிபந்தனைகளும், அரசின் தடுமாற்ற நிலையைப் பொறுத்தவரை, நோர்வேயின் இந்த ஏற்பாடு காத்திரமானது என்றே கூற வேண்டும்.

இந்த அறிவிப்புக்கள், அரசின் தரப்பில் இருக்கும் குழப்பவாதிகளுக்கும், ஹெல உறுமயவினர் விடுத்துவரும் சமாதான முயற்சிகளுக்கெதிரான நடவடிக்கைகளுக்கும் பலத்த அடியாக இருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

ஏற்கனவே, அன்ரன் பாலசிங்கம் கொழும்பில் இருந்து வன்னி செல்வதற்கான வானூர்தி ஏற்பாடுகளை ஜனாதிபதி செய்து கொடுத்தற்காக ஹெல உறுமய தனது கண்டனத்தை தெரிவித்திருக்கிறது என்பதும் கவனத்திற்குரியது.

## அமெரிக்காவின் தலையீடு

கடந்த அரசின் காலத்தில் மேற்கொள்ளப்பட்டு வந்த சமாதான முயற்சிகளின் போது, விடுதலைப் புலிகள் தொடர்பாக கடுமையான கண்டனங்களையும் நிபந்தனைகளையும் தெரிவித்து வந்த அமெரிக்க அரசு, ஜனாதிபதியின் கட்சி ஆட்சிக்கு வந்ததன் பின்னர் விடுத்துள்ள சமாதானப் பேச்சுக்கான அழைப்புக்கு தனது பலத்த வரவேற்பை தெரிவித்திருக்கின்றது.

அது மட்டுமன்றி அரசின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு நிதி வழங்கப் போவதாகவும் அது அறிவித்திருக்கிறது. இதில் கவனத்திற்குரிய விடயங்களும் இருக்கின்றன.

நிதி வழங்கப் போவதாக அது அறிவித்துள்ள திட்டத்தில், வாஷிங்டனால் விரும்பப்படும் கொள்கைகள், திறந்த சந்தைப் பொருளாதாரம் மற்றும் ஊழல் ஒழிப்பு என்பவற்றுக்காகவும் தான் நிதி உதவி அளிக்கப் போவதாக இலங்கை அரசுக்கு அமெரிக்கா தெரிவித்துள்ளது.

கடந்த காலத்தின்போது நடைபெற்ற பேச்சுக்களில் மிரட்டல் பாணியில் விடுதலைப்புலிகளுக்கெதிராக கருத்து தெரிவித்துவந்த அமெரிக்க அரசு, தற்போது நடைபெறும் பேச்சுக்களை எதன் அடிப்படையில் ஆதரிக்கின்றது என்பது குறித்து எதையும் வெளியிடவில்லை. நிறுத்தப்பட்ட பேச்சுக்களை எந்த இடத்தில் இருந்து எப்படி தொடரவேண்டும் அது எவ்வாறு நடைபெற வேண்டும் என்று ஏதாவது கருத்தை அமெரிக்கா ஏன் சொல்லவில்லை?

## பௌத்தபிக்குகளின் பேச்சுக்கள்!

சமாதானப் பேச்சுக்களுக்கான முயற்சியில் மிகவும் எச்சரிக்கையுடன் நோக்கவேண்டிய விவகாரமாக பௌத்த பிக்குகளின் நடவடிக்கைகள் காணப்படுகின்றன.

பிக்குமார்களை பிரதிநிதித்துவப்படுத்தும் ஹெல உறுமய கட்சியானது கடந்த வருட இறுதிக்காலத்தின்போது தான் ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

தனது தீர்க்கதரிசனமற்ற இனவாதப் பேச்சுக்களால் சிங்கள மக்களிடையே மதிப்பிழந்திருந்த இந்தக்கட்சியினர், இவ் வருட ஆரம்பத்தில் கொழும்பில் சிங்கள தமிழ் கலைஞர்களின் கலாசார பரிமாற்ற ஒன்று கூடல் நிகழ்வின் போது, தமிழ் கலைஞர்களை புலிகள் எனக்கூறி அவர்கள் மீது அடிதடிப்பிரயோகம் ஒன்றை நடத்தியதன் மூலம் அது தன்னைப் பிரபல்யப்படுத்திக் கொண்டது.

இதன் பின்னர், இனப்பிரச்சினை தொடர்பாகவும் விடுதலைப்புலிகள் குறித்தும் தமக்கென ஒரு கோட்பாடொன்றை தம் கட்சிக்குள் வகுத்துக்கொள்ள முடியாத நிலையிலேயே இந்தக்கட்சி இருந்தது.



சந்திரிகா

சிங்கள மக்களின் உணர்ச்சிகளை தூண்டும் வகையில் தென்னிலங்கை சிங்களக் கட்சிகள் மற்றும் சிறுபான்மைக் கட்சிகள் இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக கூறும் கருத்துகள் தொடர்பாக இனவாத ரீதியில் முரண்படுவதன் மூலம் தன்னை வளர்க்க அது தலைப்பட்டது.

தர்ம ராஜ்ஜியம் என்ற கோஷத்தின் மூலம் [illegible]னால், சிங்கள மக்கள் நாடிழந்து தவிப்பதாக அது குருட்டு இனவாத பிரசாரத்தை முன்னெடுத்தது.

இதன் மூலம் சிங்கள தேசத்தையும், அதன் தேசியத்தையும் ஒரு குழப்பத்துக்குள் ஆழ்த்தி வைத்திருப்பதன் ஊடாக தமது கட்சி பிரபல்யம் பெறுவதையே இந்தப் பௌத்த பிக்குகள் விரும்புகிறார்கள் போல்தெரிகிறது.

முடிவாக, அரசு சமாதானம் குறித்த செயற்பாடுகளில், தமது பங்காளிக்கட்சிகளின் எதிர்ப்பிரசாரங்களை கண்டும் காணாதிருப்பதுடன், வெளிநாடுகளை குறிப்பாக இந்தியாவை விடுதலைப்புலிகளுக்கெதிராக யுத்தத்துக்குள் இழுத்துவிடும் செயற்பாடுகளில் குறிப்பாக இருப்பதாகவே தெரிகிறது.

விடுதலைப்புலிகளுக்கெதிரான அமைப்புகளின் பெயரால் அரச படைகளைக் கொண்டு விடுதலைப்புலிகள் மேல் தாக்குதல் நடத்துவதன் மூலம், விடுதலைப்புலிகள் தான் சமாதானத்துக்கு எதிரானவர்கள் எனக்கூற அரசு முற்படுவதையே அன்றாட நிலைமைகள் புலப்படுத்துகின்றன.

அவர்கள் மேல் யுத்தத்தை தொடுத்து மீண்டும் ஒரு ரத்தக்களரிக்கே அரசு வழி திறந்து விடுவது போல்தான் அரசின் அண்மைக்கால நிகழ்வுகள் நகர்ந்து செல்கின்றன என்பதை அரசு கவனத்தில் கொள்ள வேண்டும்.

அரசு விரும்பினால் என்ன, விரும்பாவிட்டால் என்ன அரசுக்கு தெரிந்தோ தெரியாமலோ மேற்சொன்ன நிலைமைகளின் போக்கைத்தான் உண்மையாக அவதானிக்கக் கூடியதாக உள்ளது என்பதை ஜனாதிபதி புரிந்துகொள்ள வேண்டும். அவ்வாறு புரிந்துகொள்ள முயற்சிப்பாரா? அவரின் எதிர்கால சமாதான முயற்சிகள் அதனை தெளிவுபடுத்திவிடும்.

– சாலை யூரான் –

# மாற்றங்கள், மாற்றங்களுக்காகவா? மயக்கங்களுக்காகவா?

நடந்து முடிந்த 13ஆவது நாடாளுமன்றத் தேர்தலுக்குப்பின்பு குறிப்பிடக்கூடியனவாக பின்வரும் நிகழ்வுகளைக்கூறலாம்.

1)ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு அரசாங்கம் அமைத்தமை

2)மகிந்த ராஜபக்ஷ பிரதமராக பதவியேற்றமை.

3)சபாநாயகர் எதிரணியிலிருந்து தெரியப்பட்டமை.

4)மக்கள் விடுதலை முன்னணியைச் சேர்ந்த 4 அமைச்சர்களும், 4 பிரதியமைச்சர்களும் காலந்தாழ்த்தி அமைச்சுப் பொறுப்புகளை ஏற்றமை.

5)எதிர்வரும் 18/05/2004 வரை நாடாளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டிருக்கின்றமை.

அடுத்து கூடவிருக்கும் நாடாளுமன்றத்தின் போது பின்வரும் விடயங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

1)பிரதி சபாநாயகர் தெரிவு.

2)குழுக்களின் பிரதித் தலைவர் தெரிவு.

இவை உடனடி எதிர்பார்ப்புகள் ஆகின்றன. இவை அனைத்துக்கும் மத்தியில் அவசர அவசரமாக சில நிறைவேறியிருக்கின்றன. இந்த நிறைவேற்றுதல்கள் எதிர்பாராத மாற்றங்களாகக் கூட அமைந்துள்ளன.

இந்த மாற்றங்கள் உண்மையிலேயே நாட்டில் நல்ல மாற்றங்களை நோக்கிய மாற்றங்களா? அல்லது மக்களை மயக்க — குறிப்பாக தமிழ் மக்களையும், இலங்கை நாட்டைக் கூர்ந்து நோக்குகின்ற வெளிநாடுகளையும், அதிலும் குறிப்பாக இலங்கைக்கு உதவி வழங்கும் தகுதியுடைய நாடுகளையும் மயக்க முற்படும் மாற்றங்களா?

தற்போது நாட்டில் ஐந்து தரப்பினர் முக்கியத்துவம் பெறுகின்றனர்.

1)ஜனாதிபதியையும் தற்போதைய அரசாங்கத்தையும் உள்ளடக்கிய ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பினர்.

2)பிரதான எதிர்க் கட்சியாகிய ஐக்கிய தேசியக் கட்சியினரும் அதன் தோழமை அணியினரும்

3)தமிழீழ விடுதலைப்புலிகளின் அனுசரணையுடனும் வழிநடத்தலுடனும் செயற்படுகின்ற தமிழரசுக்கட்சி.

4)சிறப்பாக, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும், பொதுவாக ஏனைய முஸ்லிம் தலைமைத்துவங்களும்.

5)ஜாதிக ஹெல உறுமய என்ற பிக்கு முன்னணியினர்.

இந்த 5 தரப்பினரின் கருத்து வெளிப்பாடுகள், அறிக்கைகள், செயற்பாடுகள் என்பனவே தற்போதைய இலங்கை அரசியலில் தாக்கம் செலுத்தும் வல்லமை மிக்கவை. நாம் மாற்றங்கள் என்று குறிப்பிட முற்படுவது, நிறைவேறிய நிக்ழ்வுகளையும் எதிர்பார்க்கும் விடயங்களையும் மேவி நிற்கின்ற எல்லோரும் அறிந்த வெளிநாடுகளும் அவதானிக்கின்ற இலங்கையின் இனப்பிரச்சினையோடு சம்பந்தப்பட்ட மாற்றங்களே ஆகும்.

இந்தப்பிரச்சினையில்மேலே இனங்காணப்பட்ட 5 தரப்பினரும் தற்போதைய நிலையில் எவ்வாறு இணைத்து நோக்கப்பட்டு கணிக்கப்படுகின்றனர்.

தமிழரசுக்கட்சியினர் தமது ஆரம்ப இலக்கிலிருந்து நழுவவுமில்லை, குறிக்கோளிலிருந்து விலகவுமில்லை. நாடாளுமன்றத்துக்கான அக்கட்சிக்குரிய 22 உறுப்பினர்களுடன், திரண்டுவிட்ட அடம்பன் கொடி போல மிடுக்குடன் ஒன்றையே நோக்கி செயற்படுகின்றனர். ஈழ விடுதலைப் போராளிகள் தலைவர், இந்த செயற்பாடுகளுக்கான நெறிப்படுத்தலை சீராக நிறைவேற்றுகின்றார்.

இலங்கை நாட்டின் தமிழ் பேசும் மற்றைய தொரு சிறுபான்மை இனத்தவரான முஸ்லிம் மக்களின் தலைமைத்துவங்கள், குறிப்பாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உட்பட்ட தலைமைத்துவங்கள் தமது சந்தேகங்களையும் மனக்கசப்புகளையும் எதிர்பார்ப்புக் களையும் வெளிப்படுத்துகின்றன. வடக்கு—கிழக்கு மண்ணில் மற்றொரு தேசிய இனமான முஸ்லிம் மக்களின் சுபீட்சமான எதிர்காலம் குறித்த தமது முன்வைப்புக்கள் புறக்கணிக்கப்படுகின்றனவோ என்ற சந்தேகத்தை வெளிப்படுத்துகின்றன. மனக்கசப்புகளையும், எதிர்ப்புக்களையும் வெளிப்படுத்துகின்றன. வடக்கு— கிழக்கு மண்ணில் மற்றொரு தேசிய இனமான முஸ்லிம் மக்களின் சுபிட்சமான எதிர்காலம் தொடர்பான தமது முன்வைப்புக்கள் புறக்கணிக்கப்படுகின்றனவோ என்ற சந்தேகத்தை வெளிப்படுத்துகின்றன.

ஜாதிக ஹெல உறுமய இந்த நாட்டின் இனப்பிரச்சினையை தீர்ப்பதற்காக அரசாங்கமானது எடுக்கின்ற முயற்சிகளை சாடத்தவறவில்லை. கண்டிக்கப் பின் நிற்கவில்லை. ஈழ விடுதலைப்புலிகளுடனான சமாதானப் பேச்சுவார்த்தைக்கு இவர்கள் சம்மதிக்கவில்லை.

•2002ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 22ஆம் திகதி, ஈழ விடுதலைப்புலிகளுடன் யுத்த நிறுத்த ஒப்பந்தமொன்றை ஏற்படுத்தி, 2004 ஏப்ரல் 02இல் நாடாளுமன்றத்துக்கான 13ஆவது தேர்தல் நடைபெறும் வரைக்கும் அந்த ஒப்பந்தத்தை பல வகையான சிரமங்களுக்கு மத்தியிலும் இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக தக்க வைத்துக்கொண்ட முன்னைய அரசாங்கமும் தற்போதைய பிரதான எதிர்கட்சியுமான ஐக்கிய தேசிய முன்னணி இந்த விடயத்தில் தற்போது மௌனம் சாதிக்கிறது.

ஆயினும் முன்னாள் பிரதமரான தற்போதைய எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தற்போதைய அரசின் சமாதான முயற்சிகளுக்கு தாம் தடையில்லை என அறிவித்திருக்கிறார்.

•இந்த வகையில் நாம் நோக்க வேண்டிய எஞ்சியுள்ள அமைப்பினர் நாட்டின் செயற்படு நிர்வாகியான ஜனாதிபதியையும்

## தேர்தலின் பின்பு திருந்திய உள்ளங்கள்!?

பலமற்ற அரசாங்கத்தையும் உள்ளடக்கிய ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பினரே ஆவர். இந்தத் தரப்பிலிருந்தே சில மாற்றங்கள்வெளிப்படுகின்றன இந்தமாற்றங்கள் சிலவகையில் எதிர்பாராத மாற்றங்கள். ஆயினும் மகிழ்ச்சியையும் மக்கள் மத்தியில் நல்ல நிகழ்வுகளுக்கான பலமான எதிர்பார்ப்புகளையும் ஏற்படுத்தியுள்ள மாற்றங்களாகும்.

இந்த மாற்றங்களை வெளிப்படுத்தும் பேச்சுக்கள், அறிக்கைகள், செயற்பாடுகள் என்பன தேர்தலுக்கு முன்பு வெளிப்படுத்தப்பட்டிருக்குமானால் இவற்றை வாக்கு வங்கிகளுக்கான ''முதலீடுகள்'' என்றும் தேர்தல் திருவிழாவை நோக்கிய ''புஸ்வாணங்கள்'' என்றும், தேர்தல் நாடகத்தில் நடிக்க வந்த வேட்பாளர்கள் எனும் நடிகர்களின் பம்மாத்துகளும், பாசாங்குகளும்'' என்றும் புறந்தள்ளியிருக்கலாம்.

ஆனால் தேர்தல் முடிந்து அதிக அளவிலான ஸ்தானங்களைப் பெற்று அரசாங்கத்தையும் அமைக்கக் கூடிய அசட்டுத்துணிச்சலையும் அடைந்து இனப்பிரச்சினைக்கு உரிய தமிழ்த்தரப்பினரின் எத்தரப்பிலான ஆதரவும் இல்லாத வேளையிலும் இத்தகைய மாற்றங்கள் வெளிவந்திருப்பதை எழுந்தமானத்தில் புறந்தள்ளி ஒதுக்கிவிட முடியாது. ஆயினும் இந்த மாற்றங்கள் வெளிவந்திருக்கின்ற தரப்பினரின் கடந்த கால செயற்பாடுகளும் அவர்தம் அரசியல் நடவடிக்கைகளின் நேர்மைத்துவ குறைபாடுகளுமே மாற்றங்களை நம்புவதில் சங்கடத்தை ஏற்படுத்துகின்றன.

குறிப்பிடத்தக்க வகையான இந்த மாற்றங்கள் எவை?

•சமரசப் பேச்சுவார்த்தைகளுக்கும், சமாதான முயற்சிகளுக்குமாக இலங்கை நாட்டின் ஜனாதிபதியினால் அழைக்கப்பட்ட நாடு நோர்வே. ஆனால் ஐக்கிய தேசிய முன்னணி அரசுடன் நோர்வேப் பிரதிநிதிகள் இணைந்து செயற்பட்ட வேளை அந்தப்பிரதிநிதிகளின் நடவடிக்கைகள் மீதான தமது அதிருப்தியை வெளிப்படுத்தியவர் ஜனாதிபதி. நோர்வே நாடு தனது அனுசரணை நிலையில் இருந்து ஒதுங்கி இருந்த வேளை தனது கட்சி ஆட்சியை அமைத்த பின்பு மீண்டும்தாமே நோர்வே நாட்டினை அழைத்துள்ளார். இது எதிர்பார்ப்புகளுடன் இணைந்த திருப்தி தரும் மாற்றம்.

•வெளிவிவகார அமைச்சராகத் தாம் இருந்த வேளை ஐரோப்பிய நாடுகள் மத்தியில் குறிப்பாக அமெரிக்கா, பிரித்தானியா, கனடா போன்ற நாடுகளிலும்— அதி சக்தி மிக்க அயல் நாடான இந்தியாவிலும் ஈழ விடுதலைப்புலிகளுக்கு எதிரான அபிப்பிராயங்களை ஏற்படுத்தி புலிகள் அமைப்பு அந்த நாடுகளினால் தடை செய்யப்படுவதற்கான தலையாய பணி புரிந்த லக்ஷ்மன் கதிர்காமர் தற்போதைய அரசிலும் வெளிவிவகார அமைச்சுப் பொறுப்பில் இருந்துகொண்டே, இந்திய நாட்டுக்கான தமது அண்மைய உத்தியோகபூர்வ விஜயத்தின்போது ''பேசவேண்டியது ஈழ விடுதலைப்புலிகளுடன் தான்'' என்று கூறி இருக்கிறார். ''லக்ஷ்மன் கதிர்காமரா இவ்வாறு கூறினார்?'' என்று நெற்றி சுருக்கி வினாக்குறியைப் பலர் எழுப்பினாலும் அவர் கூறித்தான் இருக்கிறார். பல ஊடகங்கள் வெளிப்படுத்தியிருக்கின்றன. காலம் உணர்த்திய ஞானத்தின் வெளிப்பாடான மாற்றம் இது.

•ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் செயலாளரான அமைச்சர் சுசில் பிரேம் ஜயந்த வெளியிட்டுள்ள உத்தியோக பூர்வ அறிக்கையில் ''பேச்சுவார்த்தை புலிகள் தரப்பினருடன் மட்டுமே நடைபெறும்'' என்று தெரிவித்திருப்பது இன்னொரு மாற்றம்.

•சமாதானப்பேச்சுவார்த்தையைதொடர்ந்து சாடி, புலிகளுடன் பேசுவதை எதிர்த்து நோர்வே நாட்டின் அனுசரணையை நிராகரித்து பேரினவாத கோஷங்களை முன்வைத்த மக்கள் விடுதலை முன்னணி எனும் ஜே.வி.பி தற்பொழுது ஜனாதிபதியின் இந்த முயற்சிகளுக்கு அழுத்தமான எதிர்ப்பைக் காட்டாது சில மழுப்பல்களை வெளிப்படுத்தினாலும் ஜனாதிபதியின் பின்னால் அணி சேருகின்றனர் என்ற மாற்றம் வெளிப்பட்டிருக்கின்றது.

கூட்டு மொத்தமாக எதிர்ப்புக்காட்டிய இடத்திலிருந்து, எதிர்த்து வந்த தளத்திலிருந்து எதிர்பாராத மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இந்த மாற்றங்களின் நோக்கங்கள் எவை?

அமைத்துக்கொண்ட சிறுபான்மைப் பலமுள்ள அரசை அழுத்தமாகப்பிடித்துக் கொண்டு ஆண்டுகளை கடத்திக்கொள்ள வேண்டும். அந்நிய நாடுகளுடைய பொருளாதார ஆதரவையும் அனுசரணையையும் இயன்ற அளவு பெற்று தமது நிர்வாகத்தை நிலைப்படுத்திக்கொள்ள வேண்டும். குறிப்பிட்ட காலத்துக்கு நம்பிக்கை எனும் மயக்க நிலைக்குள் மக்களை அமுக்கி வைத்திருந்து, தமது அதிகார கதிரைகள் ஆட்டங்காணாது காப்பாற்றிக்கொள்வதற்கான இந்த முனைப்புக்களாக இந்த மாற்றங்கள் அமைகின்றனவா? அல்லது .......

கடந்தகால அரசியல் வரலாறு கற்பித்த பாடங்கள், இலங்கை மீது சர்வதேச மட்டத்திலான அழுத்தமான பார்வை, தமிழ் தேசிய எழுச்சியின் வெளிப்பாடாக தமிழர் தரப்புக்கு கிடைத்த மாபெரும் அரசியல் வெற்றி, யுத்தமற்ற இரண்டு ஆண்டுகளில் நாடு உண்மையிலேயே அனுபவித்த அமைதிச் சூழல், ஆயுதப் போரை தொடர்ந்து நடத்தி இலங்கை இராணுவத்தை நிச்சயமாகப்பலமிழக்கச் செய்யக்கூடிய வல்லமை இருந்தும் தூர நோக்குடன் அரசியல் தீர்வுக்காக தமது இறுக்கமான போக்குகளைக்குறைத்து இறங்கி வந்த ஈழ விடுதலைப்புலிகளின் தற்போதைய செயற்பாடுகள் தவறவிட்டுவிடக்கூடாத சந்தர்ப்பம் என்றகணிப்பு, நல்லது செய்தே ஆகவேண்டும் என்ற காலத்தின் கட்டாயம் என்ற சில உந்துதல்களால் ஏற்பட்ட மாற்றங்களா?

எது எவ்வாறாக இருப்பினும் நடந்தவை அனைத்தும் முடிந்தவையாக நடப்பவை நல்லவையாகட்டும். அவ்வாறாயின் மாற்றங்களுக்கான உந்துதல்கள் நல்ல நோக்குடையனவாகவே அமைகின்றன என்று நம்புவோமா? ஆயினும் இத்தகைய நம்பிக்கை தானே இலங்கைத் தமிழினத்தை காலாகாலம் நட்டாற்றில் தள்ளியது.

எனினும் மாற்றங்களை ஏற்படுத்தக் காரணமானது ஓர் அபூர்வ சக்தி. அந்த சக்தியை கடவுள் என்று கொண்டால், தமிழினத்தின் விடுதலை வித்தை ஊன்றிய தந்தை செல்வாவின் வார்த்தைகள் நிறைவேறப் போகின்றனவோ ''இலங்கை தமிழ் இனத்தை கடவுள் தான் காப்பாற்ற வேண்டும்'' அன்று தந்தை செல்வா கூறினார். கடவுள் தீர்மானம் எடுத்துவிட்டாரா? மாற்றங்கள், நாடு எதிர் நோக்கும் நல்ல மாற்றங்களுக்காகவா? அல்லது வெறும் மயக்கங்களுக்காகவா? பொறுத்திருந்து பார்ப்போம்.

கலாநிதி
ஜெ.திவ்வியநாதன்
(முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்)

## மனோதத்துவ வைத்தியம்
## (GENERAL PSYCHOTHERAPY)

இளம் சமுதாயத்தினருக்கு சக்தி, ஆளுமை குறைந்து ஞாபக மறதி ஏற்பட்டு, மெலிவு, பயம் நடுக்கம், நித்திரை குறைவுடன்தாழ்வு மனப்பான்மையும் உண்டாகிறது. காரணம் தவறு என்று தெரிந்தும் தவிர்க்கமுடியாது சக்தியை வீணாக்குவதேயாகும். எமது மனோதத்துவ வைத்தியத்தால் தவறுகளைத்திருத்தி வெற்றி பெற்ற எதிர்காலத்தை அடையலாம். ஆரம்ப மனநோய் உடனே சுகமாக்கலாம். மற்றும் ஆஸ்மா, நீரழிவு, தலையிடி, வாதம், குழந்தை பேறு இன்மை, ...கும், பெண்களுக்கு வெள்ளை போதல், மாதவிடாய் கோளாறு, முடி உதிர்தல், பல்லிறு கரைதல் போன்ற வியாதிகளுக்கும் வைத்தியம் உண்டு. (பதில் பெறுவது எனில் முத்திரைச் செலவு அனுப்ப வேண்டும்.)

பிரபல மனோ தத்துவ நிபுணர் Dr. ஆறுமுகம் அவர்களை நாடுங்கள்

**Sexual Disorders (ஆண்மை சக்தி குறைவு)**

மனித உறுப்புக்கள் அனைத்தும் வியாதி ஏற்படுவ து போல் ஆண்மைக்கும் சில பிரச்சினைகள் ஏற்படுவது இயல்பே. ஆண்மை சக்தி குறைய பல காரணங்கள் உண்டு. (1) அளவுக்கதிகமாக விந்தை வீணாக்குவது, கனவிலும் நினைவிலும் சிறுநீரிலும் விந்து வெளியாவது. (2) உடல் பலவீனம். (3) நரம்புத்தளர்ச்சி ஏற்பட்டு எழுச்சி குறைந்து உறுப்பு சிறுத்துவிடுவது. (4) உறவின் போது விந்து விரைந்து வெளிப்படுதலிலும் ஆகும். பயப்படாதீர்கள்! மனோத்துவ வைத்தியம் (PSYCHOTHERAPY) மூலம் திறமையான மூலிகை மருந்துகளாலும் வெற்றி பெறலாம்.

**வெளிநாட்டினருக்கு விசேட வைத்தியம் உண்டு**

எம்மைத் தொடர்பு கொண்டு பதில்பெற விரும்புவோர் (முத்திரை செலவுடன்) விளக்கம் தந்தால் மனோதத்துவ வைத்திய (PSYCHOTHERAPY) ஒடியோ கசட், மற்றும் மூலிகை மருந்துகளை பதிவுத்தபாலில் அனுப்பிவைப்போம்.

இப்பொழுது யாழ்ப்பாணத்தில்

**கொழும்பில்...**
மே 22 - 27 வரை சந்திக்கலாம்
New Ahmed Turist Inn, Bang Bang Building
10 - 1/A, Bankshall Street, Colombo - 11.
TEl No. 5368426, 368427, Cell. 0722 910796
Hot Line: 0777 569205

**கல்முனையில்..**
ஜூன் 05, 06, ஆம் திகதிகளில் சந்திக்கலாம்
T.M.M. பாமசி கல்முனை
Tel No. 067 2229329
Hot Line: 0777 569205

**வவுனியாவில்...**
ஜூன் 12, 13, ஆம் திகதிகளில்
Vanni Inn, 2 ஆம் குறுக்குத்தெரு
வவுனியா, Tel No. 024 2222074
Hot Line: 0777 569205

**யாழ்ப்பாணத்தில்...**
மே 11 - 17வரை
A.S.N சுற்றுலாவிடுதி
392/A, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்
Hot Line: 0777 569205
Tel No. 021 2223181
021 222 5399

கடிதத் தொடர்புக்கு: Dr. P. Arumugam, 51/5, Koolavady Road
Batticaloa, Srilanka. Resident Tel No. 065 2224019, Hot Line: 0777 569205.

சுடர் ஒளி
மே 17 – 23, 2004
85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை, கொழும்பு–14. டெலிபோன்: 011–4734401—6
பாக்ஸ் : 011 – 4734404
E-mail: editorial@sudaroli.com

## இதய சுத்தியுடன் பேச்சு வேண்டும்

ஒரு வருட காலத்துக்கு மேலாக தடைப் பட்டுப் போய் இருக்கும் சமாதானப் பேச்சுக் களை மீண்டும் ஆரம்பிப்பதற்கான வாய்ப்பு உருவாகி இருக்கிறது.

ஜூலை இறுதியில் அல்லது ஓகஸ்ட் முற் பகுதியில்விடுதலைப்புலிகளுக்கும்அரசுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்களை ஆரம் பிப்பதற்கு இணக்கம் ஏற்பட்டிருக்கிறது.

பேச்சுக்கள் தொடர்பான விவரங்களை அறிக்கை ஒன்றின் மூலம் நோர்வே அடுத்த ஓரிரு நாள்களில் வெளியிடும். இதனை வாசித்துக் கொண்டிருக்கும்போது அறிக்கை வெளியாகியும் இருக்கலாம்.

புலிகளின் நான்கு அடிப்படை நிலைப் பாடுகளையும் அப்படியே ஏற்றுக் கொண்டு பேசசுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு ஜனா திபதி இணங்கியது முற்றிலும் எதிர்பாராத ஒரு திருப்பம்.

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலத்தைபெறுவதற்கும் உதவி வழங்கும் நாடு களின் நிதி உதவியைப் பெறுவதற்குமே அரசு இப்படியான ஒரு முடிவுக்கு வந்திருக் கிறது என்று எதிர்க்கட்சியான ஐக்கிய தேசிய முன்னணி தெரிவிக்கிறது.

ஜனாதிபதியின் சமாதான முன்னெடுப் புக்கள் நம்பகத்தன்மை வாய்ந்தவை அல்ல என்று அது கூறுகிறது. சமாதான முயற்சி களை எதிர்க்கப் போவதாகவும் அது தெரி விக்கிறது.

சபாநாயகர் தெரிவில் அரசு தோல்வி அடைந்த மறு நாளேசமாதானப் பேச்சுக்கு நோர்வேயின் அனுசரணையை ஜனாதிபதி கோரியதே எதிர்க்கட்சியான ஐக்கிய தேசிய முன்னணிக்கு சந்தேகத்தை ஏற்படுத்தி இருக்கலாம்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவு டன் பெரும்பான்மையைப் பெற்றுக்கொள் ளும் தந்திரம் என்று இதனை நம்புகிறது ஐக் கிய தேசிய முன்னணி.

விடுதலைப்புலிகளைப் பொறுத்தவரை பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பதற்கு நான்கு அடிப்படை நிலைப்பாடுகளை அவர்கள் முன்வைத்தனர்.

* தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் புலி களே என்பதை ஏற்றுக் கொண்டு அரசு பேச வேண்டும்.

* பேச்சுக்களில் இரு தரப்பினரும் சம பங்காளிகளாக இருக்க வேண்டும்.

* பேச்சுக்கள் முக்கியமாக இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை தொடர்பாகவே அமைய வேண்டும்.

* விடுதலைப்புலிகளின் தரப்பு மட்டுமே பேச்சில் பங்கு பற்ற வேண்டும்.

இந்த நான்கு நிலைப்பாடுகளையும் பொதுஜன ஐக்கிய முன்னணியும் ஜே.வி.பி யும் எதிர்க்கட்சியில் இருந்த சமயம் வன்மை யாக எதிர்த்து வந்தன.

தற்பொழுது இந்த அடிப்படை நிலைப் பாட்டை ஏற்று பேச்சுக்களை நடத்த முன் வந்திருப்பது வரவேற்கக் கூடியதே. ஆனால், அரச தரப்பினர் பேச்சுக்களில் உள்நோக்கம் எதுவும்இன்றி இதய சுத்தியுடன் கலந்து கொள் வது அவசியம்.

தமிழ் மக்களுக்கு உரிமை வழங்குவதில் கடந்த காலங்களில் இடம்பெற்ற கசப்பான அனுபவங்களை நாம் மறந்து விட முடி யாது. ஆட்சிக்கு வரும் கட்சிகள் பிரச்சினை யைத் தீர்க்க முயற்சிக்கும் ஒவ்வொரு சந் தர்ப்பங்களிலும் எதிர்க்கட்சிகள் எதிர்ப் பது வரலாறு கண்ட கசப்பான உண்மை.

2000 ஆம் ஆண்டில் பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சியில் இருந்த போது இனப் பிரச்சினைத் தீர்வுக்கு ஜனாதிபதி கொண்டு வந்த யோசனைகளை அப்பொழுது எதிர்க்கட் சியாக இருந்த ஐக்கிய தேசியக் கட்சி எதிர்த்தது.

அதேபோன்று கடந்த ஐக்கிய தேசிய முன் னணி ஆட்சிக் காலத்தில் மேற்கொள்ளப் பட்ட முயற்சிகளை பொதுஜன ஐக்கிய முன் னணி எதிர்த்தது.

தற்பொழுது ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு சமாதானம் தொடர்பாக முன் னெடுக்கும் முயற்சிகளை எதிர்ப்பதற்கு எதிர்க்கட்சியில் இருக்கும் ஐக்கிய தேசிய முன்னணி முடிவு செய்து விட்டது.

கடந்த இருபது வருட காலமாக கசப்பான அனுபவங்கள் பல ஏற்பட்டும் அவற்றை மறந்து அரசியல்வாதிகள் குறுகிய அரசியல் நோக்கத்துடன் செயற்படுவதுதான் வேதனை அளிக்கிறது.

# அரசு மீண்டும் ஆரம்பித்துள்ள சமாதானத்துக்கான மரதன் ஓட்டம்!

கடந்த 11ஆம் திகதியன்று நோர்வே தரப்பினர் விடுதலைப்புலிகளை வன்னி சென்று சந்தித்து, இரண்டு நாட்களின் பின்னர், கடந்த 13ஆம் திகதியன்று ஜனாதி பதியின் சமாதான செய்தியுடன் மீண்டும் நோர்வே தரப்பு வன்னி சென்று திரும்பியுள் ளது.

முன்னய சந்திப்பின் போது, அடிப்படை யானதும், முக்கியமானதுமான விடயங்கள் தொடர்பாக விடுதலைப்புலிகள் விடுத்தி ருந்த கோரிக்கைகளுக்கு அரசின் தரப்பில் இருந்து வெளிப்பட்ட சாதகமான பதில்க ளைத் தொடர்ந்து 13ஆம் திகதிய இறுதிச்சந் திப்பும் நடந்து முடிந்திருக்கிறது.

இதில் பிரதானமாக விடுதலைப்புலி களே தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் என்பதை ஏற்றுக்கொண்டு புலிகளுடன் மட்டும் பேசுதல் மற்றும், பேச்சுக்களை வெளி நாடொன்றில் நடத்துதல் என்பவற்றுடன் அடுத்த ஓரிரு தினங்களில் பேச்சுக்கான திகதியை அறிவிப்பதென்ற முடிவும் இந்தச் சந்திப்பின் போது எட்டப்பட்டுள்ளது.

இந்த இறுதியான சந்திப்பு தொடர்பாக விடுதலைப்புலிகள் கருத்துத் தெரிவிக்கை யில், அரசின் தரப்பில் இருந்து நம்பிக்கை தரும் வகையில் அரசின் நடவடிக்கைகள் அமைந்திருப்பதாகக் கூறியிருப்பதுடன், இது குறித்த தமது திருப்தியையும் அவர்கள் வெளிப்படுத்தியிருக்கிறார்கள்.

### ஜனாதிபதியின் கடந்தகால நடிவடிக்கைகள்

ஜனாதிபதியின் கட்சி எதிர்க்கட்சியாக நாடாளுமன்றத்தில் இருந்த காலத்தில் இருந்து அது ஆளும் கட்சியாக நாடாளு மன்றத்துக்குள் காலடி எடுத்து வைத்த பின் பும் கூட, விடுதலைப்புலிகளுடன் நடத்தும் எந்தப் பேச்சுக்களும் அவர்களுக்கு தனி நாட்டை வழங்கி விடுவதிலேயே போய் முடி யும் எனக்கூறி அவர்களுடனான பேச்சை ஜனாதிபதி எப்போதும் எதிர்த்து வருபவரா கவே இருந்துவந்தார்.

குறிப்பாக ஆட்சிக்கு வந்ததன் பின்பு, அதன் பிரதான பங்காளியான ஜே.வி.பியின் புலிகள் குறித்த அதன் எதிர்ப்பலையானது மிகவும் கூடுதலான வீச்செல்லை கொண்ட தாக இருந்து வந்தமை யாவரும் அறிந்த விட யமே.

ஜே.வி.பியின் பிந்திய அறிவிப்புகளில், விடுதலைப்புலிகளை தனித்தரப்பாக ஏற்றுக் கொண்டு பேச வேண்டிய நிர்ப்பந்தம் ஏற் பட்டுள்ளதால், தாம் அதற்கு இணங்கியதாக வும், எனினும் தமிழ் மக்களின் ஏகப்பிரதி நிதிகள் புலிகள் தான் என்பதை தமிழ் மக் கள் ஏற்றுக் கொண்டால் அதன் பின்புதாமும் அதனை ஆதரிப்பதாகவே அவர்களின் அறி விப்புகள் இருந்தன.

ஜே.வி.பியை பொறுத்தவரை இப்போது நிலைமைகள் தலைக்கு மேல் போய்விட்டன என்று தான் கூற வேண்டும்.

மறுபக்கத்தில், ஜனாதிபதியின் அரசு மிகவேகமாக விடுதலைப்புலிகளின் கோரிக் கைகளுக்கு இணங்கியிருப்பதென்பதும் எச்சரிக்கையுடன் நோக்க வேண்டிய ஒன்றா கவே இருக்கின்றது.

### மரதன் ஓட்டத்திற்கான ஏற்பாடுகள்

சமாதானத்தை முன்னெடுத்தாக வேண் டிய கட்டாய நிர்ப்பந்தம் ஜனாதிபதிக்கிருக் கிறது. முக்கியமாக , இலங்கைக்கான நிதி வழங்கும் நாடுகளின் சாதகமான அபிப்பிரா யத்தை ஜனாதிபதி பெற வேண்டியுள்ளது. அதற்கு பிரதானமாக விடுதலைப்புலிகளி டமிருந்து அரசு பற்றிய சாதகமான கருத்து வெளிப்பாடு அரசுக்கு மிக முக்கியம்.

அத்துடன் அடுத்த ஆண்டு காலத்துக்குள் ஜனாதிபதி தேர்தலையும் நாடு எதிர்கொள் கிறது. கூடவே 6 மாகாண சபைகளின் தேர் தலுக்கான திகதியையும், ஜனாதிபதி அறி வித்துவிட்டார்.

இந்த நிலையில், விடுதலைப்புலிகளின் கோரிக்கைகளுக்கு சாதகமான பதில் கிடைக்காவிட்டால், யுத்தத்தின் மீதான அரசின் ஆர்வம் பற்றிய குற்றச்சாட்டு நிரூபணம் ஆகிவிடும் என்ற பீதி வேறு ஜனாதிபதியை அச்சுறுத்திக்கொண்டிருக்கிறது.

விடுதலைப்புலிகள் தொடர்பான தமது முன்னைய நிலைப்பாட்டை அமுல்படுத்து வதற்கேற்றவாறான நாடாளுமன்றப்பலம் வேறு மிகவும் ஆட்டம் கண்டுபோயிருக்கி றது.

புலிகளை பயங்கரவாதிகளாகச் சித்திரிக் கும் ஜே.வி.பியும், ஹெல உறுமயவும் தத்தமக் கான அதிகாரப்போட்டிகளில் தமக்குள்ளே எப்போதும் மோதிக்கொண்டிருப்பது, ஜனாதிபதிக்கு நம்பிக்கை தரும் விடயமாக இல்லை.

### இந்தியாவைத் தொடர்புபடுத்தும் அரசின் முயற்சி

இந்திய அரசிடம் கதிர்காமரை அனுப்பி அவர் தன் வாயால் வெளிப்படுத்திய விடயங் கள், இந்திய அரசை விடுதலைப் புலிகளுக் கெதிராக யுத்தத்தை நோக்கி திருப்பிவிடும் அரசின் முயற்சியை அப்பட்டமாக்கியதன் பின்பு, விடுதலைப்புலிகளின் கோரிக்கை க்ள் காட்டமான தொனியில் வெளிப்பட்ட தைத் தொடர்ந்தே அரசு விடுதலைப்புலிக ளின் முக்கியமான நிபந்தனைகளுக்கு இறங்கியிருக்கிறது.

இந்நிலை, அதற்கேற்பட்ட காலத்தின் தேவை ஆகும். அரசின் இந்த சாதகமான அறிவிப்புப் பற்றி வேறு விதமாகவும் சிந் திக்க வேண்டியுள்ளது.

ஜனாதிபதி இப்போது நாடாளுமன்றத் தில் பெரும்பான்மைப்பலம் அற்றவராக இருக்கிறார். விடுதலைப்புலிகளின் கோரிக் கைகளுக்கு இணங்குவதன் மூலம், அவர்க ளின் பிரதிநிதியாக நாடாளுமன்றம் சென் றுள்ள 22 தமிழ் எம்.பிக்களின் ஆதரவை ஜனாதிபதி எதிர்பார்க்கிறாரோ எனவும் எண்ணத் தோன்றுகிறது.

இது சாத்தியப்படுமாயின், அரசாங் கத்தை அடுத்த ஜனாதிபதித் தேர்தல் வரையா வது நடத்தலாம், வெளிநாடுகளிடம் நிதி வாங்கி தமது பிரதேசங்களை விருத்தி செய் யலாம் எனவும் எண்ணுகிறார் போல் தெரிகிறது.

எவ்வாறாயிருப்பினும், தமிழ்த்தரப்புக் கும் புதிதாக ஒரு நெருக்கடி இப்போது ஏற் பட்டிருக்கிறது. விடுதலைப்புலிகளின் அனைத்துக்கோரிக்கைகளுக்கும் ஜனாதி பதி இணங்கிவிட்டார். இனிப் பேச்சுக்கள் தொடங்கி யாக வேண்டும்.

பேச்சுக்களை தொடர்ந்து நடத்துவதற்கு அரசுதனது நாடாளுமன்றப் பலத்தைதொடர்ந்து தக்க வைக்க வேண்டும்.

### தமிழ்த் தரப்புக்களின் தலையாய கடமை

இதற்கு விரும்பினாலும், விரும்பாவிட் டாலும் தமிழ் எம்பிக்கள் இணங்கிச் செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் ஒன்று உள்ளது. அவ் வாறான நிர்ப்பந்த நிலைக்கு இணங்காவிட் டால், அரசின் சமாதான முயற்சிகளை தமிழ் தரப்பு எம்பிக்கள் விரும்பவில்லை என்று அரசு தரப்பு தென்னிலங்கைக்கும், வெளி நாடுகளுக்கும் தெரியப்படுத்தக்கூடிய வாய்ப் பும் இருக்கிறது.

இதேவேளை தமிழ் தரப்பும் அரசுக்கு ஆத ரவு தெரிவிப்பதற்கான நிபந்தனையாக, நோர்வே தரப்பின் மத்தியஸ்தத்துடன், இறு தித் தீர்வு வரை அரசை தொடர்ந்து நடத்திச் செல்லும் வகையிலான நிபந்தனைகளை ஒழுங்காக அரசுக்கு தெரியப்படுத்தி அதற் கான ஒப்புதலையும் வாங்கிக் கொண்டு ஜனாதிபதியின் நேர்த்தியான சமாதான முயற்சிகளுக்கு மட்டும் தமது ஆதரவைத தெரி விப்பதற்காக ஒரு சாதகமான நிலைமை உருவாக்கக் கூடிய வாய்ப்பும் தமிழ் தரப் புக்கு இருக்கிறது.

எவ்வாறெனினும், ஜனாதிபதியின் தரப்புக்கு ஏற்பட்டுள்ள இந்த நிலைமை விடுதலைப்புலிகளுக்கு சாதகமாக செல்கின்ற அதேவேளை எச்சரிக்கையுடனும் அவர் கள் தமது காரியங்களாக தொடரவேண்டியுள் ளது.

ஜனாதிபதி 18ஆம் திகதி நாடாளுமன் றக் கூட்டத் தொடரை இலக்கு வைத்து இந்த முயற்சிகளில் இறங்கியிருந்தாலும், நிலமை கள் தமிழ் தரப்புக்கே அதிகளவிலான சாத கமான சூழலை வெளிப்படுத்துகின்றன.

உண்மையில் ஜனாதிபதி தமிழ் எம்பிக் களின் ஆதரவை எதிர்பார்க்கின்றாராயின், தம்மிடம் சுமத்தப்பட்டுள்ள பாரிய பொறுப்பை தமிழ் எம்பிக்கள் உணர்ந்து கொண்டு தமிழ் மக்களின் சுயநிர்ணயத்தை நாடாளுமன்றத் தில் உறுதி செய்து கொள்வதற்கு திட சங் கற்பம் செய்து கொள்ள வேண்டிய சந்தர்ப் பம் இதுவென்றே கூறவேண்டும். அதனை தமிழ் தரப்பு சரியாக பயன்படுத்துமா?

-ரமேஷ்-

## பதவி வெற்றிடங்கள்

கொழும்பில் இருந்து வெளிவரும் பிரபல பத்திரிகை நிறுவனம் ஒன்றுக்கு பின்வரும் ஊழியர்கள் உடனடியாகத் தேவைப்படுகின்றனர்.

1) விநியோக உதவியாளர்கள் (Delivery Assistants)
மோட்டார் சைக்கிள் மூலம் கொழும்பிலும் கொழும்பின் சுற்றுப்புறங்களிலும்பத்திரிகை விநியோகிப்பதற்கு மோட்டார் சைக்கிள் அனுமதிப்பத்திரம் வைத்துள்ள 30 வயதுக்குட்பட்டவர்கள் தேவை.


2) வாகன/முச்சக்கரவண்டி சாரதிகள் (Vehicle / Auto Drivers)
நற்பழக்கவழக்கங்களுடைய 3 வருட அனுபவமுள்ள சாரதிகள் தேவை.

3) பத்திரிகை மடிக்கும்/பொதிசெய்யும் நபர்கள் (Folders / Packers)
நல்ல தேக ஆரோக்கிமுள்ள, சுறுசுறுப்பான நபர்கள் தேவை.

* தகுதியானவர்கள் இரவு/அதிகாலை வேளைகளில் வேலை செய்யக்கூடியவர்களாகவும் இருத்தல் வேண்டும்.
* மோட்டார் சைக்கிள், வாகன சாரதி அனுமதிப்பத்திரங்களுடனும், நற் சான்றுப் பத்திரங்களுடனும், கல்விச் சான்றிதழ்களுடனும் 17 அல்லது 18ஆம் திகதிகளில் கீழ்காணும் முகவரிக்கு காலை 10 மணிக்கும் மாலை 5 மணிக்கும் இடையில் நேரில் சமூகமளிக்கவும்.

இல. 85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
(மஹாவத்தை ரோட்)
கொழும்பு – 14.

# சிறைக் கம்பிகளின் பின்னால்....



கொடுங்கோலன், மனிதாபிமானம் அற்றவன், லட்சக்கணக்கானவர்களைக் கொன்று குவித்தவன், சர்வாதிகாரி, இவை எல்லாம் சதாம் ஹுசெய்னுக்கு அமெரிக்கர்கள் கொடுத்த அடைமொழிகள். சதாமின் கொடுமைகளில் இருந்து ஈராக்கிய மக்களை மீட்பதற்குத்தான் அந்த நாட்டின் மீது போர் தொடுத்ததாகக் கூடக் கூறினார்கள். இப்போது சதாமே கூட சிலவேளைகளில் அருவருத்துப் போகக் கூடிய கொடுமைகளை அமெரிக்கப் படைகள் ஈராக்கில் அரங்கேற்றி இருக்கின்றன.

நீண்டு பரந்து கிடக்கும் அபு கிராய்ப் சிறைச்சாலையின் உள்ளே அமேசன் காட்டு அனகொண்டாக்கள் தங்கள் தோலுரித்து சுயரூபம் காட்டியதில் உலகமே வியர்த்துப் போய்விட்டது. ஈராக்கியர்கள் பலர் வாழ்விழந்து போனார்கள்.

சதாம் ஆட்சிக் காலத்தில் இருந்தே புகழ்பெற்றது அபு கிராய்ப் சிறை. அந்தச் சிறைக் கம்பிகளும் சுவர்களும் கைதிகளின் இரத்த ருசி பார்த்திருக்கின்றன. அவர்களின் துன்பங்களைக் கதை கதையாய் அறிந்து வைத்திருக்கின்றன. அப்படியொரு ராசி அதற்கு. ஒரே நேரத்தில் 50 ஆயிரம் கைதிகளுக்கு மேல் இங்கு தடுத்து வைக்கலாம். இப்போது அமெரிக்கா வசம் இருக்கிறது அந்தச் சிறை. அங்கு நான்கு ஆயிரத்துக்கும் அதிகமான ஈராக்கியக் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள். பலர் கொடுமைப்படுத்தப்பட்டிருக்கிறார்கள்; சிலர் இறந்து போயிருக்கிறார்கள்; அவர்களில் பலர் அப்பாவிகள்.

சதாம் ஆட்சி வீழ்த்தப்பட்டு, சதாமே கைது செய்யப்பட்ட பின்னரும் கூட ஈராக்கில் அமெரிக்கப் படைகளுக்கு எதிரான தாக்குதல்கள் குறையவில்லை. விளைவு எல்லோர் மீதும் சந்தேகப்பட ஆரம்பித்தார்கள். ஈராக் மக்களை பாதுகாக்க வந்தவர்கள் தங்கள் பாதுகாப்புக்காக ஈராக்கியர்களைக் கைது செய்தார்கள். தங்கள் வசதிக்காக அவர்களை அமெரிக்க அதிகாரிகள் மூன்று வகையாகப் பிரித்தார்கள்.

இலங்கையைப் போன்றுதான் சந்தேகத்துக்கிடமானவர்கள் என்று அப்பாவிகளும் கைது செய்யப்பட்டனர். தேடுதல் நடவடிக்கைகளின் போது கைதானவர்கள் எல்லோரும் தீவிரவாத சந்தேக நபர்கள் ஆனார்கள். அவர்களில் பெரும்பாலானவர்கள் அபு கிராய்ப் சிறையில் அடைக்கப்பட்டார்கள். அங்குதான் அவர்களுக்குச் சனி பிடித்தது.

கைதிகளிடம் விசாரிக்கிறோம் என்று கூறி அமெரிக்கர்கள் மிருகத்தனமாக நடந்து கொண்டார்கள். அது தொடர்பான படங்களும் விபரங்களும் இப்போதுதான் வெளியாகி வருகின்றன. பார்க்க முடிந்ததும் சகித்துக் கொள்ளக் கூடியதுமான படங்கள் மட்டுமே வெளியிடப்பட்டுள்ளன. இன்னும் மோசமான - பார்த்தால் மேலும் அதிர்ந்து விடக் கூடிய - படங்கள் தன் வசம் இருக்கின்றன என்று அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் ரொனால்ட் ரம்ஸ்பீல்ட் தெரிவித்துள்ளார். அவை வெளிவரும் போது உலகம் இரத்தக் கண்ணீர் வடிக்கக் கூடும்.

### தாலிபான் கைதிகள்

ஆப்கான் மீது போர் தொடுத்த அமெரிக்கா அங்கு கைது செய்யப்பட்ட தலிபான் மற்றும் அல்கெய்டா தீவிரவாதிகளை கியூபா, குவாண்டனாமோ தளத்தில் அடைத்து வைத்துள்ளது. அவர்களை ஜெனிவா சட்டவிதிகளின் கீழ் நடத்த மாட்டோம் என்றும் அறிவித்து விட்டது.

அங்குள்ள கைதிகளை விசாரிக்க 20 வகையான வழிமுறைகளைப் பின்பற்றலாம் என்று அமெரிக்க அரசு அனுமதி வழங்கியுள்ளது. கடந்த ஆண்டு ஏப்ரலிலேயே இந்த அனுமதி வழங்கப்பட்டுவிட்டது என்கிறது 'வாஷிங்டன் போஸ்ட்' பத்திரிகை.

இதன்படி, உடைகள் ஏதுமற்ற நிலையில் கைதிகளை விசாரிக்கலாம். உடல் ரீதியாகவும் உளவியல் ரீதியாகவும் அவர்களைத் துன்புறுத்தி விசாரிக்கலாம். எனினும் இந்த வழிமுறைகளைப் பின்பற்ற முன்னர் பாதுகாப்பு தலைமையகமான பென்டகனில் அனுமதி பெறப்பட வேண்டும். இவ்வளவு கடுமையான விசாரணை அவசியம் என நிரூபிக்க வேண்டும். அனுமதி கிடைத்ததும் மருத்துவக் குழு ஒன்றின் கண்காணிப்புடன் விசாரணை நடத்தப்படலாம்.

இதனையெல்லாம் தாண்டி மிக மோசமான முறையில் ஈராக் கைதிகள் விசாரிக்கப்பட்டார்கள். நாய்களை விடக் கேவலமாக நடத்தப்பட்டார்கள். ஈராக் கைதிகளை விசாரிப்பதற்கு, ஜெனிவா சட்ட விதிகளை மீறிய சில நடவடிக்கைகளைப் பின்பற்ற முன்னரே அனுமதி வழங்கப்பட்டிருந்ததாக அதிகாரிகள் கூறுகின்றனர். இதன்படி ஒரு கைதியை 4 மணி நேரம் தொடர்ந்து நிற்கச் செய்யலாம். கைதி ஒருவர் தனியாக இருக்கும் பட்சத்தில் அவரை நிர்வாணமாக்கி விசாரிக்கலாம். ஆனால், மூக்குத் திரையிட்டு வைத்து மரணபயம் ஏற்படுத்தும் வழிமுறை கூடாது. அதே போன்று உடலைத் தொட்டுத் தாக்கக் கூடாது.

அதிகாரிகள் கூறும் இந்த நடைமுறைகள் எல்லாம் அபு கிராய்ப் சிறையில் பின்பற்றப்பட்டதற்கான அறிகுறிகள் எவையுமே இல்லை.

### சித்திரவதை

அங்கே கைதிகள், 'லோட்' செய்யப்பட்ட பிஸ்ரல்களைக் காட்டி மிரட்டப்பட்டார்கள். ஆடைகள் அனைத்தும் உரியப்பட்டு கை, கால்கள் கட்டப்பட்ட கைதியின் உடல் முழுவதும் ஐஸ் கட்டிகள் நிரப்பப்பட்ட பைகள் வைக்கப்பட்டன. குளிரில் உடம்பு விறைத்து மரத்துப் போகும் வரை இந்தச் சித்திரவதை தொடர்ந்தது. தும்புத் தடிகளாலும் கதிரைகளாலும் அரக்கத் தனமாகத் தாக்கப்பட்டார்கள்.

ஆண் கைதிகள் பாலியல் வல்லுறவுக்கு நிலைக்கு உட்படுத்தப்பட்டார்கள். பல்வேறு பாலுறவு நிலைகளில் வலுக்கட்டாயமாக கைதிகள் நிறுத்தப்பட்டு புகைப்படமெடுக்கப்பட்டார்கள். ஆடைகள் உரியப்பட்ட கைதிகள் ஒருவர் மீது ஒருவர் கோபுரம் போன்று அடுக்கப்பட்டார்கள். அவர்கள் மீது ஏறிப் பாய்ந்தார்கள்.

கட்டி வைக்கப்பட்ட கைதியின் முகம் பெண்களின் உள்ளாடைகள் கொண்டு மூடப்பட்டது. புகைப்படம் மற்றும் வீடியோப் படம் எடுப்பதற்காகத் தன்புணர்ச்சியில் ஈடுபடுமாறு ஆண் கைதிகள் வற்புறுத்தப்பட்டார்கள். கைதிகளைப் பயமுறுத்துவதற்கு இராணுவ நாய்கள் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. ஒரு கைதி நாய்களினால் கடிக்க வைக்கப்பட்டுள்ளார்.


இந்தச் சித்திரவதைகள் எல்லாம் வார்த்தைகளில் எழுதும் போது சாதாரணமானவைகளாகத் தெரியலாம். ஆனால், ஒவ்வொன்றும் அதிபயங்கரமானவை. புகைப்படங்களையும், வீடியோ படங்களையும் பார்க்கும் போது ஒவ்வொரு சித்திரவதையையும் அமெரிக்கர்கள் ரசித்து ருசித்துச் செய்திருக்கிறார்கள் என்றே தெரிகிறது.

### படம் பிடித்தனர்

சித்திரவதைகளைத் தங்கள் வசம் இருந்த டிஜிட்டல் கமெராக்களினாலும், வீடியோ கமெராக்களினாலும் படம்பிடித்தார்கள். அத்துடன் நின்று விடவில்லை. அவர்கள், தாங்கள் எடுத்த புகைப்படங்களையும் வீடியோக்களையும் அமெரிக்காவில் உள்ள தங்கள் உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் இன்டர்நெற் மூலம் அனுப்பி தங்கள் 'வீரப் பிரதாபங்களைப்' பறைசாற்றிக் கொண்டார்கள்.

இந்தக் கொடூரங்கள் வெளியே வரக் காரணமாய் அமைந்ததும் இந்தச் செயல்தான். சித்திரவதைகள் மட்டுமல்ல பெண் கைதிகள் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டும், சில கைதிகள் கொலை செய்யப்பட்டும் உள்ளார்கள் என்று தொண்டு நிறுவன அறிக்கைகள் கூறுகின்றன. விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதுவரை 6 இராணுவத்தினர் மீது குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன. அதிகாரிகள் எவரும் இதில் தொடர்புபடுத்தப்படவில்லை. வெற்றிகளுக்கு எல்லாம் உரிமை கோரும் தலைவர்களில் எவரும் இந்தச் சம்பவங்களுக்குப் பொறுப்பேற்கவில்லை என்பதுதான் மிகப் பெரிய சோகம்.

08 ஆம் பக்கம் பார்க்க....







## நாய்களைப் போல....

வேலையற்றிருக்கும் ஐந்து குழந்தைகளின் தந்தையான ஹைடர் ஷபார் அபெட், அமெரிக்கர்களால் மிகக் கீழ்த்தரமாகச் சித்திரவதை செய்யப்பட்ட கைதிகளில் ஒருவர். தனக்கு நேர்ந்த கொடுமைகள் குறித்து அவர் நேரில் விவரித்தவை இவை.

கார் (டாக்ஸி) ஒன்றை வாடகைக்கு அமர்த்திக் கொண்டு சென்ற நான் அதனை தாஜி முகாமின் பிரதான வாசலில் நிறுத்தினேன். அது அமெரிக்கப் படைகளின் கட்டுப்பாட்டில் இருந்தது.

என்னுடைய ஆவணங்களைப் பார்க்க வேண்டும் என்று அவர்கள் அதிகாரம் செய்தார்கள். ஆனால், என்னிடம் அப்படி எதுவும் இருக்கவில்லை. எனவே நான் உடனடியாகக் கைதுசெய்யப்பட்டேன். ஐந்தாவது மாவட்டத்திலுள்ள இராணுவத் தலைமையகத்துக்குக் கொண்டு செல்லப்பட்டேன். அங்கிருந்து விமான நிலைய தடுப்பு முகாமுக்கு மாற்றப்பட்டேன்.

அவர்கள் கேட்ட மிகச் சில கேள்விகளுக்கு நான் பதில் சொன்னேன். சில நாள்களில் விடுதலை செய்யப்பட்டு விடுவேன் என்றுதான் காத்திருந்தேன். ஆனால், மூன்று நாட்களாகியும் அது நடக்கவேயில்லை.

மூன்றாம் நாள் அதிகாலை 4 மணியளவில் அவர்கள் எனது கைதி இலக்கத்தை (13,077) பெரிய சத்தத்தில் கூப்பிட்டு வெளியே வா என்றார்கள். பின்னர் நான் பஸ்ராவில் உள்ள பெக்கா முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டேன். நீதி மன்றத்தின் முன் நிறுத்துவதற்காக என்னை அங்கு கொண்டு சென்றார்கள்.

நான் என்ன செய்தேன்? நான் ஒரு கிரிமினல் அல்லன். நான் 5 குழந்தைகளைப் பெற்றவன். அப்போது நான் எங்கே இருக்கிறேன் என்று கூட எனது குடும்பத்துக்குத் தெரியாது.

பின்னர் என்னை அபு கிராய்ப் சிறைக்குக் கொண்டு சென்றார்கள். அங்கே ஈராக்கியப் பணியாளர் ஒருவன் அமெரிக்கப் பெண் சிப்பாயுடன் உறவு வைத்துக் கொண்டதற்காக நான் அவனைத் தாக்கினேன். அதன் பின்னர் அவர்கள் என்னைச் சித்திரவதை செய்யத் தொடங்கினார்கள். அவ்வளவு; எங்களுக்கு மோசமான நேரம் ஆரம்பித்தது. நாங்கள் அவனைத் தாக்கினோம்.

எனவே அவர்கள் எங்களைச் சித்திரவதை செய்தார்கள். பிளேட்டுக்களால் எங்கள் உடைகளை வெட்டி எங்களைத் துகிலுரித்தார்கள். ஆடைகள் உருவப்பட்டு அம்மணமாக நாங்கள் நின்று கொண்டிருந்தோம். எங்களின் உள்ளாடைகள் (Under Wear) கூட வெட்டி எறியப்பட்டன.

பெண் சிப்பாய்கள் முன்பாகப் பலவற்றையும் செய்யுமாறு அவர்கள் உத்தரவிட்டார்கள்.

பெண் சிப்பாய்கள் நிற்கும் பக்கம் பார்த்தபடி எங்களைத் தன்புணர்ச்சியில் ஈடுபடுமாறு வற்புறுத்தினார்கள். ஆனால், அதற்கு நாங்கள் மறுத்துவிட்டோம். விளைவு மிக மோசமாக வாங்கிக் கட்டிக் கொண்டோம். அந்தச் சூழ்நிலையில் உங்களால் அந்தமாதிரிச் செய்ய முடியுமா? எனக்கு அதிர்ச்சியில் உடம்பெல்லாம் நடுக்கமெடுக்க ஆரம்பித்துவிட்டது.

பின்னர் அவர்கள் எனது தலையில் ஒரு பையை (bag) மாட்டி விட்டார்கள். நான் தன்புணர்ச்சியில் ஈடுபடுவதாக நடிக்கச் சொன்னார்கள். எங்களை நாய்களைப் போன்று நடத்தினார்கள். எங்கள் கழுத்துகளைச் சுற்றி நாய்களைக் கட்டும் தோல்வாரினால் கட்டினார்கள். நாய் போல் குரை என்றார்கள் நாங்கள் குரைத்துக் கொண்டிருக்க 'விசில்' அடித்தபடி ரசித்துக் கொண்டிருந்தார்கள் அவர்கள்.

எங்களை ஊர்ந்து நிற்கச் சொன்ன அவர்கள் ஒருவர் மீது ஒருவரைத் தாவச் சொல்லி சித்திரவதை செய்தார்கள், கொன்று விடப் போவதாக மிரட்டினார்கள்.

இறுதியில் தலையில் கவிழ்த்திருந்த பைகளை விலக்கினார்கள். எனக்கு ஒரேஆச்சரியம். என் நண்பர்கள் எல்லோரும் என்னைச் சுற்றி நின்று பார்த்துக் கொண்டிருந்தார்கள்.


அவர்கள் என்னைக் கடுமையாகத் தாக்கி எனது கீழ்த் தாடை எலும்பை உடைத்து விட்டார்கள்.

இப்போது என்னால் சரியாகச் சாப்பிடக்கூட முடிவதில்லை. பின்னர் அமெரிக்க புலனாய்வாளர் குழு ஒன்று வந்து எங்களை பார்வையிட்டது. என்ன நடந்தது என்று எங்களிடம் கேட்டார்கள். உண்மையில் என்ன நடந்தது என்று அவர்களிடம் நான் சொன்னேன். அதில் கொஞ்சத்தை மட்டும்தான் உங்களிடம் சொல்லி இருக்கிறேன்.

ஏப்ரல் 15 ஆம் திகதி நான் விடுவிக்கப்பட்டேன்.



சித்திரவதை



வெற்றிப் புன்னகையுடன்...



ஆத்திரப்படும் ஈராக்கியர்கள்



கழிவிரக்கம் கொள்ளுமா அமெரிக்கர்கள்

# மது மாரடைப்பை தடுக்குமா?

இலவச மருத்துவ ஆலோசனைகளை 'சுடர் ஒளி' மூலம் வழங்குகிறார் டாக்டர் எஸ். அருள்ராமலிங்கம்
நீங்கள் கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி
இலவச மருத்துவ ஆலோசனை
'சுடர் ஒளி'
85, ஜயந்தமல்லிமாராய்ச்சி மாவத்தை
கொழும்பு - 14

**கேள்வி:- ஆண். வயது 18. எனக்கு பிறந்ததிலிருந்து இதய வால்வு ஒன்று சரியாக வேலை செய்யவில்லை. சமீபத்தில் எனது பல் சூத்தைபட்டு பல் வைத்தியரிடம் பிடுங்கச் சென்றேன். அவர் எனக்கு இதய வால்வு பழுதாகி இருப்பதால் - டவுண் வைத்தியசாலையில் பல் டாக்டரிடம் போய் பிடுங்க வேண்டும். இல்லாவிடில் பாரிய இருதய நோய் வரும் என்று பயமுறுத்தித் திருப்பி அனுப்பிவிட்டார். பல் பிடுங்குவதற்கும் இதய நோய்க்கும் சம்பந்தம் உண்டா?**

பதில்:— உங்கள் டாக்டர் உங்கள் நன்மையைக் கருதித் தான் சகல வசதிகளும் கொண்ட பல் வைத்திய சாலையில் பல் பிடுங்க வேண்டும் என்று சொன்னார். இதய வால்வு கோளாறு உள்ளவர்களுக்கு பழுதான வால்வுகளில் தொற்றுக்கள் ஏற்பட பலமான சாத்தியம் உண்டு. பழுதான சொத்தைப்பற்கள் தொற்றுக்களின் குகை என்று சொல்லலாம். தொற்றுக்கிருமிகள் இங்கு மறைந்து வாழ்கின்றன.

உடலில் எதிர்ப்புச் சக்தி குறையும்போது இந்தக்கிருமிகள் நோய்களைத் தரும். தலைவலி, கணவலி, காதுவலிகளுக்கு சொத்தைப்பற்களில் குடியிருக்கும் தொற்றுக்களே காரணம். பற்களைப் பார்க்கும் போது இந்தத் தொற்றுக்கள் சிதறடிக்கப்பட்டு— இரத்தோட்டத்தில் கலந்து — எங்கு வசதியான சூழ்நிலை இருக்கின்றதோ அங்கு போய் தொற்றிக்கொள்ளும். பழுதான இதய வால்வுகள் உள்ளவர்களுக்கு இந்த வால்வுகளின் மேற்பரப்புகள் 'பசுமையான தரை' போன்றதாகிவிடுகின்றன. சொத்தைப் பல்லில் குடிகொண்டிருந்த தொற்றுகள் இந்த வால்வுகளில் தொற்றி BACT-ERIAL ENDOCARDITIS என்ற பயங்கரமான நோயைத் ஏற்படுத்துகின்றது.

இந்த நோயின் பயங்கரம் என்னவென்றால், வால்வுகளில் ஒட்டிக்கொண்டிருக்கின்ற தொற்றுக்கள் உடைந்து துண்டு , துண்டுகளாக இரத்தோட்டத்தில் மிதந்து சென்று மூளை இரத்தக்குழய்களை அடைத்து மூளையில் நோய்களை உண்டாக்கும். அல்லது சிறுநீரகத்தில் சீழ்கட்டிகளை உருவாக்கி— செயலிழக்கச் செய்யும். இந்த நிலை உங்களுக்கு ஏற்படாமலிருக்க — பல் பிடுங்கி முன்னர் —வீரியமான உயிர்கொல்லிகளை (ANTIBIOTICS) நோயாளிக்குக் கொடுத்து அதன் பின்னர் சொத்தைப்பல்லைப் பிடுங்கும்போது பலத்த சேதம் நடக்காமல் பார்த்துக்கொள்வது அவசியம். இதனால் தான் உங்கள் பல் டாக்டர் உங்கள் விஷயத்தில் மிகக் கவனம் எடுத்தார்.

**கேள்வி:— ஆண். வயது 30. சமீப காலமாக எனது வாய்க்கருகில் வெள்ளை நிறமாய் தெரிகிறது. அது போல் கை விரல் தோலும் வெண்மையடைகிறது. இதை வெண்குஷ்டம்- குணமாக்க முடியாது என்று பயமுறுத்துகிறார்கள். விவரம் தருக?**

பதில்:—இதனை VITILIGO என்று அழைப்பர். சிலருக்கு இது பரம்பரை பரம்பரையாக வரக்கூடியது. சருமத்துக்கு நிறத்தைத் தருகின்ற மெலொனோசையிட்ஸ் (MELANOCYTE) கலங்கள் ஏதோ ஒரு காரணத்தினால் அழிக்கப்பட்டு விடுவதால் இந்தக் கோளாறு உண்டாகிறது. இந்த வெண்மையான திட்டுகள் கைகளின் பின்னால், மணிக்கட்டு, முகம், கழுத்து, வாய், ஆண் உறுப்பு, மலவாசல் பகுதிகளில் தோன்றும்.

சில காலங்களின் பின்னர் தானாகவே — இத்திட்டுக்கள் தோலின் நிறத்தை மீண்டும் பெறும். அப்படி நடைபெறாவிட்டால் — மெலொணாசையிட் கலங்களைத் தூண்டுவதற்கு PSORALEN போன்ற மருந்துகள் உபயோகப்படுத்தப்படுகின்றன. என்றாலும், மருந்துகள் மூலம் குணமடைய பல ஆண்டுகள் கூட எடுக்கலாம். ஆனால், ஆயுர்வேத சிகிச்சை முறையில் விரைவாகவும், முற்றாகவும் குணமாக்கிய ஆராய்ச்சிக்கட்டுரை ஒன்றை சமீபத்தில் படித்தேன். இது பற்றிய மேலதிக விவரங்களை நாவின்ன ஆயுள்வேத வைத்திய சாலையில் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்.

**கேள்வி:— ஆண், வயது 48. நான் ஒரு கம்பெனியில் உயர்ந்த உத்தியோகத்தில் இருக்கின்றேன். எனது உத்தியோக தேவையின் நிமித்தம் அடிக்கடி பார்ட்டிகளில் கலந்து கொண்டு மது அருந்த நேரிடுகிறது. குடித்து, வெறித்து, விழுந்து கிடக்கும் விடாக்குடியன் நான் அல்லன். ஒரு குறிப்பிட்ட அளவில் தினசரி மது அருந்துவது உடலுக்கு நல்லது, மாரடைப்பு நோய் வருவதை தடுக்கும் என்று அடிக்கடி பத்திரிகைகளில் படித்திருக்கின்றேன். ஆனால், எனது மனைவியோ, இந்த கருத்துக்களுக்கு சரியான ஆதாரம் இல்லை என்கிறாள். உங்கள் அபிப்பிராயம் என்ன?**

பதில்:— உங்களைப் போன்றவர்களை SOCIAL DRINKERS என்று ஆங்கிலத்தில் கூறுவார்கள். என்ன பெயர் கொண்டு அழைத்தாலும் ரோஜா ரோஜா தான் என்பது போல — என்ன சாட்டுச் சொல்லி அருந்தினாலும் மது — உடலுக்கு கேடு விளைவிக்கின்றது. மதுவில் உள்ள — மது சாரம் என்ற ஈதைல் அல்கஹோல் — உடலில் மாறுதல் அடையும் போது அல்டிஹைட் (ALDEHYDE) என்றொரு இரசாயனப் பொருளும் உருவாகிறது. இது விஷத்தன்மை கொண்டது.



ஈரல் கலங்கள், மூளையில் உள்ள கலங்கள் என்பவற்றை அழிக்கும் தன்மை கொண்டது இந்த அல்டிகைட். மிதமாக மது அருந்துபவர்களுக்கும் உங்களைப் போன்ற அவ்வப்போது ஜொலிக்காக மது அருந்துபவர்களுக்கும் — இந்த விளைவுகள் உடனடியாக வெளியில் தெரியாவிட்டாலும் — நாளடைவில் இந்த அழிவுகள் — நோய்களைத் தரும்.

முழுக்குடியர்களுக்கு வரும் ஈரல் அழற்சி, ஈரல் அழிவு (CIRRHOSIS) போன்ற நோய்களால் ஏற்படும் மூளைக் கலங்களின் அழிவுகளால் மறதிக்குணம், குணநல பாதிப்புகள் போன்றவை சந்தோஷத்திற்கு குடிப்பவர்களுக்கும் வரலாம். மேலும் SOCIAL DRINKERS என்று ஆரம்பித்து முழுக்குடியர்களாக மதுவுக்கு அடிமையானவர்கள் (ALCOHOLICS) பலருண்டு

மதுவுக்கு சில மருத்துவகுணங்கள் உண்டு என்பது உண்மைதான். பசியின்மையை தீர்க்க –வயிற்றில் அமிலத்தை சுரக்கச் செய்தல், உள்ளத்தில் தெம்பூட்டுதல், மனோநிலையில் உற்சாகமளித்தல், பயங்களை போக்குதல், துணிவு தன்னம்பிக்கை ஏற்படவைத்தல், இரத்தக்குழாய்களை விரிவடைய வைத்து இரத்த ஓட்டத்தையும் அதிகரிக்கச் செய்தல் போன்றவையே அவை.

அதுமட்டுமன்றி, மாரடைப்பு நோய் ஏற்படக் காரணமான இதயக் குருதி சுற்றோட்ட நாடி நாளங்களை விரிவடைய வைப்பதால் — சிறிய தடைகள் இவற்றிலிருந்தாலும், இரத்தோட்டம் சீராக நடைபெற்று மாரடைப்பு ஏற்படுவதை குறைக்கிறது.

இதுபோன்ற நல்ல செயல்களை மது செய்தாலும் கூட்டிக்கழித்துப்பார்க்கும்போது மதுவால் ஏற்படும் தீமைகளே அதிகம். மேலும் உங்கள் மனைவி கூறுவதைப் போல் நன்மைகள் பற்றி சரியான மருத்துவ ஆதரங்கள் எதுவும் இல்லை. என்பதுதான் உண்மை.

**கேள்வி:— எனது மகன் பிறந்த காலத்திலிருந்து அவரது ஆண் உறுப்பின் சிறுநீர் துவாரம் விரிந்து மூடப்படாமல் இருக்கிறது. இதனால் சிறுநீர் கழிக்கும் போது சிறுநீர் வெளியேற்றம் சீராக நடைபெறுவது இல்லை. இது ஏன் ஏற்பட்டது இதற்கு சிகிச்சை உண்டா?**

பதில்:— உங்கள் மகனுக்கு உள்ளது ஒரு பிறவிக் கோளாறு. இதனை HYPOSPADIA என்று கூறுவர். சிறுநீர் குழாயில் ஏற்பட்ட பிழையினால் இது உருவானது. சிறுநீர் குழாயானது — சிறுநீர்ப் பையிலிருந்து சிறுநீரை வெளியே அகற்றுகிறது. HYPOSPADIA நிலைமையின் போது இந்த சிறுநீர்க்குழாய் வழமை போல் வளர்ச்சியடைந்திருப்பதில்லை. ஆண் உறுப்பின் முழு நீளத்திற்கும் சிறு நீர்க்குழாய் நீண்டிருப்பதில்லை. இதனால் ஆண் உறுப்பின் கீழ்ப்பகுதியில் சிறுநீர் துவாரம் அமைந்துவிடுகிறது.

இப்பொழுது — சிறுவர் சத்திர சிகிச்சை நிபுணர்கள் சத்திரசிகிச்சை மூலம் இதனை சரிப்படுத்துகின்றார்கள். இந்த சத்திர சிகிச்சை குழந்தையின் 6 – 9 மாதங்களில் நடைபெற வேண்டும்.

## சக்தி டி.வி. நிகழ்ச்சி நிரல்

| நேரம் | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி | ஞாயிறு |
|---|---|---|---|---|---|---|---|
| 6.30 | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | |
| 6.59 | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | நிகழ்ச்சி ஆரம்பம் |
| 7.00 | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி..வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | சக்தி செய்திகள் | அன்பு மடல் |
| 7.05 | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | அன்பு மடல்/பாடல்கள் 7.20 | காலைக்கதிர் |
| 7.30 | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | சங்கீதமேடை | காலைக்கதிர் |
| 8.00 | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்டி சுட்டி | ஒரு கதையின் கதை |
| 8.30 | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | கிட்ஸ் மூவி | சிறுவர் நேரம் |
| 9.00 | கோலங்கள் | கோலங்கள் | கோலங்கள் | கோலங்கள் | கோலங்கள் | குட்டி சுட்டி | ஸ்டார் சமையல் |
| 9.30 | கொமடி டைம் | கொமடி டைம் | கொமடி டைம் | கொமடி டைம் | கொமடி டைம் | குட்டி சுட்டி | அரட்டை அரங்கம் |
| 10.00 | பெப்சி உங்கள் சாய்ஸ் | தில்லானா தில்லானா | பாட்டுக்குப் பாட்டு | நம்மநேரம் | கொண்டாட்டம் | களம் | சப்த ஸ்வரங்கள் |
| 10.30 | நெஞ்சில் நின்ற ராகங்கள் | சுகமான ராகங்கள் | ஆட்டமும் பாடலும் | இனிய கீதங்கள் | இசைத் தென்றல் | திரைவானம் | டொப் 10 மூவி |
| 11.00 | மெட்டி ஒலி | மெட்டி ஒலி | மெட்டி ஒலி | மெட்டி ஒலி | மெட்டி ஒலி | மறக்க முடியுமா | கோல்டன் மொமன்ஸ் ஒப் கிரிகெட் |
| 11.30 | ஆனந்தம் | ஆனந்தம் | ஆனந்தம் | ஆனந்தம் | ஆனந்தம் | சினி சொய்ஸ் | சின்ன சின்ன ஆசைகள் |
| 12.00 | நட்சத்திரம் | சுப்பர் சீன்ஸ் | திரை விமர்சனம் | மீண்டும் சிரிப்பு | பிரபலன்கள் ரசித்தவை | ரிலாக்ஸ் டைம் | சின்ன சின்ன ஆசைகள் |
| 12.30 | செய்திகள் (எம்.ரீவி) | செய்திகள் (எம்.ரீவி) | செய்திகள் (எம்.ரீவி) | செய்திகள் (எம்.ரீவி) | செய்திகள் (எம்.ரீவி) | ரிலாக்ஸ் டைம் | ஸ்டார்ஸ்பெஷல் |
| 1.00 | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | வீக் என்ட் மேட்னி | கிரிக்கெட் நேரடி ஒளிபரப்பு |
| 1.30 | கிரிக்கெட் நேரடி ஒளிபரப்பு | கிரிக்கெட் நேரடி ஒளிபரப்பு | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | மங்கை | வீக் என்ட் மேட்னி | கிரிக்கெட் நேரடி ஒளிபரப்பு |
| 2.00 | கிரிக்கெட் நேரடி ஒளிபரப்பு | கிரிக்கெட் நேரடி ஒளிபரப்பு | (கொமடி) | (கிளசிக்) | மங்கை | வீக் என்ட் மேட்னி | கிரிக்கெட் நேரடி ஒளிபரப்பு |
| 2.30 | கிரிக்கெட் நேரடி ஒளிபரப்பு | கிரிக்கெட் நேரடி ஒளிபரப்பு | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | வீக் என்ட் மேட்னி | கிரிக்கெட் நேரடி ஒளிபரப்பு |
| 3.00 | கிரிக்கெட் நேரடி ஒளிபரப்பு | கிரிக்கெட் நேரடி ஒளிபரப்பு | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | வீக் என்ட் மேட்னி | கிரிக்கெட் நேரடி ஒளிபரப்பு |
| 3.30 | கிரிக்கெட் நேரடி ஒளிபரப்பு | கிரிக்கெட் நேரடி ஒளிபரப்பு | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | கிரிக்கெட் நேரடி ஒளிபரப்பு | கிரிக்கெட் நேரடி ஒளிபரப்பு |
| 4.00 | கிரிக்கெட் நேரடி ஒளிபரப்பு | கிரிக்கெட் நேரடி ஒளிபரப்பு | கில்லி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | விக்கிரமாதித்தன் | கிரிக்கெட் நேரடி ஒளிபரப்பு |
| 4.40 | 2ஆம் பகுதி | 2ஆம் பகுதி | தமிழ் கார்ட்டூன் | மலரும் மொட்டும் | சக்தி மேட்னி | விக்கிரமாதித்தன் | 2ஆம் பகுதி |
| 5.00 | கிரிக்கெட் நேரடி ஒளிபரப்பு | கிரிக்கெட் நேரடி ஒளிபரப்பு | ஸ்டார் ஸ்பெஷல் | சுப்பர் சீன்ஸ் | என்றும் கலாட்டா | கொமடி நிகழ்ச்சி | கிரிக்கெட் நேரடி ஒளிபரப்பு |
| 5.15–5.30 | கிரிக்கெட் நேரடி ஒளிபரப்பு | கிரிக்கெட் நேரடி ஒளிபரப்பு | இசைத் தென்றல் | இசைத் தென்றல் | இசைத் தென்றல் | இப்படிக்கு நீங்கள் | கிரிக்கெட் நேரடி ஒளிபரப்பு |
| 6.00 | கிரிக்கெட் நேரடி ஒளிபரப்பு | கிரிக்கெட் நேரடி ஒளிபரப்பு | ஒப்போடு | பாடல்கள் | கோல்டன் மொமன்ஸ் ஒப் கிரிகெட் | இப்படிக்கு நீங்கள் | கிரிக்கெட் நேரடி ஒளிபரப்பு |
| 6.30 | 3ஆம் பகுதி | 3ஆம் பகுதி | குங்குமம் | குங்குமம் | குங்குமம் | இப்படிக்கு நீங்கள் 6.40 | 3ஆம் பகுதி |
| 7.00 | கிரிக்கெட் நேரடி ஒளிபரப்பு | கிரிக்கெட் நேரடி ஒளிபரப்பு | காவ்யாஞ்சலி | காவ்யாஞ்சலி | காவ்யாஞ்சலி | அலையஸ் | கிரிக்கெட் நேரடி ஒளிபரப்பு |
| 7.30 | கிரிக்கெட் நேரடி ஒளிபரப்பு | கிரிக்கெட் நேரடி ஒளிபரப்பு | நீ நான் அவள் | நீ நான் அவள் | நீ நான் அவள் | சக்தி செய்திகள் | கிரிக்கெட் நேரடி ஒளிபரப்பு |
| 8.00 | கிரிக்கெட் நேரடி ஒளிபரப்பு | கிரிக்கெட் நேரடி ஒளிபரப்பு | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | கிரிக்கெட் நேரடி ஒளிபரப்பு |
| 8.30 | கிரிக்கெட் நேரடி ஒளிபரப்பு | கிரிக்கெட் நேரடி ஒளிபரப்பு | சித்தி | சித்தி | சித்தி | ருத்ர வீணை | கிரிக்கெட் நேரடி ஒளிபரப்பு |

# முஸ்லிம்களின் அபிலாஷைகளை தனித்தரப்பு பூர்த்தி செய்யுமா?

இடை நிறுத்தப்பட்ட சமாதானப் பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பிக்கப்பட உள்ளன. இதற்கான முயற்சிகளை நோர்வே மேற்கொண்டு வருகின்றது.

நோர்வே சமாதான அனுசரணைக்குழு ஜனாதிபதியை கடந்த 2 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அவரின் நுவரெலியா இல்லத்தில் சந்தித்துப் பேசிய பின்பு மறுநாள் புலிகளுடன் கிளிநொச்சியில் கலந்துரையாடியது.

முன்னைய ஒழுங்கில் இப்போதைய பேச்சுக்களும் அமைய வேண்டும். முன் நிபந்தனைகள் ஏதும் இருக்கக் கூடாது. விட்ட இடத்தில் இருந்து பேச்சுத் தொடர வேண்டும். பேச்சுக்களில் இடைக்கால தன்னாட்சி அதிகார சபை குறித்தே முதலில் ஆராயப்படவேண்டும். அந்த சபையை அமைக்கும் விடயத்தில் காலம் தாழ்த்தாது விரைவாக அதனை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என தமிழ்த் தேசிய கூட்டமைப்பு உறுப்பினர்கள் நோர்வே அனுசரணைக்குழுவிடம் நேரில் சந்தித்தும் வலியுறுத்தி இருந்தனர்.

## தனித்தரப்பாக முஸ்லிம்கள்

அதே வேளை நோர்வேயின் விசேஷ அனுசரணையாளர்களை முஸ்லிம் தரப்பும் சந்தித்தது. எரிக் சொல்ஹெய்ம் தலைமையிலான குழுவை முஸ்லிம் காங்கிரஸின் அரசியல் யாப்புக்குழு அதன் தலைவர் ஹக்கீமுடன் அவரது வீட்டில் சந்தித்தது.

அப்போது, முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், எதிர் கால சமாதானப் பேச்சுக்களில் முஸ்லிம்களின் நிலைப்பாடுகள் பற்றி நோர்வேக் குழுவுக்கு தெளிவாக விளக்கியிருந்தார். அத்தோடு , மூன்று விடயங்களையும் அவர் சுட்டிக் காட்டியிருந்தார்.

1.சமாதானப் பேச்சுக்களில் முஸ்லிம்களுக்கு தனித்தரப்பு வழங்கப்படவேண்டும். என்பது தொடர்பாக முன்னைய அரசு சாதகமான நிலைப்பாட்டைக் கொண்டிருந்தது.

2.ஏற்கனவே டோக்கியோவில் நடந்த உதவி வழங்கும் நாடுகள் கூட்டத்தின் பிரகடனத்திலும் அதுவே தெரிவிக்கப்பட்டது.

3. சமாதானப் பேச்சுக்களில் முஸ்லிம்களுக்குத்தனித்தரப்பு வழங்குவது தொடர்பாக கடந்த அரசின் காலத்தில் நாடாளுமன்றத்தில் இடம் பெற்ற ஒத்திவைப்பு விவாதத்தில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி சார்பில் பேசிய இப்போதைய வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், கோரியது போன்று முஸ்லிம்களுக்கான தனித்தரப்பு வழங்கப்பட வேண்டும்.



என்றாலும், முஸ்லிம்கள் தனித்தரப்பாக கலந்து கொள்வது பற்றி அரசாங்கமே முடிவு எடுக்க வேண்டும் என நோர்வே தூதுக்குழுவினர் ஹக்கீமிடம் தெரிவித்திருக்கின்றனர்.

சிறுபான்மையினரின் ஐக்கியம் இன்றைய அரசியல் சூழலில் அதிகம் உணரப்படுகிறது. இந்தப் பின்னணியில் தமிழ், முஸ்லிம் உறவு திருப்தி கரமானதாக அமையுமாயின் அது சமாதான முன்னெடுப்புக்களை விரைவு படுத்தும்.

## சிறுபான்மை ஐக்கியம்

இதனை மேலும் சாத்தியப்படுத்தும்முகமாக சிறுபான்மை எம்.பிக்களை ஒன்றிணைக்கும் முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் தமிழ் எம்.பிக்கள் அனைவரையும் ஒன்று சேர்த்து ஓர் அணியையும், அத்தோடு தமிழ் முஸ்லிம் எம். பிக்கள் சகலரையும் ஒன்று சேர்த்து வேறு ஓர் அணியையும் அமைப்பதற்கான ஏற்பாடுகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இதற்கு முன்னர் நடத்திய பேச்சுக்களின் போது முஸ்லிம் எம்.பிக்களை அவர்களுக்குள் ஐக்கியப்படுத்தும் முயற்சிகள் தோல்வி கண்ட அனுபவம் முஸ்லிம் அரசியல் சமூகத்திற்கு உண்டு.

இப்போதைய அமைச்சர் பௌஸியின் தலைமையில் நடந்த கூட்டங்களில் அப்போதைய எம்.பிக்களுள் சிலரும் பிரதி அமைச்சராக அப்போது இருந்த ஒருவரும் கலந்து கொள்ளாது தவிர்த்து வந்துள்ளனர்.

முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்களில் நான்கு பேர் கட்சியில் இருந்து பிரிந்து சென்று ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் இணைந்து அரசாங்கத்திற்கு ஆதரவு தெரிவிக்க இருப்பதாக செய்திகள் கசிந்திருந்தன.

சபாநாயகர் தெரிவின் போது இவர்களுள் ஒருவர் தனது வாக்கினை அரசாங்கத்திற்கு செலுத்தி இருக்க வேண்டும் என்ற சந்தேகம் இருந்தது. அதனை கட்சியின் செயலாளர் மறுத்திருந்தார்.

அதனை அடுத்து முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்களான ரிஷாத் பதியுத்தீன், நஜீப் எ.மஜீத், பைசல் காசிம், அமீர் சிஹாப்தீன் ஆகிய நான்கு பேரும் கட்சியை விட்டுப்பிரிந்து செல்வதாக வெளிவந்த செய்தியை மறுத்து அறிக்கை விடுத்திருந்தனர்.

எதிர்கால அரசியல் நகர்வுக்கும் முஸ்லிம் தரப்பு சமாதானப் பேச்சில் தனித்தரப்பாக கலந்து கொள்ள வேண்டும் என்ற குரலை வலுவாக ஒலிக்கச் செய்வதற்கும் முதலில் தனது எம்.பிக்களை அதன் கட்டுக்குள் வைத்துக் கொள்ள வேண்டும் என்கிறது முஸ்லிம் காங்கிரஸ்.

## மேலும் ஒரு தனிக் கட்சி

முஸ்லிம்களிடையே உள்ள கட்சிகளுக்கு மேலதிகமாக இன்னும் ஒரு கட்சியை ஆரம்பிப்பதற்கான முயற்சிகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம். எம். மயோன் முஸ்தபா இதற்கான தீவிரத்தைக் காட்டி வருகிறார்.

அதிக கட்சிகளின் வரவு ஏற்கனவே விழுந்த பிளவை மேலும் அதிகப்படுத்தவும் கூடும். மொத்தத்தில் முஸ்லிம்களிடம் உள்ள கொஞ்சநஞ்ச பலத்தையும் மலிவு படுத்தும் நடவடிக்கையாகவும் இது அமைந்து விடக் கூடும்.

முஸ்லிம் சமூகம் தற்போது அது எதிர் கொண்டுள்ள நெடுக்கடி நிலைமைகளைக் கவனத்தில் கொண்டு தமக்கிடையே நிலவும் கட்சி பேதங்களை மறந்து ஒன்றுபட்டு செயற்பட வேண்டும்.

மாறாக மேலும் மேலும் புதிய கட்சிகளை அமைத்துக் கொண்டு பெருந் தேசியக் கட்சிகளின் பின்னால், முஸ்லிம் சமூகம் பிரிந்து நின்று கொண்டு தமது முரண்பாடுகளை தீவிரப்படுத்திக் கொள்ளுமானால் முஸ்லிம் சமூகத்தின் எதிர்காலம் இதனால் மிகவும் மோசமான நிலைக்குள் தள்ளிவிடப்படலாம் என்பதை முஸ்லிம் தலைவர்கள் புரிந்து கொள்வார்கள்.

- கே. முனாஸ் -

# ராசி பலன்

**பொ. சந்திரன்**

**இவ்வார 'ராசிபலன்' 17–05–2004 – 23–05–2004**

**மேடம்: அச்சுவினி, பரணி, கார்த்திகை 1.**

ராசிநாதன் மூன்றில் இருப்பது அதாவது செவ்வாய் வலியன் ஆனால், ராகுவின் நட்சத்திரத்தில் இருப்பது நல்லதல்ல. (3, 6)உரிய புதன் ராசியில் இருப்பது பொதுவாக புதன் நல்ல கிரகம் அவனின் ஆதிபத்தியம் சரியில்லை. ராகுவும் ராசியில் இருப்பதால் எடுத்த முயற்சி தாமதமானாலும் நிறைவேறும் உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். (2, 7) உரிய சுக்கிரன் மூன்றில் இருப்பதால் கையில் பணம் இருக்காது. திருமண வாய்ப்பு பாதிக்கலாம். 7 இல் கேது இருப்பதால் குடும்ப அமைதி பாதிக்கலாம். நாலாம் வீடு சுத்தமாக இருப்பதால் வீடு, வாகனம் லாபம் தரும். பத்துக்குரிய சனி மூன்றில் இருப்பதால் தொழில் துறை முன்னேறும். பக்க உதவிகள் கிடைக்கும். குருவின் இருப்பு நல்லாயிருப்பதால் நல்ல பலனை எதிர்பார்க்கலாம்.

**இடபம்: கார்த்திகை 2,3,4. ரோகிணி, மிருகசீரிடம் 1,2.**

ராசிநாதன் இரண்டில் இருப்பது நல்லது. குறிப்பாக சுக்கிரனுக்கு இரண்டாம் இடம் விசேஷமானது. கையில் பணம் இருக்கும். ஆனால், ராகுவின் சாரத்தில் இருப்பது சரியில்லை. உடல் ஆரோக்கியம் உண்டு. எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். (2, 5) உரிய புதன் 12 இல் இருந்தாலும் 12 க்குரிய செவ்வாய் புதனுடன் பரிவர்த்தம் அடைவதால் நல்ல பலனைச் செய்யும். நாலுக்குரிய சூரியன் ராசியில் இருப்பதால் வீடு, வாகனம் லாபம் தரும். (7, 12) உரிய செவ்வாய் இரண்டில் இருப்பதால் திருமண பலன் உண்டு. குடும்பத்தில் அமைதி இருக்கும். பத்துக்குரிய சனி இரண்டில் இருப்பதால் தொழில்துறை முன்னேறும். இவ்விராசிக்கு சனியோககாரன்.

**மிதுனம்: மிருகசீரிடம்3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3.**

(1, 4) உரிய புதன் 11 இல் இருப்பது சிறப்பானது. மேலும் சுக்கிரனின் நட்சத்திரத்தில் இருப்பது நன்று. அத்துடன் செவ்வாய், புதன் பரிவர்த்தனம் விசேஷமானது. உடல் ஆரோக்கியம் உண்டு. எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். வீடு, வாகனம் லாபம் தரும். இரண்டாம் வீடு சுத்தமாக இருப்பதால் கையில் பணம் இருக்கும் (7, 10) உரிய குரு மூன்றில் இருப்பது தொழில் துறையில் பின்னடைவு வர வாய்ப்பு உண்டு. ராசியில் சனி இருப்பதால் மன அமைதி இருக்காது. மேலும் 7 ஆம் வீட்டைப் பார்ப்பதால் குடும்பத்தில் அமைதி இருக்காது. தொழில் ஸ்தானமான 10 ஆம் வீட்டை சனி பார்ப்பது சங்கடமான நிலைதான். குரு மூன்றில் இருப்பது நல்லதல்ல. சனி குருவைப் பார்ப்பதும் கூடாது.

**கடகம்: புனர்பூசம்4, பூசம், ஆயிலியம்.**

ராசிநாதன் சந்திரன் மேடம் முதல் மீனம் வரை அதாவது 10 ஆம், 11 ஆம், 12 ஆம் வீடுகளில் சஞ்சரிப்பதானது 10 ஆம், 11 ஆம் வீடுகளில் நல்ல பலனையும் 12 ஆம் வீட்டில் கெட்டபலனையும் தரக் கூடும். அதாவது வார ஆரம்பம் மற்றும் மத்திய காலத்தில் நல்ல பலனையும் வார இறுதியில் மத்திம பலனையும் செய்யும். இரண்டுக்குரிய சூரியன் 11 இல் இருப்பதால் கையில் பணம் இருக்கும். உங்கள் சொல்லுக்கு மதிப்பு இருக்கும். 4க்குரிய சுக்கிரன் 12 இல் மறைவதால் வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். (7, 8) உரிய சனி 12 இல் இருப்பதால் திருமண வாய்ப்பு பாதிக்கலாம். இருப்பினும் குரு இரண்டில் இருப்பதால் நல்ல பலனை எதிர்பார்க்கலாம். 10இக் குரிய செவ்வாய் 12 இல் இருப்பதால் தொழில்துறையில் லாபம் இருக்காது.

**சிங்கம்: மகம், பூரம், உத்தரம்1.**

ராசிக்குரிய சூரியன் 10 இல் இருப்பது சிறப்பானது. மேலும் தனது சொந்த நட்சத்திரத்தில் இருப்பதும் நல்லதே. உடல் ஆரோக்கியம் உண்டு. எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். (2, 11) உரிய புதன் 9 இல் இருப்பதால் கையில் பணம் இருக்கும். மூத்த சகோதரத்துக்கும் நல்லது. நண்பர்களுக்கும் நல்ல பலன் உண்டு. (4, 9) உரிய செவ்வாய் 11 இல் இருப்பதால் பெற்றோருக்கு நல்லது. வீடு, வாகனம் லாபம் தரும். அதிஷ்டம் உண்டு. (6, 7) உரிய சனி 11 இல் இருப்பதால் திருமணபலன் உண்டு, கடன் தீரும். எதிரிகள் நண்பராவர். ஆனால், ராசியில் குரு இருப்பது சங்கடகரமான நிலை. பத்துக்குரிய சுக்கிரன் 11 இல் இருப்பது தொழில் யோகம் உண்டு. ராகு, கேதுக்கள் எல்லாம் கிரகங்களையும் அடக்குவது நல்லதல்ல.

**இவ் வார கிரகநிலை**

| | | | |
|---|---|---|---|
| | புதன் ராகு | சூரியன் | செவ்வாய் சுக்கிரன் சனி |
| | செவ்வாய் திருவாதிரை ராகு<br>சுக்கிரன் திருவாதிரை ராகு<br>புதன் பரணி சுக்கிரன் | | |
| | குரு திருவாதிரை ராகு<br>சனி திருவாதிரை ராகு<br>சூரியன் கார்த்திகை சூரியன் | | குரு |
| | | கேது | |

சந்திரன் மகரம்முதல் மீனம்வரை

சூரியன் மேடம் முதல் இடபம் வரை

**கன்னி: உத்தரம்2,3,4. அத்தம், சித்திரை 1,2.**

(1, 10) உரிய புதன் எட்டில் ராகுவோடு இருப்பது நல்லதல்ல. ஆனால், சுக்கிரனின் நட்சத்திர சாரத்தில் இருப்பது நல்லது. உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். எடுத்த முயற்சி தடைப்படலாம். (2, 9) உரிய சுக்கிரன் 10 இல் இருப்பதால் கையில் பணம் இருக்கும். பிதாவுக்கு நல்லது. (4, 7) உரிய குரு 12 இல் மறைவது வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். திருமண வாய்ப்பு பாதிக்கலாம். 10இல் செவ்வாய், சுக்கிரன், சனி இருப்பது தொழில்துறைக்கு நல்லது. மேலும் செவ்வாய் புதன் பரிவர்த்தன யோகம் தொழில் முன்னேற்றத்துக்கு உதவும். ராகு கேதுக்களுக்குள் எல்லாக் கிரகமும் அடங்குவது அவ்வளவு நல்ல பலனைக் கொடுக்காது. 7 ஆம் வீட்டை சனி பார்ப்பதால் குடும்பத்தில் அமைதி இருக்காது.

**துலாம்: சித்திரை3,4 சுவாதி, விசாகம்1,2,3.**

ராசிநாதன் சுக்கிரன் 9 இல் இருப்பது மிகச் சிறப்பானது. ஆனால், ராகுவின் நட்சத்திரத்தில் இயங்குவது நல்லதல்ல. ராசியில் கேது இருப்பதும் ஒரு குறைதான். எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். உடல் ஆரோக்கியம் உண்டு. (2, 7) உரிய செவ்வாய் 9 இல் இருப்பதால் கையில் பணம் இருக்கும். திருமண வாய்ப்பு உண்டு. (3, 6) உரிய குரு 11 இல் இருப்பதால் சகோதரங்களுக்கு நல்ல பலன் உண்டு. கடன் தீரும். எதிரிகள் நண்பர்களாவர். (4, 5) உரிய சனி 9 இல் இருப்பதால் வீடு, வாகனம் லாபம் தரும். குழந்தைகளின் செயற்பாடு திருப்தி அளிக்கும். 10 ஆம் வீடு சுத்தமாக இருப்பதால் தொழில்துறை முன்னேறும். பக்க உதவிகள் கிடைக்கும்.

**விருச்சிகம்: அனுசம், கேட்டை**

ராசிக்குரிய செவ்வாய் 8 இல் இருப்பதால் எந்த நன்மையும் இருக்காது. மேலும் ராகுவின் நட்சத்திரத்தில் இயங்குவதும் கூடாது. உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். எடுத்த முயற்சி தடைப்படலாம். (2, 5) உரிய குரு 10 இல் இருப்பது விசேஷம். ஆனால், சிலர் 10இல் வியாழனை நல்லபலன் தராது என்றும் கூறுவர். கையில் பணம் இருக்கும். குழந்தைகள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். (3, 4) உரிய சனி 8 இல் இருப்பதால் வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். இளைய சகோதரத்துக்கும் கூடாது. (7, 12) உரிய சுக்கிரன் 8 இல் இருப்பதால் திருமண வாய்ப்பும் பாதிக்கலாம். குடும்பத்தில் அமைதி இருக்காது. 10க் குரிய சூரியன் 7 இல் இருப்பதால் தொழில்துறை முன்னேறும். பக்க உதவிகள் கிடைக்கும்.

**தனு: மூலம், பூராடம், உத்தராடம் 1.**

(1, 4) உரிய குரு 9 இல் இருப்பது பாக்கியம். ஆனால், ராகுவின் நட்சத்திர சாரத்தில் இருப்பது நல்லதல்ல. எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். உடல் ஆரோக்கியம் உண்டு. வீடு, வாகனம் லாபம் தரும். ராசியை குரு பார்ப்பது விசேஷமானது. (2, 3) உரிய சனி 7 இல் இருப்பது கையில் பணம் இருக்கும். சகோதரத்துக்கும் நல்லது. (7, 10) உரிய புதன் 5 இல் இருப்பது நல்லது. திருமண பலன் உண்டு. தொழில்துறை முன்னேறும். இருப்பினும் 7 இல் சனி இருப்பதால் குடும்பத்தில் அமைதி இருக்காது. சனியின் பார்வை குருவை, ராசியை 4 ஆம் வீட்டைப் பார்ப்பதால் அந்தந்த இடங்கள் நல்ல பலனை இழக்கக் கூடும். சுக்கிரன் ராசியைப் பார்ப்பது நல்லது.

**மகரம்: உத்தராடம்2,3,4,. திருவோணம், அவிட்டம்1,**

(1, 2) உரிய சனி 6 இல் இருப்பது விசேஷம். குறிப்பாக 6 ஆம் வீட்டுக்குரிய சனி வலியவன். ஆனால், ராகுவின் நட்சத்திர சாரத்தில் இருப்பது நல்லதல்ல. எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். கையில் பணம் இருக்கும். உடல் ஆரோக்கியம் இருக்கும். (4, 11) உரிய செவ்வாய் 6 இல் இருப்பது பரவாயில்லை. செவ்வாயும் 6 ஆம் வீட்டுக்கு வலியவன்தான். வீடு, வாகன லாபம் தரக்கூடும். 7 ஆம் வீடு சுத்தமாக இருப்பதால் திருமண வாய்ப்பு உண்டு. 10இக்குரிய சுக்கிரன் 6 ஆம் வீட்டில் இருப்பது தொழில்துறையில் பின்னடைவு வர வாய்ப்பு உண்டு. இது எல்லாவற்றிற்கும் மேலாக குரு 8 இல் வீட்டார் மறைவது எல்லா நல்ல பலன்களையும் கொடுக்கும் அல்லது அனுபவிக்க முடியாத நிலை தோன்றலாம்.

**கும்பம்: அவிட்டம் 3,4. சதயம், பூரட்டாதி 1,2,3.**

(1,12) உரிய சனி 5 இல் இருப்பது நல்லதல்ல. மேலும் ராகுவின் நட்சத்திரத்தில் இருப்பது சிறப்பல்ல. எடுத்த முயற்சி பாதிக்கலாம். உடல் ஆரோக்கியம் கெடலாம். ஆனால், குரு 7 இல் இருந்து ராசியைப் பார்ப்பதால் பலரில் மாறுதல் தெரியும். (2, 11) உரிய குரு 7 இல் இருப்பதால் கையில் பணம் இருக்கும். மூத்த சகோதரத்துக்கும் நல்லது. நண்பர்களுக்கும் நல்லது. (4, 9) உரிய சுக்கிரன் 5 இல் இருப்பதால் பெற்றோருக்கு நல்லது. வீடு, வாகனம் லாபம் தரும். அதிஷ்டம் உண்டு. ஆலய வழிபாடு அமையும். 7க்குரிய சூரியன் 4 இல் இருப்பதால் திருமண வாய்ப்பு உண்டு. 10க்குரிய செவ்வாய் 5 இல் இருப்பதால் தொழில்துறையில் மந்தகதி.

**மீனம்: பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி.**

(1, 10) உரிய குரு 6 இல் இருப்பதால் நல்ல பலனை எதிர்பார்க்க முடியாது. மேலும் ராகுவின் நட்சத்திரத்தில இருப் பது கூடாது. எடுத்த முயற்சி தடைப்படும். உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். (2,9) உரிய செவ்வாய் 4 இல் இருப்பதால் கையில் பணம் இருக்கும். பிதாவுக்கும் நல்லது (4, 7) உரிய புதன் இரண்டில் இருப்பதால் வீடு, வாகனம் லாபம் தரும். திருமண பலன் உண்டு. ஆனால், குரு சுகம் இல்லாததால் பலனில் மாறுதல் இருக்கும். 10 ஆம் வீட்டை சனி பார்ப்பதாலும், குரு 6 இல் இருப்பதாலும் தொழில் துறையில் பின்னடைவுவர வாய்ப்புண்டு. ஆனால், குரு, சுக்கிரன் ஆகிய கிரகங்கள் 10 ஆம் வீட்டைப் பார்ப்பது நல்லது.

# தீவிரவாதம் யார் வளர்க்கிறார்கள்?

கடந்த வாரம் தொலைக்காட்சி செய்தி அறிக்கைகளில் காட்டப்பட்ட இரு சம்பவங்கள் பற்றிய படங்கள் மனதில் திகிலூட்டும் அச்சத்தை ஏற்படுத்தின. மனிதன் எங்கே செல்கிறான்? மானிடத்தின் உயர் பண்புகள் விழுமியங்கள் என்னவாகின என்ற கேள்வியை எழுப்பின.

அவற்றில் ஒன்று ஈராக்கில் நடந்தது. மற்றொன்று பலஸ்தீனத்தில் இடம்பெற்றது. இரண்டுமே மனிதனாகப் பிறந்தவர்களால் ஏற்றுக் கொள்ளப்பட முடியாதவை.

குண்டுத்தாக்குதலில் உயிரழந்த இஸ்ரேலியப் படையினரின் உடல் பாகங்களையும் அவர்களது உடமைகளையும் பலஸ்தீனர்கள் கால்களால் உதைந்தும் அடித்தும் தங்கள் ஆத்திரத்தைத் தீர்த்துக் கொண்டதையும் அல்-குவைதா சந்தேக நபர்களால் அமெரிக்க ஒப்பந்தக்காரர் ஒருவர் காட்டுமிராண்டித்தனமாக கழுத்து அறுத்துக் கொல்லப்பட்டதையும் தொலைக்காட்சிகள் துலாம்பரமாகப் படம்பிடித்துக் காட்டன. தரமற்ற விடியோ நாடா வெளியீடாக இந்தக் காட்சி காட்டப்பட்டாலும் இரத்தத்தை உறைய வைத்த அந்தப் பயங்கரம் எப்போதுமே மறையப்போவதில்லை.

இந்த இரண்டு செயல்களுமே மனித குலத்துக்கு ஏற்புடையவை அல்லத்தான். அவை கண்டனத்துக்குரியவை. மறக்கப்பட்டு அழித்து விடப்பட வேண்டியவை. வன்முறையின் உச்ச வடிவத்தைக் கொண்டவை. சகிக்கக்கூட முடியாதவை.

ஆனால் ஏன் இப்படி எல்லாம் நடக்கின்றன. இத்தகைய படுபாதகங்களைச் செய்தவர்கள் உண்மையில் மனிதர்கள். அவர்கள் ஏன் இப்படிச் செய்தார்கள்? இத்தனை கொடூரமாக நடந்து கொள்ள எது அவர்களைத் தூண்டியது?

இவையெல்லாம் மனிதாபிமானமற்ற பயங்கரவாதம், தீவிரவாதம் என்று கூறி இவற்றை அவற்றைத் தடுக்க மீண்டும் வன்முறை வழிகளையே பின்பற்றும் அமெரிக்க வழிமுறை சரியா?

ஈராக்கில் அமெரிக்கர் கழுத்தை அறுத்துக் கொன்றவர்கள், அது அபு கிராய்ப் சிறையில் அமெரிக்கர்கள் புரிந்த அக்கிரமங்களுக்கான தங்கள் பதில் என்றார்கள். பழிக்குப் பழி.

தீவிரவாதத்துக்கு சதாம் ஆதரவு வழங்குகிறார். தீவிரவாதம் உலகப் பாதுகாப்புக்கே அச்சுறுத்தலாக இருக்கின்றது என்பது ஈராக் மீது அமெரிக்கா போர் தொடுக்கக் காரணமானவைகளுள் ஒன்று. தீவிரவாதத்துக்கு எதிரான போர் அதனைக் கட்டுப்படுத்துவதற்குப் பதில் மேலும் மேலும் வளர்த்துக்கொண்டே செல்கிறது. இதற்கு அமெரிக்கர்களின் நடைமுறையும் முக்கிய காரணம்.

வன்முறைக்குப் பதில் வன்முறை என்ற அமெரிக்காவின் நடவடிக்கை மீண்டும் அதே வடிவத்தில் திருப்பித் தாக்குகிறது. அமெரிக்கத் தீவிரவாதத்துக்கு எதிரான இஸ்லாமியத் தீவிரவாதம்.

ஒரு மனிதனை உயிருடன் துடிக்கத் துடிக்க கழுத்தை அறுத்துக் கொல்லத் தூண்டும் அளவுக்கு மன வக்கிரத்தை அவர்களுக்கு ஏற்படுத்தியது அமெரிக்கர்களின் செயல்களே. அப்படியானால் தீவிரவாதத்தை ஒடுக்குகின்றோம் என்று கூறிக்கொண்டு அதனை மேலும் மேலும் வளர்ப்பவர்கள் யார்?

பலஸ்தீனத்திலும் இதுவே தான் நடந்து. தங்கள் சொந்த இடத்தில் நிம்மதியாகத் தங்களை இருக்கவிடாத இஸ்ரேலியர்கள் மீது தீவிரவாதத் தாக்குதல்களை பலஸ்தீனர்கள் நடத்துகிறார்கள். பதிலுக்கு இஸ்ரேல் அப்பாவி மக்களைக் கொன்று குவிக்கிறது. விளைவு இறந்தவரின் சடலத்தில் தங்கள் ஆத்திரம் தணிக்கும் அளவுக்கு அங்கு தீவிரவாதம் வளர்க்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு முறை காஸாவுக்குள் நுழையும் போதும் தீவிரவாதத்தை ஒடுக்கப் போகின்றோம் என்றுதான் இஸ்ரேலியர்கள் சொல்கிறார்கள். ஆனால் தீவிரவாதம் வளர்கிறதே தவிரக் குறையவில்லை.

இஸ்ரேல் அமெரிக்காவின் செல்லப்பிள்ளை. இரு நாடுகளுமே தீவிரவாதம் விடயத்தில் ஒரே போக்கில் தான் செயல்படுகின்றன. இதுவரைக்கும் அவற்றின் வழிமுறைகள் தீவிரவாதத்தை அடக்குவதற்கு வழிவகுத்ததாகச் சான்றுகள் இல்லை. அது இன்னும் இன்னும் பயங்கரமாகத் தனது கோர முகத்தைக் காட்டி வருகின்றது. புதுப் புது வழிமுறைகளைக் கையாள்கிறது.

வன்முறைக்குப் பதில் வன்முறை என்ற இந்தப் போர் இப்போதைக்கு நின்றுவிடப் போவதில்லை. அது மேலும் மேலும் வளரும். மனித நாகரீகம் ஒரு புறம் வளர்ந்து வந்தாலும் மறுபுறத்தில் இந்தத் தீவிரவாதமும் வளரத்தான் போகின்றது.

உலகம் முழுவதும் தீவிரவாதத்தைக் கட்டுப்படுத்துகின்றேன் என்றுபுறப்பட்ட அமெரிக்காவும் பலஸ்தீனத்தில் தீவிரவாதத்த ஒடுக்குகின்றேன் என்று கூறித் திரியும் இஸ்ரேலும் உண்மையில் தீவிரவாதம் மேலும் மேலும் வளரவே உதவி செய்கின்றன.

தொடர்ந்தும் தீவிரவாதிகளை உருவாக்குவதன் மூலம் இந்த உலகை மேலும் ஆபத்துக்குள் தள்ளும் வேலையைத்தான் அமெரிக்காவும் அதன் கூட்டு நாடுகளும் செய்து வருகின்றன. அந்த வகையில் தீவிரவாதத்துக்கு நல்ல தீனிபோட்டு வளர்ப்பவை அந்த நாடுகள்தான்.



எங்களை வளர்ப்பவர்கள் நீங்கள்தான்... — பலஸ்தீன ஆயுததாரி

# சிறைக்கம்பிகளின் பின்னால்....

5 ஆம் பக்கத் தொடர்ச்சி...

ஜெனிவா விதிமுறைகள் தெரியாத, பயிற்றுவிக்கப்படாத படையினரே இந்தச் செயல்களில் ஈடுபட்டனர் என்று கூறி புஷ் தப்பிக்கப் பார்த்தார். ஆனால் உலகெங்கும் இருந்து எழுந்த கண்டனங்களை அடுத்து இந்தச் சம்பவங்களுக்காக மன்னிப்புக் கேட்டார் அவர். கூடவே அவரது சகா பிரிட்டிஷ் பிரதர் ரொனி பிளையரும் தனது படையினரும் ஈராக்கில் புரிந்த அட்டூழியங்களுக்காக மன்னிப்புக் கோரினார். இருந்தாலும் சில நாள்களின் முன்னர் பேசியபோது ஈராக்கில் சிறந்த சேவையாற்றும் (அது என்ன 'சேவை' என்பது கேள்விக்குரியது) அமெரிக்கப் படையினரைப் புகழ்ந்து பேசினார் புஷ்.

ஒரு புறத்தில் மன்னிப்பும் மறுபுறத்தில் பாராட்டும் என இரட்டை வேடம் போடும் அவரது தேர்தல் விளையாட்டில் அப்பாவி ஈராக்கியர்கள் தங்களை ஆகுதியாக்கிக் கொள்கிறார்கள். ஈராக் சம்பவங்களுக்குப் பொறுப்பேற்று பாதுகாப்புத்துறை அமைச்சர் ரொனால் ரம்ஸ்பீல்ட் பதவி விலக வேண்டும் என எதிர்க் கட்சிகள் கடும் அழுத்தம் கொடுத்து வருகின்ற போதும் அவருக்கு முழு ஆதரவு கொடுக்கிறார் புஷ். அவர் தனது பணியை சிறப்பாகவே செய்தார் என்று வேறு பாராட்டு.

இப்படி எந்தத் தலைவரும் இந்தக் குற்றச் செயல்களுக்குப் பொறுப்பேற்கவில்லை. கைதிகள் துன்புறுத்தப்பட்ட விடயம் ஊடகங்களில் விபரங்கள் வெளியானதும் இது அமெரிக்கர்களுக்கு உரிய செயல் இல்லை என்றார் புஷ். யாரோ சிலர் அத்துமீறி நடந்து கொண்டார்கள் என்பது போன்று அவரது கதை இருந்தது. அது அமெரிக்கர்களுக்கு உரிய செயல் அல்ல என்பதால்தானோ எந்த அமெரிக்கத் தலைவரும் இந்தக் கொடுமைகளுக்குப் பொறுப்பேற்கவில்லை?

நடந்த கொடுமைகளுக்கு சிலர் மீது பழியைப் போட்டுத் தப்பிக்கவும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈடு கொடுத்து விடயத்தை அடக்கிவிடவும் புஷ் நிர்வாகம் தெளிவான நடவடிக்கைகளை எடுத்துவிட்டது. ஆனால் இந்தச் செயல்களின் விளைவாக வளர ஆரம்பித்திருக்கும் பயங்கரவாதத்துக்கு யார் பதில் சொல்லப் போகிறார்கள். அமெரிக்கர்களை கழுத்தை அறுத்துக் கொல்லப்போவதாக அல்-குவைதா அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது. அமெரிக்கர் ஒருவரை அப்படிக் கொன்றும் உள்ளது. இத்தகைய பயங்கரவாதத்தின் வளர்ச்சிக்கும் யார் பொறுப்பு?

- அர்ச்சனா -

## சொற்சிலம்பம் போட்டி இல. 108

சொற்சிலம்பம் 108 போட்டிக்கான விடைகளை எழுதி அனுப்பி வைக்க வேண்டிய கடைசித் தினம் மே 24ஆம் திகதி ஆகும். விடைகள் மே 31ஆம் திகதி சுடர்ஒளியிலும், வெற்றிபெற்றவர்களின் பெயர்கள் ஜூன் 07ஆம் திகதி சுடர் ஒளியிலும் பிரசுரமாகும். சொற்சிலம்பம் போட்டி இல.106க்கான விடைகள் அருகே தரப்பட்டுள்ளன.

தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். தபாலட்டை கிடைக்காத பட்சத்தில் தபால் அட்டையின் அளவில் ஒரு கடுதாசி அட்டையை வெட்டி, அதில் கூப்பனை ஒட்டி அனுப்புங்கள். முதலாவது பரிசாக 250 ரூபாவும் இரண்டாவது பரிசாக 150 ரூபாவும் மூன்றாவது பரிசாக 100 ரூபாவும் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

அனுப்பவேண்டிய முகவரி:
'சுடர் ஒளி'
85, ஜெயந்த மல்லி மாராய்ச்சி மாவத்தை,
கொழும்பு - 14.

## சொற்சிலம்பம் போட்டி இல. 106

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 மு | 2 ந | லா | 3 வ | 4 து | ■ | 5 து | ணை |
| 6 து | வி | ■ | 7 ச | ய | ன | ம் | ■ |
| 8 மை | த் | 9 து | ன | ர் | ■ | 10 பி | 11 கு |
| ■ | 12 த | ரு | ம் | ■ | 13 ச | க் | கை |
| 14 வா | ல் | வு | ■ | 15 ம | ங் | கை | ■ |
| ல் | ■ | 16 ந | மு | க் | கு | ■ | 17 ம |
| 18 மீ | 19 த | ல் | ■ | க | ■ | 20 ச | க |
| 21 கி | ளை | ■ | 22 பு | ள் | ளி | மா | ன் |

## சொற்சிலம்பம் போட்டி இல. 108

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | 3 | ■ | 4 | 5 | 6 |
| | ■ | 7 | | | | | |
| 8 | 9 | | | ■ | 10 | | ■ |
| 11 | | | ■ | 12 | | ■ | 13 |
| ■ | | ■ | 14 | | ■ | 15 | |
| 16 | | 17 | | ■ | 18 | | |
| 19 | | | ■ | 20 | | | |
| 21 | | | | | | ■ | |

## சொற்சிலம்பம் போட்டி இல. 108

**இடமிருந்து வலம்**

1. ஒரு வகைப் பேரிகை/முரசு.
4. குருடன்.
7. இருட்டுவேளை வானத்தில் செய்யும் ஜாலம்.
8. இனிமை.
10. உரிய/பொருத்தமான.
11. சிறந்தது.
12. எமது/எங்களுடைய/எம்.
14. அரைவாசி.
15. முகத்தில் வயதுவர வரும்.
16. நன்மை செய்வோன்/ உதவி செய்வோன்.
18. ஒருவரின் பண்பு.
19. வாசம்.
20. ஆசை வை.
21. கூட்டவும் பெருக்கவும் உதவும்.

**மேலிருந்து கீழ்**

1. கெட்ட புத்தி.
2. ஓட்டை/துளை.
3. சவம்/சடலம்.
4. மடல்.
5. செல் நெறி.
6. பிரமி/ஆச்சரியப்படு/ நிடுக் காட்டம் அடை.
9. துளைக்கும் கருவி.
12. ஆறு.
13. தன்னை சுகம் செய்து எதிரிக்கு பேரழிவு தருபவன்.
14. கடையேழு வள்ளல்களுள் ஒருவன்.
15. காசு.
16. உங்களுடையது.
17. பால் சுரக்கும் பகுதி.
18. கண் தெரியாதவன்.
20. ரக.

## சொற்சிலம்பம் - 105 பரிசு பெறுவோர்.

1. திருமதி. பாலசரஸ்வதி தங்கவேலு,
U.3/3 அண்டர்சன் தொடர்மாடி,
கொழும்பு—05.
2. V.C.சோதிநாதன்,
பண்ணாகம்,
சுழிபுரம்.
3. திருமதி P.செல்வராணி,
மாவடி,
வட்டுக்கோட்டை.

### பாராட்டுப் பெறுவோர்

1. இ.ரதி,
542, வளநகர்,
மல்லாவி.
2. மா.செல்லத்துரை,
112, கிறீன் வீதி,
திருகோணமலை.
3. திருமதி. மலர் கனகசிங்கம்,
141, நாலாம் குறுக்கு வீதி,
யாழ்ப்பாணம்.
4. ஆர். சினோான் அஞ்சலா,
29/39 தர்மலோகமாவத்தை,
கண்டி.
5. செல்வி ஆர்.ராகிலா,
46, விதானவீதி,
கண்டிக்குளி.
6. திருமதி. கமலினி சிவநாதன்,
பெரும்பாக அஞ்சல் அத்தியட்சகர் காரியாலயம்
மட்டக்களப்பு.
7. திருமதி. ராஜினி புண்ணியமூர்த்தி,
இல.36, புகையிரத நிலைய வீதி,
மட்டக்களப்பு.
8. வ.ஆ.அதிருபசிங்கம்,
அம்மன் கோவிலடி,
வல்வெட்டித்துறை.
9. உ.உஷாணி,
வேரவில்,
பூநகரி.
10. திருமதி. ஏ.பாலசிங்கம்,
ஆலடி வீதி,
கோண்டாவில் கிழக்கு.

# இராட்சத உருவங்களை ஆட்டிப் படைக்கிறார்!



சினிமாப் படங்களில் இராட்சத உருவங்கள் தோன்றி பீதியை ஏற்படுத்துவதைக் கண்டு ஆச்சரியப்பட்டிருப்போம். இவை எல்லாம் நவீன கணினித் தொழில்நுட்பத்தின் உதவியுடன் மேற்கொள்ளப்படும் உத்திகள் ஆகும். இருப்பினும் இராட்சத உருவங்களை இயற்கையாக உருவாக்கி "அலியன் ராணி" எனும் திகில் படத்தை உருவாக்கியிருக்கிறார்கள். இராட்சத உருவங்களை மிக்கேல் வல்ஸ் எவ்வாறு ஆட்டிப்படைக்கிறார் என்பதை இந்தப் படத்தில் காணலாம்.

# காட்டுப் பூனைகளின் அபூர்வமான பிறப்பு



மசாலா மிக்ஸ்

சில அபூர்வமான உயிரினங்கள் உலகில் அருகி வருகின்றன. அந்த உயிரினங்களை மீண்டும் படிப்படியாக உருவாக்கி அவற்றின் இனப்பெருக்கத்தை அதிகரிக்க விஞ்ஞானிகள் முயன்று வருகிறார்கள். குளோனிங் முறையில் அத்தகைய உயிரினங்களைப் படைப்பதில் விஞ்ஞானிகள் வெற்றி கண்டிருக்கிறார்கள். அபூர்வமான இரு ஆபிரிக்கக் காட்டுப் பூனைகளை நியூஓர்லியன் விஞ்ஞானிகள் அபூர்வமான முறையில் பிறக்கவைத்திருக்கிறார்கள்.

# ஊனமுற்றவர்களுக்கு வழிகாட்டும் குரங்குகள்




மனிதக் குரங்கு இனத்தைச் சேர்ந்த சில குரங்குகள் புத்திக் கூர்மை மிக்கவை. அவற்றைப் பழக்கி எடுத்தால் மனிதர்களுக்கு உடல் ரீதியாகத் துணை புரியக் கூடிய சக்தியை அவை கொண்டிருக்கின்றன. அதிலும் உடல் ஊனமுற்ற மனிதர்களை ஆரத் தழுவி அவர்களுக்குத் தேவையான உதவிகளை வழங்கக் கூடிய வல்லமையும் அவற்றிற்கு இருக்கிறது. ஒரு குரங்கு தனது வல்லமையை மக்கள் கூட்டத்தில் விளக்கும் காட்சி இது.

# தமிழக மக்களுக்கு சோனியா கூறியது

இந்தியப் பொதுத் தேர்தலில் இறுதிக் கட்டமாக தமிழகத்தில் வாக்களிப்பு நடைபெற்றது. சோனியா காந்தி தமிழகத்தில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் ஆர்வத்துடன் கலந்து கொண்டார். சென்னையில் நடைபெற்ற தேர்தல் கூட்டத்தில் மின்சார விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட சோனியாவின் இந்தக் "கட் அவுட்" வைக்கப்பட்டிருந்தது. "என்னைப் பிரதமராக்குங்கள்" என்று சோனியா கேட்பது போல அல்லவா இந்தக் காட்சி இருக்கிறது.



# ரசிகர்களை மகிழவைத்த அழகிய குத்துக் கரணம்



அந்தர வெளியில் குத்துக் கரணம் அடித்து ரசிகர்களைக் கவர்ந்து இழுப்பதில் ரஷ்ய அழகிகள் மிகவும் துணிவு மிக்கவர்கள். மும்பையில் நடைபெறும் "எஸ்ஸெல் வேர்ல்ட் கண்காட்சியில் இந்த ரஷ்ய அழகி தோன்றி பிளாஸ்டிக் வளையங்களை இடுப்பில் வைத்து "ஹூலாஹூப்" ஆட்டம் ஆடினார். ரசிகர்களை மகிழவைப்பதற்காக அழகி பலதடவை குத்துக்கரணம் அடித்தார்.

# ஒளிந்திருக்கும் முகம் எது?



மே 03, சுடர் ஒளி மசாலா மிக்ஸ் பகுதியில் ஒளிந்திருந்த முகம் நடிகை வசுந்துராதாஸ். சரியான விடையைக் கண்டுபிடித்து எழுதி அனுப்பிய வாசகர்களில் ஐந்து அதிஷ்டசாலிகளின் பெயர், விவரம் வருமாறு:

1. மு.சிவநிதி, தபாலக வீதி, கோப்பாய். 2. மு. கயல்விழி, பாரதி வீதி, கோண்டாவில். 3. வி.தயாபரன், ஐயனார் கோவிலடி, மட்டக்களப்பு. 4. வி.கவிப்பிரியா, கனகம்புளியடி றோட், சங்கத்தானை. 5.மு.நிலாந்தி, ஹற்றன்.

சரியான விடையைக் கண்டுபிடித்து எழுதி அனுப்பிய வாசகர்கள் அனைவருக்கும் பாராட்டுக்கள். அதிர்ஷ்டசாலிகளுக்கு எமது வாழ்த்துக்கள்.

இந்தவாரம் ஒளிந்திருக்கும் இந்த உருவம் யாருடையது?

இவர் இங்கிலாந்து நாட்டின் இளவரசி ஒருவருடைய பெயருடன் அறிமுகமாகி, ஒரு சில படங்களில் மட்டும் நடித்த நடிகை.



இந்த முகத்திற்குரிய நடிகையைக் கண்டுபிடித்து, அவர் பெயரைத் தபால் அட்டையில் எழுதி பின்வரும் எங்கள் புதிய முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

'சுடர் ஒளி'
85, ஜெயந்த மல்லி மாராச்சி மாவத்தை,
கொழும்பு - 14.

# கவிதைப் பூனல்

## என் இறுதிப் பொழுதுகளில்...

வசந்த காலப்
பொழுதுகளில்
வந்து இணைந்தேன்
உங்களுடன்
இந்தச் சூழலே
எதிரியானதால்
தொடர்ந்து என்னால்
வரமுடியவில்லை.
இனி
என்றாவது
எங்காவது
சந்திக்க நேர்ந்தால்
சந்திப்போம்
அதுவரை
சிந்தையுடன்–எம்
சொந்தங்கள்
நிலைத்திருக்கும்.
புரிந்தவர்களுக்கு
நான் யாரென்று தெரியும்.
புரியாதவர்களுக்கு
நான் புதிர்.
இன்றுவரை உங்களுடன்
இன்பமாய் இருந்தது போல்
என்றுமே நான்
இன்பமாய் இருந்ததில்லை.
இன்பங்கள் கூட
என்னை இம்சிக்க
நினைக்கையில்
இணைந்திருப்பது
இணையில்லையே!
ஆனால்
பிரிந்து செல்கிறேன்
உங்கள் நினைவுகளுடன்
மீண்டும் ஒரு
பருவ காலத்தில்
பயிர்களாய்
முளைபெறாவிட்டாலும்
களைகளாய் முளைத்தாவது
உங்களை சந்திக்கிறேன்
இந்தப் பூமியில்
வீசும் தென்றலாய்
உங்களுடன் வாசம்
வீசாவிட்டாலும்
புகையாய் வந்தாவது
சந்திக்கிறேன்
எங்கோ...
எப்போதோ
அருகில் இல்லாவிட்டாலும்
தொலைவில் நின்றாவது
உங்களைச் சந்திக்கிறேன்.

*ரீ.றமேஸ்,*
*வட்டக்கச்சி.*

## உன் நினைவுகள்

நினைவுகளின்
இரைமீட்டலில்
உன் நினைப்புக்கள்
மறக்கவும்
முடியாமல்
மெல்லவும்
முடியாமல்
நான் தவிக்கிறேன்.
நிஜமாக
இருந்த என்னை
நிழலாக
மாற்றி விட்டாய்.
உன்
நினைவுகளை
அழிப்பதற்காக
கண்களை
மூடுகிறேன்.
ஓ...
கனவிலும் உன்
நினைவுகள்
கண்ணீரால் கண்களை
கோபிக்க முடியவில்லை...
உன் நினைவுகளால்
உன்னை மறக்க
முடியவில்லை.

*தி.தனுஷியா,*
*சாவகச்சேரி.*

## காதல்

காதல் என்பதை
சிறு நொடியில்
சொல்லித் தந்தவனே
அதே போல்
காதலை
சில நொடியில்
கலைத்துவிட்டவனே
எங்கே
சென்றுவிட்டாய்?
காதலெனும்
தீயினை
கண்ணிலே
மூட்டிவிட்டு
மறந்துசென்றவனே
காலமதில் நாம்
இருவரும்
கைகோத்து
நிற்போமென
எண்ணியிருந்தேன்.
ஆனால் – நீயோ
அதற்குள்
மறந்துவிட்டாயே!
ஆனால்
இன்றோ
நாளையோ
நிச்சயம் வரும்
மரணம்.
என் ஆத்மாவைக்
காவிச் செல்ல
அன்று வெற்றுடலாய்
நான் கிடக்க
சூழ்ந்திடும்
சொந்தங்களை
பாராமலே
போய்விடுவேன்.
மரணமே வா
என் ஆத்மாவை
காவிச் செல்.

*கல்பனா*
*வள்ளிபுனம்.*

## மரணம்

உன்னோடு
கழியும் என்
இனிய பொழுதுகள்
ஒவ்வொன்றும்
பசுமையாய்
மனதில் ...
இருந்தும்–நீ
பச்சோந்தியாய்
அடிக்கடி
நிறம் மாறி
கொள்கையில்
மட்டும்
ஏனோ –என்
மனது
அடிக்கடி
மரணிக்க
பார்க்கிறது.
அதனால்...நீ
மாறாதே–என்னை
மரணிக்க வைக்காதே!

*நிலா,*
*கொழும்பு.*

## பெற்றுக்கொண்டாய்

ஒளியைப்
பெறுவதற்கு
இருளை
இழக்க வேண்டும்.
பகலைப்
பெறுவதற்கு
இரவை
இழக்க வேண்டும்.
பௌர்ணமியை
பெறுவதற்கு
அமாவாசையை
இழக்க வேண்டும்.
ஆகையால்– நான்
உன்னைப்
பெறுவதற்கு
என்னையே
இழந்தேன்
ஆனால்– நீ
உன்னை
இழந்து
இன்னொருவனை
பெற்றுக்கொண்டாய்!

*பெ. டென்சன் றோய்,*
*பெரியவிளான்.*

## வேண்டுகோள்

என் ஊமை
விழிகளில்
ஊஞ்சலாடிக்கொண்டு
என்னை
ஊனமாக்கி
கொண்டிருக்கிறாய்
நீ என்னை
மட்டும்
உறங்கவிடாமல்
ஏன்
உண்மையை
சொல்லிவிடு
உன் இதயத்தில்
நான்
மௌனத்தால்
மரணித்து
கொண்டிருக்கிறேன்
முடிவு தெரியாமல்...

*கி.டிஷானி,*
*குருநகர்.*

## என் பதில்

எதிர்வீட்டு
யன்னலால்
எட்டியெட்டி
எனைப்பார்த்து
காதல் தேடும்
குட்டிப் பெண்ணே
ஏற்கனவே
இழந்துவிட்டேன்
ஒரு பெண்ணால்
மீண்டும்
எதற்காகத் தேடுகிறாய்
கேடுகெட்ட காதலை

*க.சிவானந்தம்,*
*ஈச்சிலம்பற்று.*

## காதல் பிரிவு

இரண்டு இதயங்கள்
இடையே
இடையில் இடப்பட்ட
பெருஞ்சுவர்.

## கடிகாரம்

மனித வாழ்வின்
அர்த்தத்தையும்
அனர்த்தத்தையும்
வேகத்தோடு
காட்டும்
விசேட கருவி.

## தாலி

நீ எனக்கு
அடிமை என்று
எஜமான்
கட்டிய பாசக்கயிறு.

## புத்தகம்

என்னைப்படித்து
என்னையே
எழுதுகிறான் மனிதன்.

*க.கஜி,*
*சண்டிலிப்பாய்.*

தூது செல்
மனதில் இருப்பவன்
நீயென்று
மரிக்காமல்
தவிக்கிறது
என் இதயம்.
மறக்க
முடியவில்லை
உன்னை
நினைவில்
மலர்கிறாய்
நிஜமாய்
தொடர முயல்கிறேன்.
உறவை
வெளிப்படுத்த
முயல்கிறேன்.
விரைவாய் அனுப்புகிறேன்.
பதிலை
தூதாய் கேட்கிறேன்

*எம்.ஷிவா.*

நீங்காத நினைவுகள்
சிட்டாய் சிறகடித்து
சில்லென்று ஒளிவீச
சீரியதாய் வாழ்ந்திட்ட
சிறப்பெனும்
கல்லூரி வாழ்வில்
ஓருயிர் ஈருயிராய்
ஒன்றாய் சேர்ந்து
ஒருமித்து சாப்பிட்டும்
ஓரக்கண்ணால்
கதை பேசியும்
உயிருக்குயிராய்
நேசித்தும்
உடைனதமாய் ஆடியும்
குதூகலமாய்
குரல் இசைத்தும்
குன்று போல்
உயர்ந்த வாழ்வில்
பிரிவெனும்
துயர் ஊற்றாய்
பெருக்கெடுக்க
பிரியமாய் பிரிந்தும்
எம்மை விட்டு அகலாது
என்றும் நிலைத்திருக்கும்

*ப.மீரா, சாவகச்சேரி.*

## பழகிய நாட்கள்

சொல்லாத காதலில்
சுகமதிகம் என்று
யாரெனக்கு
சொன்னார்கள்
அதனால் தான்
பிரியமான தோழனுக்கு
ஏன் கடிதம்
எழுதுகிறாய்?
படிக்கப்பிடிக்கவில்லை.
மடித்து
வைத்துவிட்டேன்
மனதை அல்ல
உன் கடிதத்தை.
புரிந்துகொண்டு
பழகிவிட்டு
பிரிந்து செல்ல –இது
சினிமா அல்ல
நிஜம்.
உன்னைத் தாரமாக
நினைத்துத்தான்
தாராளமாக
பழகினேனே தவிர
இன்னொருவனுக்கு
தாரை வார்த்து
கொடுப்பதற்கு அல்ல.
நீ கொடுத்த
கைக்குட்டை
இப்போது தான்
துவைத்து
உலர வைத்தேன்.
உலர்ந்துவிட்டது.
நீ கொடுத்த
காதல் ஞாபகங்கள்
மட்டும்
ஈரமாகவே இன்றும்
இருக்கிறது.
அன்று–என்
சாலை இடறிய
கல்லை
முறைத்துப்பார்த்தாயே
இன்று நீ
என் நெஞ்சில்
எறியும் ஒவ்வொரு
கல்லையும்
எடுத்து
பத்திரப்படுத்துகின்றேன்
என் கல்லறைக்காய்!

*ப.வினோதன்,*
*குமுளமுனை.*

காலமெல்லாம்
காத்திருப்பேன்
ஒவ்வொரு
விடியலும்
உனது பதிலுக்காய்
விடிகிறது.
ஒவ்வொரு
சூரியோதயத்திலும்
உன்னைப்
பார்த்துக்கொண்டே
உன்னோடு
ஒன்றாகவும்
என்று
தவிப்புடனும்
ஒவ்வொரு
சந்திரோதயத்திலும்
உன்னை
விட்டுப்பிரிகிறேன்
என்ற பயத்துடனும்
செல்கிறேன்.
உனது பதிலுக்காக
எப்போதும்
காத்திருப்பேன்
உயிரே உனக்கு
அது தெரியாதா?

*எஸ். சாவித்திரி,*
*விசுவமடு.*

## பிரிவின் வேதனை

பிரியமானவனே
தெருவோரங்களில்
பல முகங்கள்
தென்பட்டபோதும்
நான் தேடுவது
உன் முகம்.
அன்பானவனே
உன் முகம்
தேடிய எனக்கு
ஏமாற்றம் தான்.
உன்னைப் போல
பல நபர்கள்.
ஏமாந்தது
நான் மட்டுமல்ல
என்
இதயமும் தான்
உன் நினைவால்
நடேடலில்
அழுதால்
பலருக்கு
தெரியும் என்று
இரவுகளில் என்
கண்களுக்கே
தெரியாது
அழுகிறேன்.
என் கண்ணீரைக் கண்டு
ஆறுதல் கூற
வழியின்றி
தவித்த தலையணை
கூறும் என்
உள்ளத்தின்
குமுறலை
பகலில் தோன்றும்
என்
போலியான
சிரிப்புக்கு
பின்னால் இருப்பது
என் உள்ளக்குமுறல்!

*சி.கிரிஷா.*

# பித்தன் பதில்கள்

***இ.கேஜினி — மன்னார்.***

**கேள்வி:—** ஆண்களில் இராமன்களே இல்லையா பித்தா?



**பதில் :—** பெண்கள் எல்லோரும் சீதைகளாக இருந்தால் — ஆண்கள் எல்லோரும் இராமர்களாக இருப்பார்கள்

***அ.வரதன் — மாதகல்***

**கேள்வி:—** பேயை கண்டிருக்கிறீரா?

**பதில்:—** ...... பூ ..... குடித்தனமே நடத்துகிறேன்.

***சி.சிவமயூரன் — மட்டக்களப்பு***

**கேள்வி:—** பித்தா! கருணா தனது வேலையை காட்டத் தொடங்கிவிட்டார் போல் தெரிகிறதே?

**பதில்:—** கருணா பெரிய ஒரு துருப்புச் சீட்டு என்று அவரை வைத்துக்கொண்டு துள்ளாட்டாம் போட்டவர்களுக்கு இப்போ விளங்கிவிட்டது — அவர் துரும்பு அல்ல "ஜோக்கர்" என்று. ஏதோ விழுந்தவன் மீசையில் மண் ஒட்டவில்லை என்பதுபோல கருணா இன்னமும் சீறிப்பாயும் பாம்பு எனக்காட்ட செய்யும் தகுடுதத்தம் தான் அவை.

***கே.பிரசாந்தன் — இளமருதங்குளம்.***

**கேள்வி:—** பித்தா! "ராகிங்"கை கண்டு பிடித்தது யார்?

**பதில்:—** ஏதோ ஒரு துணுக்கிலே வாசித்த ஞாபகம். ராகிங்கை நாய்கள் தான் முதலில் உலகுக்கு அறிமுகப்படுத்தியவை என்று நகைச்சுவையாக எழுதியிருந்தார்கள். உண்மையாகவும் இருக்குமோ தெரியவில்லை. ஏனென்றால் நாய்களைப் பாருங்கள், வேறிடத்தில் இருந்து தம்மிடத்துக்கு புதிதாக வரும் நாயை முதலில் அந்த இடத்து நாய்களெல்லாம் சேர்ந்து கடித்துக் குதறிவிடும். பின்னர் கொஞ்சம் கொஞ்சமாக தம்மோடு சேர்த்துக்கொள்ளும்.

பித்தன்மீது பித்துக் கொண்ட வாசகர்களுக்கு:—

நீங்கள் கேட்கும் கேள்விகளுக்கு பித்தன் பதில் தருவார். பித்தன் தரும் கேள்விக்கு நீங்களும் பதில் அளியுங்கள்.

ஐந்து தரமான — குறும்பான — யதார்த்தமான — பதில்கள் பிரசுரிக்கப்படும். பதில்களை மே23 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்க வேண்டும்.



**கேள்வி:—** திருமணம் செய்யும் பெண்கள் சிலர் திருமணத்தின் பின்னர் ஏன் பேயாகின்றார்கள்?

**பதில்:—** வெளிநாட்டு வரனை எதிர்பார்த்து காத்திருந்துவிட்டு இலங்கையரை மணம் முடிப்பர். அதனால் பேயாகின்றனர்

இந்தக் கேள்விக்கு பித்தன் அளித்த பதில் மேலே. நீங்கள் பதில் அனுப்ப வேண்டிய முகவரி.

பித்தனுக்கு எங்கள் பதில்கள்,
சுடர்ஒளி வார இதழ்,
85, ஜெயந்தமல்லிமாராய்ச்சி வீதி,
கொழும்பு — 14.

***எஸ்.சிவரூபன் — அல்வாய்***

**கேள்வி:—** பித்தா! வெளிநாட்டிலிருந்து வந்த மொட்டைத்தலையுடைய வயது போனவர்கள் எல்லாம் — அழகான பெண்களை திருமணம்செய்து கொண்டு போகிறார்களே. உமக்கு வயிற்றைப்பற்றி எரியவில்லையா?

**பதில்:—** எரிகிறதுதான். என்ன செய்ய? — பல்லில்லாதவர்கள் புளுக்கொடியல் தின்னக் கூடாது என்று சட்டம் இருக்கிறதா என்ன? அவர்களுக்கு மச்சம் இருக்கிறது அது வேலை செய்கிறது எமக்கு...ம் ...ம் ...ம்



***சு.தயா — மட்டுவில்***

**கேள்வி:—** உரசிப் பார்த்து தங்கம் எடுக்கிறோம் — அமுக்கிப் பார்த்து கத்தரிக்காய் எடுக்கிறோம் — முறித்துப்பார்த்து வெண்டிக்காய் எடுக்கிறோம் — போட்டுப்பார்த்து செருப்பு எடுக்கிறோம். இதேபோல் குலுக்கி, சுண்டி, நசித்து பார்த்து தான் பல பொருட்களையும் எடுக்கின்றோம். ஆனால், திருமணத்தில் அப்படி எதுவும் செய்யாமலே பெண் எடுக்கிறோம் ஏன்?

**பதில்:—** யோவ்..... நீர்பாட்டுக்கு வந்து பெண்ணைப் பிடித்து உரசி, அமுக்கி, முறித்து, குலுக்கி, குறுக்கி, சுண்டி, நசித்து, தட்டி — அழுத்தி, உருட்டி — புரட்டிப் பார்த்து விட்டு — இது சரியில்லை என்று விட்டு விட்டுப்போனால் — அடுத்து வருபவருக்கு என்னய்யா மிஞ்சப்போகிறது?

***து.பாஸ்கரன் — வல்வெட்டி***

**கேள்வி:—** இந்தவார ஜோக் என்ன பித்தா?

**பதில்:—** ஒரு தமிழன் — சிங்களச் சகோதரன் ஒருவனிடம் பத்து லட்சம் ரூபாவை கடனாக பெற்றிருந்தான். ஆனால், அதனை திருப்பி கொடுக்காது இழுத்தடித்துக் கொண்டிருந்தான். ஒரு நாள் தமிழனின் வீட்டிக்கு தேடி வந்த சிங்களச் சகோதரன் எனது பத்து லட்ச ரூபாவை தரும்படி கெஞ்சிக் கேட்டான். ஆனால், தமிழனோ "சகோதரனே எனக்கு இன்னும்பணம் கிடைக்கவில்லை! ஒரு மாதம் பொறு முழுப்பணத்தையும் தந்து தீர்த்துவிடுகிறேன்" என்றான். ஆனால், சிங்கள இளைஞனோ பணத்தை வாங்காது தமிழனின் வீட்டை விட்டு செல்லப்போவதில்லை என்று அடம்பிடித்தபடி உட்கார்ந்திருந்தான்.

அப்போது திடீரென அந்த வீட்டினுள் திருடன் ஒருவன் நுழைந்தான். தமிழனின் கழுத்திலே துப்பாக்கி ஒன்றை வைத்து "உன்னிடமுள்ள பணம் முழுவதையும் உடனடியாக எடுத்து வா" என மிரட்டினான். பயந்து போன தமிழன் "என்னை ஒன்றும் செய்யாதே... என்னிடமுள்ள பணம் அனைத்தையும் உன்னிடம் தருகிறேன் என்னை உள்ளே சென்று பணத்தை எடுத்துவர அனுமதி தா" என்று கெஞ்சினான் — உடனே அருகே நின்ற தமிழனின் குழந்தையை பிடித்து அதன் கழுத்திலே துப்பாக்கியை வைத்து மிரட்டியபடி "குழப்பமெதுவும் பண்ணாமல் உடனே பணத்தை எடுத்துவா...." என்றான் திருடன்.



உள்ளே சென்ற தமிழன் திரும்பி வரும்போது பெரிய பார்சல் ஒன்றுடன் வந்தான். கொண்டு வந்த பார்சலை சிங்களச் சகோதரனின் கையிலே கொடுத்து.... "நண்பா இதிலே எட்டு லட்சம் ரூபா இருக்கிறது உனக்கு நான் தர வேண்டிய பணத்தில் கழித்து கொள்" என்று கூறிவிட்டு திருடனை நோக்கி "ஐயா.. இவருக்கு நான் கொடுக்க வேண்டிய கடனை கொடுத்ததுபோக மிகுதியாக என்னிடம் நூற்றி ஐம்பது ரூபாமட்டுமே உள்ளது. இந்தாருங்கள் இதனை வைத்துக்கொள்ளுங்கள்" என்று கொடுத்தான்.

***பு.புவிதா — திருநெல்வேலி***


**கேள்வி:—** சமாதானமா, போரா என்ற தாண்டவமாடிக் கொண்டிருக்கும் தமிழினத்தின் அவல நிலை எப்போது தீரும் பித்தா?

**பதில்:—** தமிழர்கள் அனைவரும் ஒற்றுமையாக ஒன்றுபட்டு நிற்கும் போது தான்.

***வி.வரலட்சுமி, கொட்டாஞ்சேனை***

**கேள்வி :—** பித்தா! கோல்பேஸ் போன்ற கடற்கரைகளில் காதலர்களின் அத்து மீறல்களை தவிர்க்க — BOARD ஒன்று வைக்கலாம் என்றிருக்கிறேன் — அப்படியென்றால் என்ன வாசகம் எழுதி வைக்கலாம்?

**பதில்:—** "HANDLE WITH CARE"




***வி.கேதீஸ் — உரும்பிராய்***

**கேள்வி :—** பித்தா! எனது காதலி பல்லுக் கட்டி இருக்கிறாள் அவளை நான் திருமணம் செய்யலாமா?

**பதில்:—** பல்லுக் கட்டிய பெண்ணை திருமணம் செய்யலாம் பரவாயில்லை. ஆனால், பல்லை எல்லாரிடமும் காட்டும் பெண்ணைத்தான் திருமணம் செய்யக்கூடாது.

***எம்.ராஜ் — கட்டைக்காடு***

**கேள்வி:—** சில பொம்பிளைகள் சில சினிமாசோகப் படங்களைப் பார்த்து கண்ணீர் வடிக்கிறார்களே ஏன்? அவர்களுக்கு என்ன கூறுகின்றீர்கள்?

**பதில்:—** அத்தக் கதா பாத்திரங்களோடு தங்கள் சொந்த வாழ்க்கையையும் ஒப்பிட்டுப் பார்த்து தான் அழுகின்றார்கள். அதைப் பார்த்து அழுவதன் மூலம் தமது சொந்த சுமைகளைத் தீர்த்துக் கொள்ளப் பார்க்கிறார்கள். அப்படியாவது தீர்த்துக் கொள்ள விடுங்களேன்.

***ச.சுதர்ஷன் — வவுனியா***

**கேள்வி:—** பித்தா! எனது காதலி என்னிடம் ஓட்டோ கிராப் கேட்கிறாளே. ஏன் பித்தா? அதில் என்ன எழுதிக் கொடுப்பது பித்தா?

**பதில்:—** கண்ணு.. அந்தப் பொண்ணு உம்மை காய் வெட்டப் போகிறது போல் தெரிகிறது. எனவே, "எங்கிருந்தாலும் வாழ்க" என்று எழுதிக்கொடும்.

***எஸ்.சுப்பன் — கோணாவில்***

**கேள்வி:—** டியர் பித்தா! தமிழினத்தைப் பிரிக்க என்று நினைத்து பிரிக்க முடியாமல் மட்டக்களப்பை விட்டு ஓடிப் போன துரோகி கருணாவின் துரோகச் செயலைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

**பதில்:—** கேள்வியிலேயே பதிலும் இருக்கிறதே துரோகத் தனம் என்று, பிறகென்ன நான் சொல்வது?

***தெ.மோகனதாசன் — விசுவமடு***

**கேள்வி:—** பித்தா, ஒரு பாடலை ஆணும், பெண்ணும் சேர்த்து பாடினால் இனிமையாக இருக்குமா? பெண் மட்டும் பாடினால் இனிமையாக இருக்குமா?

**பதில்:—** அது பாடலைப் பொறுத்து இருக்கிறது மோகன்.

***சி.குகானந்த் — விசுவமடு***

**கேள்வி:—** ஒரு பெண்ணுக்கு கவிதை எழுதிக் கொடுக்கும் போது "இனியவளே, என் கனவில் வாழும் தூயவளே, நான் விரும்பும் காரிகையே" இப்படி எழுதிக் கொடுத்தால் எப்படி இருக்கும்?

**பதில்:—** எழுதிக் கொடுக்கலாம் தான். ஆனால், அப்பெண்ணில் காலில் செருப்பு இருக்கிறதா என்று பார்த்து எழுதிக் கொடும்.

***ஜூ. றொபட் — கிளிநொச்சி***

**கேள்வி:—** பித்தா! ஒரு பெண்ணை காதலிக்க வேண்டுமானால் முதலில் என்ன செய்ய வேண்டும்?

**பதில்:—** முதலில் நல்ல மனிதனாக (அந்தப் பெண்ணுக்காவது) இருக்கப் பாரும்.

***அ.ராஜ்குமார் — பரந்தன்***

**கேள்வி:—** பித்தா, பௌத்த குருமார் எல்லோரும் அரசியலில்புகுந்து நன்றாக விளையாடுகின்றனரே, எம்முடைய அந்தணர்கள் அரசியல் பக்கமே செல்லாமல் இருக்கின்றனரே காரணம் என்ன?

**பதில்:—** பௌத்த குருமார் பேரினவாதிகள். எம்முடைய அந்தணர்கள் சிறுபான்மையினரின் மதகுருமார்கள் தானே. அது தான் தயங்குகிறார்கள் போல் தெரிகிறது.

***ஜென்சன் — மல்லாவி***

**கேள்வி:—** பித்தா! சடங்கள் சம்பிரதாயங்கள் சமூத்தை பாதிக்குமா?

**பதில்:—** சடங்குகளை வற்றுக்கேயுரிய தனித்துத்டன், அவற்றின் உள் அர்த்தம் கடாமல் செய்தால் அவை முகத்தைப் பாதிக்காது. ற்றும்படி சமூகம் சடங்குளைப் பாதிக்காவிட்டால் சரி.

***எஸ்.வாணி — ஜெயபுரம்***

**கேள்வி:—** பித்தா! ஆண்களைப் பார்த்தால் சில பெண்களுக்கு கோபம் வருகிறதே ஏன்?

**பதில்:—** எல்லாம் அவர்களின் நடத்தையின் விளைவு தான்.

## பித்தனின் கேள்வி

**கேள்வி:—** பித்தா, பெண்கள் நவீன ஆடை அணிவதன் மூலம் எதைச் சொல்ல விரும்புகிறார்கள்?

## வாசகர் பதில்கள்

***கு.போல் — திருநெல்வேலி.***

எடையைக் கூட்டி உடைச் சுமையைக் குறைப்பதற்காகவும் இருக்கலாம்.

***கு.ஸ்ரீதேவி — மன்னார்.***

இலங்கையில் ஏற்பட்டுவரும் வாழ்க்கைச் செலவு காரணமாக உடல் முழுவதையும் மூடி மறைப்பதற்குச் செலவாகும் துணியினை மீதப்படுத்தப்போலும்

***வி.குமார் — வவுனியா.***

தாங்களும் ஆண்களுக்கு நிகரானவர்கள் (மேலாடையின்றி) ஆலயத்திற்குள் செல்ல தங்களாலும் முடியும் என்பதை நிருபிப்பதற்கு.

***அ.ஜனனி — மட்டக்களப்பு.***

விலையுயர்ந்த சல்வார்களை அணிவதைக்காட்டிலும், விலை குறைந்த குறை ஆடைகளை அணிவது வசதி என்பதனால்

***கு.பீற்றர் — திருகோணமலை.***

'கழுதைகெட்டால் குட்டிச் சுவர்' அதே போல் பெண்கள் கெட்டால் இழிச்சவன் இருக்கான். அதனால் தான் இப்படி ஆடை அணிகின்றார்கள்.

***இ.தேவகி — செம்பியன்பற்று***

**கேள்வி:—** பித்து மாமா, எங்கடை ஆண்கள் தாடிதான் வழிக்கிறாங்கள் என்று பார்த்தால், தற்போதைய காலத்தில் மீசையும் வழிக்கிறாங்களே, இதற்கு என்ன காரணமாக இருக்கும்.

**பதில் :—** மீசை வைத்தால் தான் நிஜமான ஆண்பிள்ளை என்று சொல்வார்கள். மீசை வைத்தால் நிஜமான ஆண்பிள்ளை என்று யாராவது சண்டைக்கு இழுத்து விட்டாலும் என்ற பயம் தான்.

***சிவராமி — நவலி தெற்கு***

**கேள்வி:—** பெரும்பாலான தென்னிந்திய சினிமாக்கள் நாயகனும், நாயகியும் காதலித்து கஷ்டப்பட்டு திருமணம் முடிப்பதையே காட்டுகின்றன. ஆனால், திருமணத்தின் பின் நடக்கும் கஷ்டத்தை ஏன் காட்டுவதில்லை?

**பதில்:—** சினிமா என்பது ஒரு தொழிற்துறை, அவர்கள் பணம் சம்பாதிப்பதை குறிக்கோளாகக் கொண்டவர்கள். மக்கள் (பார்வையாளர்) நிஜ உலகில் இல்லாத மகிழ்வை சினிமாவில் காண விரும்புகிறார்கள். அதனால் தான் பார்வையாளர் விரும்பும் வகையில் மகிழ்வான் முடிவைக் கொடுத்து படத்தை நிறைவு செய்கிறார்கள்.

***தெ.மயூதனன் — முள்ளிவாய்க்கால்.***


**கேள்வி:—** பித்தா, கணவன் கள்ளு குடிக்கும் போதும், சுருட்டுப் மற்றும் போதும் மனைவியும் பங்கு கேட்டாளாயின் கணவனின் மனோ நிலை எப்படி இருக்கும்?

**பதில்:—** கண்ராவியாய் இருக்கும்.

***வைலட்டக்ஸ்சி — யாழ்.பல்கலைக்கழகம்***

**கேள்வி:—** சட்டையை அசட்டை செய்யும் நவநாகரிய நங்கையர்களைப் பற்றி என்ன நினைக்கிறீர் பித்தா?

**பதில்:—** என்ன நினைச் சென்ன? இந்தக் காலத்துப் பெடியங்களுக்கு அப்படியான பெட்டையளைத் தானே பிடிக்குது போல கிடக்கு.



***ச.குமாரன், வெள்ளாவெளி***

**கேள்வி:—** பித்தா! மதுவுக்கும் — மாதுவுக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

**பதில் :—** முன்னையது பருகினால் பரவசம் — அடுத்தது பார்த்தாலே பரவசம்.

# இலங்கை, அந்தமானில் 'நதிகள் நனைவதில்லை'



சரத்குமார், நமீதா

ஸ்ரீவெற்றி ஆண்டவர் பிலிம்ஸ் சார்பில் புதுக்கோட்டையை சேர்ந்த கே.ஆர். செல்வராஜா சோழன் தயாரித்து இயக்கும் புதிய படம் 'நதிகள் நனைவதில்லை'. 'உள்ளம் கேட்குமே', 'வானம் வசப்படும்' ஆகிய படங்களில் நடித்த மாடலிங் ஹேமந்த் உடன் புதிய இளம் நாயகன் – நாயகிகள் அறிமுகமாகிறார்கள். மேலும் ரவளி, அம்பிகா, மனோரமா, பல்லவி, தாமு, நிழல்கள்ரவி, பிரமிட் நடராஜன், விஜுசக்ர வர்த்தி, மீரா கிருஷ்ணன், வெண் ணிற ஆடை மூர்த்தி, பபிதா ஆகியோர் நடிக்கிறார்கள்.கதையோடு கூடிய இசைக்கு முக்கியத்துவம் கொடுத்து உருவாகும் இப்படம் இளைஞர்களின் வாழ்க்கைப் போராட்டத்தை மையமாகக் கொண்டது. ஒவியன் இசையில் பா. விஜய், சினேகன், நா. முத்துக்குமார் பாடல்கள் எழுதுகிறார்கள். சிவசங்கர், லலிதா மணி, அசோக்ராஜன், சினுப்ரியா ஆகியோர் நடனம் அமைக்கிறார்கள். இணை தயாரிப்பு: கோவை ஆர்.மதியழகன், கதை–திரைக்கதை. வசனம் தயாரிப்பு, இயக்கம்: கே.ஆர். செல்வராஜ சோழன். இதன் படப்பிடிப்பு இலங்கை, அந்தமான், தீவுகளிலும், கோவை, புதுச்சேரி, திருச்சி போன்ற நகரங்களிலும் நடைபெற உள்ளது.

பிரபல விநியோகஸ்தரான டா யாக ஸ்ரீ அம்ப்ரிஷினி ஆர்ட்ஸ் சார் தயாரிக்கிறார். அருண்குமார் கதா வித்தியாசமான வேடத்தில் நடிக்க ணணி நடிகை ஒருவர் நடிக்கிறா புதுமுகம் ஒருவர் அறிமுகமாகிறார் ணணி நட்சத்திரங்களும் பங்குெ

கங்கை அமரன் மகன் பிரேம்ஜி இ யமைப்பாளராக அறிமுகமாகிறார். வசனம் எழுதி இயக்குகிறார் ஏ.மஜீ தமிழன் படத்தை இயக்கியவர். இ படப்பிடிப்பு தொடங்கி விசாகப்ப டெல்லி, குலுமனாலி ஆகிய இடா கிறது. பாடல் காட்சி வெளிநாடுக

# சினேகாவின் 'அது' பயங்கரம்

சினேகா ஆற்றில் படகில் சென்று கொண்டு இருந்தார். அப்போது திடீரென்று படகு நிலை தடுமாறி அசைந்தது. சினேகா படகில் இருந்து தவறி கீழே விழுந்தார். சினேகாவை ஏதோ ஒரு சக்தி தண்ணீருக்கு அடியில் இழுத்து சென்றது. அங்கு அவர் கண்ட காட்சி ரத்தத்தையே உறையச் செய்தது. ஒவென்று அலறிக் கொண்டு மேலே வந்தார். சினேகா மேக்கப் போடாமல் இப்படத்தில் நடித்துள்ளார். படம் முழுவதும் பயமுறுத்தல் உள்ளது. புறா வரும்போதெல்லாம் பேய் வருவதுபோல் காட்சிகள் அமைக்கப்பட்டு உள்ளன. நிறை வேறாத ஆசை உள்ளவர்கள் இறந்தால் அவர்கள் ஆவி பூமியை விட்டு போகாது என்ற நம்பிக்கையை மையக் கருத்தாக வைத்து "அது" படம் உருவாகிறது.

# 45 ஐ 18 ஜெயிச்சு

சரவணா பிலிம் கிரியேசன்ஸ் என்றபட நிறுவனம் சார்பில் ஆர். ஷங்கர், எம்.எஸ். செந்தில்குமார் இருவரும் இணைந்து தயாரிக்கும் படம் 'மீரா ஏஜ் 45'. இப்படத்தில் கதாநாயகனாக சுனில் நடிக்கிறார். கதாநாயகியாக தீப்திநாவல் நடிக்கிறார். இவர் ஹிந்தியில் பல தேசிய விருதுகளைப் பெற்றவர் என்பது குறிப்பிடத் தக்கது. தீப்திநாவல் சொந்த வாழ்க்கையில் கணவரை இழந்தவர். கணவர் இறந்த பின்பு சினிமாவை விட்டு விலகியே இருந்தார். பிரபல ஹிந்தி டைரக்டர்கள் எல்லாம் கேட்டும் மறுத்து விட்டார். ஆனால் இந்தப் படத்தின் கதை அவருக்கு பிடித்திருந்ததால் நடிக்க ஒத்துக் கொண்டார். படத்தில் நெருக்கமான காட்சிகளில் இருவரும் ஒவரான கிளாமரில் நடித்திருப்பது குறிப்பிடத்தக்கது. இப்படத்தின் இயக்குனர் வி.ஏ.பிரகாஷ் மிகப்பிரமாண்டமான விளம்பரப்படங்களை எடுத்தவர். சென்ற வருடம் பரபரப்பாக பேசப்பட்ட புள்ளி ராஜாவுக்கு எய்ட்ஸ் வருமா? விளம்பரப்படத்தை இயக்கியவர் என்பது குறிப்பிடத் தக்கது.

கணவன் இறந்ததால் தனிமைப்பட்டுப் போன தீப்திநாவல் எதற்கெடுத்தாலும் கோபப்படுபவர். அதனால் அவர் இருக்கும் காலணியில் இவரை யாருக்குமே பிடிக்காது. இந்நிலையில் தீப்திநாவலின் தூரத்து உறவினர் மகன் 18 வயது வாலிபன் சுனில் வந்து தங்குகிறான்.— ஆரம்பத்தில் அவன் மீதும் கோபப்பட்டு வெறுத்து ஒதுக்கி விடுகிறாள். காலப்போக்கில் சுனிலின் சுறுசுறுப்பும் அழகும் தீப்தி நாவலின் மனதில் மாற்றத்தை ஏற்படுத்துகிறது. சுனில் தீப்திநாவலுக்கு சில அழகுக் குறிப்புகளையும் சொல்லிக் கொடுக்கிறான். அதற்கு பிறகு தீப்திநாவல் சுனில் மீது காதல் கொள்கிறாள். அந்த காதலில் மன ரீதியாகவும், உடல் ரீதியாகவும் இணைந்து விடுகிறார்கள். காதலுக்கும் காமத்துக்கும் வயது வித்தியாசம் இல்லை. 45 ஐ 18 ஜெயிச்ச கதை தான் 'மீரா ஏஜ் 45'. விரைவில் திரைக்கு வரும் இப் படத்தின் வசனத்தை அபிக்ஷாபட் எழுதுகிறார்.

# 'ராமகிருஷ்ணா'



வாணி, ஆகாஷ்

ராமகிருஷ்ணா படத்துக்கு 81 இடங்களில் படப்பிடிப்பு நடத்திய அகத்தியன் ஸ்ரீ சிவசக்தி மூவி மேக்கர்ஸ் பட நிறுவனம் சார்பாக மிகப்பிரமாண்டமான முறையில் தயாரிக்கும் படம் ராமகிருஷ்ணா ஸ்கோப்.இப்படத்தில் ஜெய் ஆகாஷ் கதாநாயகனாக நடிக்கிறார். கதாநாயகியாக ஸ்ரீதேவிகா, வாணி ஆகிய இருவரும் அறிமுகமாகிறார்கள். இப்படத்தின் அனைத்து கட்ட படப்பிடிப்பும் முடிவடைந்தது. சென்னையில் படப்பிடிப்பு தொடங்கி லண்டன், தென்காசி, குற்றாலம், பொள்ளாச்சி, அச்சங்கோயில் ஆரியங்காவு, ஆலங்குளம், திருநெல்வேலி, சென்னை, கேளம்பாக்கம், தென்னகரம், அம்பாசமுத்திரம், முக்கூடல்; செங்கல்பட்டு, குலுமலானி, தேனி, கம்பம் போன்ற 81 இடங்களில் இப்படத்தின் படப்பிடிப்பு நடைபெற்று இருக்கிறது. ஒரு படத்தின் படப்பிடிப்பு 81 இடங்களில் நடைபெற்று இருப்பது குறிப்பிடத்தக்கது. ஒவ்வொரு காட்சியும், வித்தியாசமாக இருக்க வேண்டும் என்பதற்காக பல இடங்களில் படப்பிடிப்பை நடத்தி இருக்கிறார் டைரக்டர் அகத்தியன். இப்படத்தில் விஜயகுமார், சார்லி, பரவை முனியம்மா, சரண்யா, மாஸ்டர் கணேஷ், அல்வா வாசு, சிசர் மனோகர், ரோஹித், சபீதா ஆனந்த், வைஷாலி, வெங்கயாபாலன், பிரவீன் ஆகியோருடன் முக்கிய வேடத்தில் ஜாக்குவார் தங்கம் வில்லனாக அறிமுகமாகிறார். ஒளிப்பதிவு: ராஜேஷ் யாதவ், இசை: தேவா, எடிட்டிங்: லான்சி மோகன், கலை: மோகன் மகேந்திரன், நடனம்: சிவசங்கர், அஜய்ராஜ், சம்பத் ராஜ், ஸ்டண்ட்: ஜாக் குவார் தங்கம், தயாரிப்பு–நிர்வாகம்: ஸ்ரீகாந்த், சுரேஷ், தயாரிப்பு மேற்பார்வை: சின்னா, கதை, திரைக் கதை, வசனம், பாடல்கள் எழுதி டைரக்ட் செய்கிறார் அகத் தியன்.

சிரிப்பழகி சினேகா தமிழில் மட்டுமல்ல தெலுங்கிலும் முன்னணி இடத்தை பிடித்து விட்டார். வெங்கி படம் அபார வெற்றி பெற்றதைத் தொடர்ந்து ஜெயம் பட வில்லன் கோபிசந்துடன் தொலிவலாடி என்ற தெலுங்கு படத்தில் நடித்துள்ளார் சினேகா. சினிமாவில் இருந்து கொண்டே வர்த்தக நிறுவனங்களுக்கும் மொடலிங் செய் தும் கலக்குகிறார் சினேகா.



உயிரோசை



# ...துணிச்சல்'

...ர டாக்டர் காளிதாஸ் முதன் முறை
...ஸ் சார்பில் துணிச்சல் என்ற படத்தைத்
...ர் கதாநாயகனாக இதுவரை ஏற்றிராத
... நடிக்க, அவருக்கு ஜோடியாக முன்
...க்கிறார். இன்னொரு ஜோடியாக
...ாகிறார். இவர்களுடன் பல முன்
...ங்குபெறுகின்றனர்.
...ரம்ஜி இப்படத்தின் மூலம் இசை
...கிறார். கதை, திரைக் கதை,
... ஏ.மஜீத் இவர் விஜய் நடித்த
...வர். இம்மாதம் சென்னையில்
...சாகப்பட்டிணம், ராஜ முந்திரி,
... இடங்களில் நடைபெற விருக்
...ிநாடுகளில் படமாக்கப்பட்டுள்ளது.

## கவர்ச்சி இல்லை

ஆட்டோக் கிராப் கோபிகா சிம்புவுடன் ஒரு படத்தில் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார். இது பற்றி கோபிகா கூறும் போது இப்படத்தில் சிம்புவுடன் நடிப்பதால் ரசிகர்கள் கவர்ச்சியை எதிர்பார்க்கலாம். ஆனால் நான் அப்படிப்பட்ட கவர்ச்சிக் காட்சிகளில் எல்லாம் நடிக்கமாட்டேன்.

இம்..... உதுவும் ஒரு கதை.




விந்தியா

# 'உயிரோசையில்' பொய்க்குச் சபதம்

வளர்பிறை மூவிஸ் என்ற புதிய நிறுவனத்தார் முதன் முறையாக தயாரிக்கும் படம் உயிரோசை. ஜமீன் குடும்பத்தில் எடுபிடி வேலை செய்யும் முருகனுக்கு பொய் பேசத் தெரியாது. ஜமீன்தாரின் தம்பி மகள் பட்டணத்தில் இருந்து கிராமத்திற்கு வருகிறாள். அவளை அழைத்து வருவதற்காக முருகனை ரயில் நிலையத்திற்கு அனுப்பிவைக்கிறார் ஜமீன் தார். முருகன் ரயில் நிலையத்துக்கு சென்று அவள் எடுத்து வந்த பெட்டியை ...க்கிறான். கனமாக உள்ளது, என்னம்மா பெட்டி கனமாக இருக்கிறதே உள்ளே என்னதான் வைத்துள்ளீர்கள் என்கிறான். அதற்கு அவளோ கோபமாக உள்ளே பாம் வைத்துள்ளேன் என்கிறாள். வழியில் பொலீஸ் சோதனை செய்து கொண்டிருக்கிறது. முருகனிடம் பெட்டியில் என்ன உள்ளது என்று விசாரிக்கி றார்கள். அவன் பாம் உள்ளது என்கிறான். பொலீசார் அதிர்ச்சியில் பெட்டியையும் அவர்கள் வந்த காரையும் சோதனை இடுகிறார்கள். இதில் கோபமான அந்தப் பெண் முருகனை கன்னத்தில் அறைந்து விடுகிறாள். பொய்யே பேசத் தெரியாத முருகனை எப்படியாவது பொய் பேசவைக்க வேண்டும் எனச் சபதம் எடுக்கிறாள். இப்படியொரு சுவாரஸ்யமான காட்சியை வளர்பிறை மூவிஸ் என்ற புதிய நிறுவனத்தார் தயாரிக்கும் உயிரோசை என்ற படத்திற்காக படமாக்கினார் இயக்குநர் அரிராம். முருகனாக புதுமுகம் பரத். கதாநாயகியாக அறிமுகமாகிறார் சோனிலோபோ என்ற புதுமுகம். ராஜேஷ், வினுச்சக்கரவர்த்தி வெண்ணிற ஆடை மூர்த்தி, குமரி முத்து, சேது விநாயம் ஒ.ஏ.கே. சுந்தர், கிரேன்மனோகர், ஓமக்குச்சி நரசிம்மன், சுருளி மனோகர் நடிக்க இவர்களுடன் வடிவுக்கரசி, சோபனா மற்றும் ஸ்ரீஜி என்ற புதுமும் இரண்டாவது கதாநாயகியாக நடிக்கிறார். கதை எழுதி, திரைக்ககதை -அமைத்து வசனம் எழுதி முதன் முறையாக இயக்கி உள்ளார் அரிராம். ஒளிப்பதிவை சுரேஸ்ராஜ் ஏற்க படத்தொகுப்பை எம்.ஆர். சீனிவாசன் கவனிக்கிறார். படத்தில் இசையை அரவிந்த ஸ்ரீராம் ஏற்க பாடல்களை விவேகா எழுத நடனத்தை நியூ. எல்.அந்தோனி அமைக்க சண்டைக்காட்சிகளை ஆர்.கே. முரளி ஏற்றார். ஜெயக்குமார் இணை இயக்கத்தில், சித்தன் தயாரிப்பு நிர்வாகத்தில் கீனா அயன்மாத், ரா.யோகதர்ஷினி ஆகியோர் இணைந்து தயாரித்துள்ள "உயிரோசை" காதல் காவியம் விரைவில் திரைக்கு வருகிறது.



# சின்னத் திரை பெரியதுரை

திறந்துவிட்ட குழாயில் இருந்து நீர் கொட்டுவதுபோல் ரங்கனின் வாயில் இருந்து வார்த்தைகள் கொட்டிக்கொண்டிருந்தன. அம்புஜா விறைத்துப்போய் கண்களை இமைக்கமறந்து அவனையே வைத்தகண் வாங்காமல் பார்த்துக்கொண்டிருந்தாள். ''இதோ பார்! நீ போட்டிருக்கின்ற நகை நட்டுகள் எல்லாம் இந்த நிமிடமே அகற்றப்படவேணும். நான் கட்டிய தாலிக்கொடி மட்டும் தான் இப்போதைக்கு உனக்குத் தேவையானது.'' ஒரு பெட்டியைத் தன்னுடைய பீறிவ்கேசில் இருந்து எடுத்து வைக்கிறான். அவனுடைய பிரசங்கம் தொடர்ந்தது.

''இதிலே ஒரு பெண்ணுக்குத் தேவையான கவரிங் நகைகள் அத்தனையும் இருக்கின்றன. இப்போதைக்கு நீ இவற்றைத்தான் போட்டுக்கொள்ள வேண்டும். பிறகு என்னுடைய வசதிப்படி ஒவ்வொன்றாகத் தங்கத்திலே செய்து தருவேன்.''

ரங்கன் அம்புஜா திருமணம் நடந்து முழுசாக ஒரு மாதம் கூட ஆகவில்லை. இருவரும் ஒருவரை மற்றவர் இன்னும் சரியாகப் புரிந்து கொள்ளவும் இல்லை. அதற்குள் இப்படியொரு அதிரடித் தாக்குதலை அவள் சற்றும் எதிர்பார்க்கவில்லை.

துரத்திவருகின்ற நாயை பார்த்து, பூனையும் ஒரு கட்டத்தில் சீறுகிறது. அம்புஜாவின் சீறல் சிணுங்கலாக வெளிப்பட்டது. ''எல்லா நகையளும் அப்பா செய்து தரேல்லை, சிலவற்றை என்னுடைய உழைப்பில நானே செய்தனான்.''

இப்படி ஒரு வார்த்தை அவளிட்டையிருந்து வரவேணும் என்று அவன் எதிர்பார்த்தான்.

அம்புஜா அரசாங்க அலுவலகமொன்றில் வேலைபார்க்கிறாள். ரங்கன் ஒரு வர்த்தக நிறுவனத்தில் மனேச்சராக இருக்கிறான். திருமணம் முடிந்த பிறகு நடந்த வரவேற்பு உபசாரத்திலேயே ரங்கனுக்கு கொஞ்சம் கஷ்டமாகி விட்டது.

ரிப்ரொப்பாக வந்திறங்கிய அம்புஜாவின் நண்பர்களின் முன்னால் சாதாரண உடையில் வந்த ரங்கனின் ஆட்கள் சோபை இழந்து போனார்கள். அன்றைக்கே ரங்கனின் மனதில் கருமேகங்கள் கவியத் தொடங்கின.

வியாபாரத்தில் கைதேர்ந்த ரங்கனுக்கு முகத்தில் இருந்த உணர்ச்சிகளைப் பதுக்கி வைப்பது பெரிய காரியமில்லை. பதுக்கிய பொருட்கள் கறுப்புச் சந்தைக்குப் போனால் பல மடங்கு இலாபம் கிடைக்கும். குடும்பத்தில் பதுக்கல் விசயம் பாரிய நஷ்டத்தைத்தான் கொண்டுவரும். ரங்கனின் குடும்ப வியாபாரம் குட்டிச்சுவராகிப் போவதற்கு முதல் அடி எடுத்து வைத்தாயிற்று.

அம்புஜாவிற்கு அவளுடைய கணவனின் நடவடிக்கைகளுக்கு ஏதாவது பின்புலம் இருக்க வேண்டும் என்பது புரிந்தது. ஆனால், அது எதுவாக இருக்கும் என்பதில் தான் குழப்பம் இருந்தது.

அலுவலகத்தில் அவனையே சுற்றிக் கொண்டிருந்த அந்த ஸ்ரெனோ றீற்றா தன்னுடைய சுருக்கெழுத்து அபத்தங்களை சிலாகித்து வாசித்திருப்பாளா? அல்லது எங்களது குடும்பத்தின் மீது பிடிக்காத வேறுயாராவது அள்ளி வைத்திருப்பார்களா? அவளுக்கு தலை விறைத்துப்போய் மூளைக்கு இரத்த ஓட்டமே நின்று விட்டது போல் இருந்தது. இப்போதைக்கு அவன் சொல்லுகிறபடி செய்வதைத்தவிர அவளுக்கு வேறு எதுவுமே தோன்றவில்லை.



- சு.சிவராஜா -

தன்னுடைய பேச்சை காற்றுஅடிக்கும்திசைக்கே மாற்றினாள். அதனால், ரங்கனின் அதிகப் பிரசங்கித்தனத்துக்குவெட்டு விழுந்தது. அவனுடைய கையில் இருந்த கவறிங் நகைப் பெட்டியை வாங்கிஉள்ளேகொண்டு போய் வைத்துவிட்டு வந்தாள்.

ரங்கனிடம் சாதாரணமாகப்பேசினாள்.''நீங்கள் கால் முகம் கழுவிக் கொண்டு வாருங்கள். நான் தேத்தண்ணிபோட்டுக் கொண்டு வாறன்.'' ரங்கனின் முகத்தில் வெற்றிப் பெருமிதம் தெரிந்தது. புலி பதுங்குவது பாய்வதற்கு என்பதை அவன் இப்போது அறிந்திருக்க நியாயமில்லை. இரவுச்சாப்பாடு முடிந்த பிறகு ரங்கன் தொலைக்காட்சியின் முன்னால்வந்து உக்கார்ந்தான். அடுப்படி அலுவல்களையெல்லாம் வேகமாக முடித்துக் கொண்டு அம்புஜாவும் வந்து அமர்ந்தாள். தொலைக்காட்சியில் ஒரு பிரபலமான தொடர் நாடகம் நடந்து கொண்டிருந்தது.

அந்தத் தொலைக்காட்சித் தொடரின் இன்றைய அரங்கம் அவர்களுடைய வீட்டில் நடந்துகொண்டிருப்பதை அப்படியே பிரதிபலிப்பாக இருந்தது.

கணவனும் மனைவியும் உத்தியோகம் பார்ப்பவர்கள். மனைவி உயர்பதவியில் இருக்கிறாள். தாழ்வு மனப்பான்மை கொண்டகணவன் அவளைக் கொடுமைப் படுத்துகிறான். விசயம் விவாகரத்து அளவிற்குப் போய்விட்டது. உச்சக்கட்ட உரையாடல் போய்க் கொண்டு இருந்தது.

''நீ உயர் பதவியில் இருக்கிற திமிரில் பேசுகிறாய். அலுவலகத்தில் ஆம்பிளைகளை ஆட்டிப்படைக்கிற மாதிரி வீட்டிலையும் நடத்தப் பார்க்கிறாய்.''

''இப்படி கதைக்க உங்களுக்கு வெட்கமாயில்லே. பெண் என்றால் அவள் மரக்கட்டை அல்லது ஜடம் என்ற நினைப்பா? எங்களுக்கும் உணர்வுகள் உண்டு என்பதை மறக்க வேண்டாம்.''

''ஐயையோ! எந்தமடையன் அப்பிடிச் சொன்னான்? கணவனே கண்கண்ட தெய்வம் என்பதெல்லாம் பழைய பஞ்சாங்கம். மனைவி சொல்லே மந்திரமென்பதுதான் புதுமைப் பெண்களின் கீதா வாக்கியம்.''

''யதார்த்தத்தைப் புரிந்து கொள்ளாதவர்களை படித்தவர்கள் என்று சொல்வதில் என்ன அர்த்தம் இருக்கிறது?''

''சபாஷ், கடைசியிலை என்னைப் படிப்பறிவு இல்லாதவன் என்றா சொல்லுறா?

கணவன் வெறிகொண்டு மனைவியைத் தாக்குகிறான். அவள் அவனை எச்சரிக்கிறாள். அவன் மீண்டும் அடிக்கிறான். அவள் திடீரென்று ஒரு கைத் துப்பாக்கியை எடுக்கிறாள். படபடவென்று வேட்டுக்கள் தீர்க்கப்படுகின்றன. கணவன் கீழே சுருண்டு விழுகிறான்.

அப்போது அவனையும் அறியாமல் ரங்கன் அம்புஜாவின் பக்கமாக முகத்தைத் திருப்பினான். அவளும் திரும்பினாள். இருவரின் கண்களும் அந்தச்சந்திப்பைத் தாங்க முடியாமல் தடுமாறி அடுத்த கணம் இருவரும் தங்களுடைய தலைகளைச் சரிப்படுத்திக் கொண்டார்கள்.

திடீரென்று பவர்கட் ஆகிவிட்டது. அந்த வீட்டில் சுடுகாட்டின் அமைதி நிலவியது. அண்டை வீட்டில் ''மெழுகுதிரி எங்கே? ரோச்சைக் கொண்டுவா, வைச்ச இடத்தில நெருப்புப் பெட்டியைக் காணேல்லை...'' என்று கூச்சல்கள் கேட்டன. சற்று நேரத்தில் எல்லாம் அடங்கிவிட்டன.

இருண்ட பத்து நிமிடங்கள் இப்படியே உருண்டன. அந்த அமைதியின் நடுவே ''ஐயோ அம்மா.. என்னைச் சுடாதே... சுடாதே...'' என்று ரங்கன் கத்தினான். அடுப்படிக்குள் கை விளக்கை தேடி எடுத்துக் கொளுத்திக் கொண்டிருந்திருந்த அம்புஜா கைவிளக்கோடு ஓடி வந்தாள்.

படுக்கையறையுள் ரங்கன் பேயறைந்தவனைப்போல நின்றான். விளக்கு வெளிச்சத்தில் அம்புஜாவைப் பார்த்து பேந்தப் பேந்த விழித்துக் கொண்டிருந்தது நன்றாகத் தெரிந்தது. ஷேட் தொங்க விடுகின்ற ஒரு ஹங்கர் அவனுடைய தலையைத் தொட்டுக் கொண்டுநின்றது. அம்புஜாவிற்கு எல்லாம் விளங்கி விட்டது. அவள் கலகலவென்று சிரித்து விட்டாள்.

ஹங்கரின் மடங்கிய முனையைத் துப்பாக்கியின் குழலாக நினைத்த ரங்கனின் குற்றமுள்ள நெஞ்சின் குறுகுறுப்பிற்குத்தான் நன்றி சொல்ல வேண்டும். அவனுடைய மனதை மூடியிருந்த மாயத்திரையை தொலைக்காட்சி நிகழ்வு கிழித்தெறிந்து விட்டது. ரங்கனுக்குத் தெளிவு பிறந்து விட்டது.

அடுத்த நாள் காலையில் அவசரம் அவசரமாக அம்புஜா அலுவலகத்திற்கு வெளிக்கிட்டுக்கொண்டிருந்தாள். அவளின் பின்புறம் வந்த ரங்கனின் கரங்கள் அவளுடைய முகத்தை தோள்களைப் பற்றின. அவளுடைய தன்னுடைய முகத்திற்கு நேராகத் திருப்பினான். அவனுடைய வாயில் இருந்து வார்த்தைகள் அமைதியாக வந்தன.

''அந்த கவரிங் நகைப் பெட்டியை தலையைச் சுற்றிக் குப்பை தொட்டிற்குள் வீசி எறிந்து விடு. அம்புஜத்தின் மேனியை தங்கம் மட்டுமே அலங்கரிக்க முடியும்''

அம்புஜா அவனுடைய வார்த்தைகளால் உருகிப் போனாள். காலை நேரம் என்பதையும் மறந்து அவள் அவனைக் கட்டிக் கொண்டாள். கண்களில் இருந்து அரும்பிய சூடானான கண்ணீர்த் துளிகள் ரங்கனின் பரந்த மார்பில் உருண்டு விழுந்தன.

(யாவும் கற்பனையே)

## நீங்கள் குண்டு உடம்புக்காரியா?

குண்டு உடம்பைக் குறைப்பதற்காக கடந்த வருடம் மட்டும் ஒரு லட்சத்து 3 ஆயிரம் அமெரிக்கர்கள் அறுவைச் சிகிச்சை செய்து கொண்டனர். இந்தியாவில் இந்த எண்ணிக்கை 18 ஆயிரம்தான்.

அமெரிக்காவில் வருடத்துக்கு வருடம் குண்டு உடம்புக்காரர்கள் பெருகி வருகிறார்கள். இதற்குக் காரணம் பெரும்பாலானோர் வாரத்துக்கு 32 முதல் 40 மணி நேரம் வரை இருக்கிற இடத்தை விட்டு அசையாமல், எதையாவது சாப்பிட்டுக் கொண்டே டி.வி.பார்ப்பதுதான்.

இந்தியாவில் குண்டு உடம்புக்காரர்கள் 3 முதல் 5 சதவீதம் வரை இருக்கலாம் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

சரி, உடம்பு குண்டாக இருக்கிறது என்று எப்படித் தெரிந்து கொள்வது?

ஒருவருக்கு அவரது உயரத்துக்குத் தகுந்த எடை இருக்க வேண்டும். உதாரணமாக 5 அடி 9 அங்குலம் உயரம் உள்ள ஒருவருக்கு 68 முதல் 72 கிலோ எடை இருந்தால் அவரது எடை சரியானது. அதில் 10 சதவீதம் அதிகரித்து 78 கிலோ ஆக இருந்தால் ஓரளவு குண்டு.



20 சதவீதம் அதிகரித்து 85 கிலோ ஆக இருந்தால் அவர் படு குண்டு.

இந்த உயரம் கொண்டவர்கள் 85 கிலோவுக்கும் அதிகமாக இருந்தால் விரைவில் அவர்கள் இதயக் கோளாறு, நெஞ்சுவலி போன்றவற்றிற்கு ஆளாகலாம்.

## 'சுடர் ஒளி' வார மலர் விளம்பரக் கட்டணம்

| அளவு | கறுப்பு/வெள்ளை | கலர் |
|---|---|---|
| முழுப்பக்கம் | ரூ.30,000.00 | ரூ. 45,000.00 |
| அரைப்பக்கம் | ரூ.15,680.00 | ரூ. 23,520.00 |
| C.M. | ரூ. 98.00 | ரூ.147.00 |
| Page Specified C.M.Cl | ரூ.122.50 | ரூ. 183.75 |
| Contract ADV. | ரூ. 70.00 | ரூ. 110.00 |
| (250-300 Col. Cms) | | |

# வீட்டிலே நீங்கள் எப்படி?

பனி இல்லாத மார்கழியா?

சுவையில்லாத முக்கனியா?

காதல் இல்லாத திருமணமா?

ஆம். குயிலினங்களின் கான ஒலி, குழந்தைகளின் அழுகை ஒலி, கடலலையின்



சங்கீத ஒலி... இவற்றைப் போல் இயற்கையும் கூட அழகானதே. அது போல் தான் இனிய வாழ்க்கைக்கு உற்சாகம் சேர்ப்பதும் கணவன் — மனைவி இடையே நிலவும் அந்நியோன்யம் தான். எனவே உங்கள் வாழ்க்கையில் ரொமான்ஸ்ரசனைகள் எப்படி உள்ளன என்பதை அறிய இதோ கீழே கேட்கப்பட்ட சில கேள்விகளுக்குப் பதிலளித்துக் கண்டுபிடியுங்களேன்.


**1) உங்கள் கணவர்/ மனைவியின் பிறந்த நாள் வருகிறது. விசேஷமாக என்ன செய்வீர்கள்?**

அ) அதெல்லாம் யாருக்கு நினைவிருக்கிறது?

ஆ) இன்றைக்கு உங்களுடைய பிறந்த நாளாச்சே என்று ஞாபகப்படுத்திக் கொள்வதோடு சரி.

இ) வாய் நிறைய வாழ்த்தி, பரிசுகள் கொடுத்து மகிழ்விப்பேன்.

ஈ) தனிப்பட்ட கொண்டாட்டமே உண்டு.



**2) நீங்கள் இருவரும் அடிக்கடி உல்லாசமாக வெளியில் போவதுண்டா?**

அ) கடன் என்று போய் வருவதுண்டு.

ஆ) திருமணமான புதிதில் கோயில், சினிமா என்று போவோம். இப்போது நேரமே இல்லை.

இ) அடிக்கடி.

ஈ) வாரம் தோறும் போவதுண்டு.

**3) ஐ லவ் யூ சொல்வதுண்டா?**

அ) சேச்சே!

ஆ) வார்த்தைகளால் சொல்லாமல், செய்கையால் உணர்த்துவேன்.

இ) மிகவும் சந்தோஷமான சமயங்களில்.

ஈ) அன்பை வெளிப்படுத்தும் வார்த்தை அல்லவா? சொல்லிக்கொண்டே இருப்பேன்.

**4) காதலர் தினம் கொண்டாடுவதுண்டா?**

அ) அதெல்லாம் தேவை தானா?

ஆ) அன்பைத் தெரிவிக்க சிறந்த நாள் அல்லவா? நிச்சயம் கொண்டாடுவோம்.

இ) உற்சாகமாக வாழ்த்திக் கொள்வோம்.

ஈ) வாழ்த்து மடல், பரிசு, பூ என்று விசேடமாகக் கொண்டாடுவோம்.

**5) உங்கள் துணைக்கு நோய் ஏற்படும் வேளைகளில்**

அ) கண்டுகொள்ள மாட்டேன்.

ஆ) வேண்டாவெறுப்பாக உதவிசெய்வேன்.

இ) பிரியாமல் கவனித்துக்கொள்வேன்.

ஈ) பரிதவித்துப்போவேன்.

**6) உங்களுக்குள் பாரதூரமான சண்டை மன்னித்துக்கொள். நான் தான் பிழை செய்துவிட்டேன் என்று நட்புக் கொண்ட பின்பும் உங்கள் துணை கோபத்தோடு இருக்கிறார். அப்போது என்ன செய்வீர்கள்?**

அ) நானும் முறுக்கிக் கொள்வேன்.

ஆ) தானாக அடங்கட்டும் என்று காத்திருப்பேன்.

இ) அன்பு மழையில் நனைப்பேன்.

ஈ) மன்னிப்புக் கேட்டு மன்றாடுவேன்.

**7) உங்கள் துணைக்கு ஏதோ ஒரு பரிசு கொடுக்க வேண்டிய சூழ்நிலை. என்ன பரிசு கொடுப்பீர்கள்?**

அ) பரிசுகளில் நம்பிக்கை இல்லை.

ஆ) ஏதாவது வாங்கிக் கொள் என்று பணம் கொடுத்துவிடுவேன்.

இ) அவரது விருப்பத்தைக் கேட்டுத் தெரிந்துகொண்டு மனப்பூர்வமாக வாங்கிக் கொடுப்பேன்.

ஈ) என் அன்பையும் அக்கறையையும் காட்டும் ஓர் அபூர்வமான பொருள்.

என்ன சகோதரிகளே, புள்ளடியிட்டு விட்டீர்களா? உங்கள் வாழ்க்கையை நீங்கள் எத்துணை ரசித்து வாழ்கிறீர்கள் என்று அறிய ஆவலா? இதோ— இந்தப் பக்கத்தின் ஏதோ ஒரு பகுதியில் ஒளிந்துள்ளது, பதில். தேடிக்கண்டுபிடியுங்கள்.

# மிளகிலே மருத்துவம்

சமையலில் பெண்கள் பயன்படுத்தும் வாசனைத்திரவியங்களுள் ஒன்று தான் மிளகு. மிகவும் காரத்தன்மை கொண்ட மிளகு சளி, இருமல், விஷத்தன்மை, வாதம் முதலியவற்றுக்கு அருமருந்தாகப் பயன்படுத்தப்படுகிறது. இந்த மிளகை நெருப்பின் குணம் உடையது என்பார்கள். எனவே இந்த மிளகின் மருத்துவக் குணங்களை இன்று பார்ப்போமா?



* தொண்டைவலி இருந்தால், கொஞ்சம் மிளகு, ஓமம், உப்பு ஆகிய மூன்றையும் சேர்த்து வாயில் போட்டு மென்றால் தொண்டை வலி குணமாகும்.

*மிளகைப் பொடி செய்து, சிறிதளவு உப்புச் சேர்த்து சூடாக்கி சிறிது நெய்யில் கலந்து கொண்டு சாப்பிட்டால் செமியாத்தன்மை, பசியின்மை போன்றவை உடனே குணமாகும்.

*சளி, தடிமன் அதிகமாக இருந்தால் மிளகு ஒரு கரண்டி எடுத்து நெய்யில் வறுத்துப் பொடி செய்து வைத்துக்கொண்டு தினமும் மூன்று வேளை அரைக் கரண்டி சாப்பிடுவது சிறந்தது. இரண்டு நாட்களிலே நல்ல குணம் தெரியும்.

* பசியில்லாமலிருந்தால், ஒரு கரண்டி மிளகை வறுத்துப் பொடி செய்து கைப்பிடியளவு துளசி இலையைப் போட்டுக் கொதிக்க வைத்து, சூடு ஆறியவுடன் தேனில் கலந்து குடித்தால் சரியாகும்.

*நன்றாகச் சளி பிடித்துக் கொண்டால் மிளகை நன்றாக இடித்து தூளாக்கி தேனில் கலந்து சாப்பிட்டு வர வேண்டும். ஒரு சில தினங்களில் சரியாகி விடும்.

பதில்:- உற்சாகம் ததும்பும் காதல் வாழ்க்கைக்குப் பரீட்சை எதற்கு?

மனத் தேவை, உடல் தேவைகளைப்புரிந்துகொண்டு, இனிய உணர்ச்சிகளால், இதயபூர்வமான வாழ்க்கை வாழுங்கள். விட்டுக்கொடுத்து அன்பு காட்டுங்கள். வாழ்க்கை வாழ்வதற்கே!

# கணவனும் மனைவியும் ஒரே இடத்தில் வேலையா..?

கணவனும் மனைவியும் ஒரே இடத்தில் வேலை பார்ப்பது பற்றி இருவேறு கருத்துக்கள் உள்ளன. கணவனும், மனைவியும் ஒரே இடத்தில் வேலை பார்க்கும் போது அது அவர்களுக்குள் ஒரு பொறுப்புணர்வை ஏற்படுத்துகின்றது. இதனால் வேலையைப் பகிர்ந்து கொண்டு ஆளுக்குப் பாதியாகச் செய்ய வேண்டும் என்ற எண்ணம் ஏற்படுகிறது. வேலை செய்யும் இடத்தில் கணவன்—மனைவி இடையே தவறான சிந்தனைகள் தோன்றுவதற்கு வாய்ப்புகள் குறைவு என்பதனால் வேலை தடையின்றி நடக்கும். அதே போல் கணவன் தனது மனைவியுடன் வேலை பார்க்கும்போது அவளது பெண்மைக்குப் பாதுகாப்பு கிடைக்கிறது. கணவன் எந்த நேரமும் அருகிலேயே இருப்பதால் சக ஊழியர்களின் தவறான கண்ணோட்டத்துக்கு அங்கே இடமில்லை.



கணவன் பற்றி மனைவிக்கு திருப்தி நிலவுகிறது. ஏனெனில் தான் அருகில் இருக்கும்போது இன்னொரு பெண்ணுடன் கணவனுக்கு ஏற்படக்கூடிய ஆழமான தொடர்பை தடுத்துவிடலாம்.

கணவன்—மனைவி ஒரே அலுவலகத்தில் வேலை பார்ப்பதால் என்ன லாபம் என்று சிந்தித்தால்— அலுவலகத்தில் முதல்நாள் பாதியில் நின்றுபோன வேலையை மறுநாள் தொடரும்போது அதை எப்படி சிறப்பாக முடிக்கலாம்? அல்லது இதற்குப் பதிலாக வேறொன்றை செய்யலாமா? என்பதை வீட்டில் சிந்திக்க அவர்களுக்கு நேரம் கிடைக்கும். இதனால் அலுவலகத்தின் வேலை மறுநாள் தடையின்றி நடைபெறுகிறது. இருவரும் ஒருவருக்கொருவர் பொறுப்பை ஏற்றுக்கொள்கிறார்கள்.

இப்படி ஒருபக்கம் நிறுவனத்துக்கு சாதகமான அம்சங்கள் இருந்தாலும் அதுவே வாழ்க்கையை அலுத்துவிடச் செய்யும் அம்சமாகவும் இருக்கிறது. முதலில் கணவன்— மனைவி இருவரும் ஒத்துப்போகின்றவர்களாக இருக்க வேண்டும். இல்லையெனில் இருவரும் சண்டை போடவே நேரம் சரியாகப் போய்விடும்.

இருவரும் 24 மணி நேரமும் சேர்ந்தே இருப்பதால் தனிமையை விரும்புகிறவர்களுக்கு அது கொடுமையாக அமைந்துவிடும். எந்த நேரமும் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டே இருந்தால் அது சலிப்பை ஏற்படுத்தலாம். இதனால் அது வாழ்க்கையைப் பாதிக்கக் கூடும்.

மேலும் கணவனும்—மனைவியும் அமைத்துக்கொள்ளும் பாதுகாப்பு வலையம் சக ஊழியர் ஆணாகவோ அல்லது பெண்ணாக இருந்துவிட்டால் அது மன நிம்மதியைக் குலைத்துவிடும் வகையில் அமைந்துவிடலாம்.

கணவன் வேறு யாராவது பெண்ணுடன் தாராளமாகப் பேசக்கூடாது என்று மனைவியும், மனைவி எந்த ஆடவனுடனும் பேசக்கூடாது என்று கணவனும் நினைக்கும்போது அது அவர்களது வாழ்க்கையில் முறிவு ஏற்படக்கூடிய அளவுக்குப் போகலாம்.

எனவே ஒருவரையொருவர் புரிந்துகொண்டு — பரஸ்பர நம்பிக்கையுடன் பணிபுரிவதானால் ஒரே அலுவலகத்தில் அவர்கள் பணிபுரிவதில் தப்பே இல்லை. ஆனால் அதிக பாசம் கொண்ட தம்பதியர் அதன் விளைவால் பிற ஆண்களுடனோ அல்லது பெண்களுடனோ பழகுவதனால் அவர்களிடையே குழப்பங்கள் தோன்ற வழி இருக்குமானால் புத்திசாலித்தனமாக அவர்களே தாம் எங்கு எவ்வாறு வேலை செய்வது என்பதை தீர்மானித்துக்கொள்ள வேண்டும்.




# முதுகு அழகு பெற....

பொதுவாக நாம் குளிக்கும்போது கவனம் செலுத்தாத பகுதி முதுகுப்பகுதி தான். இதனால் பொதுவாக இப் பகுதி அழகிழந்து, மங்கலாகத் தோற்றம் அளிக்கும். அழகான முதுகு தெரியும் வகையில் பிறர் அணியும் உடைகளைப் பார்த்து நீங்கள் இனிப் பொறாமைப்பட வேண்டாம். இதோ உங்கள் முதுகு அழகு பெற சில அழகுக் குறிப்புகள்...

குளிக்கும் போது முதுகு தேய்க்க உங்கள் கைகளை விட பிரஷ் உபயோகிப்பது சிறந்தது. முதுகுப் பகுதியை முழுவதாகச் சுத்தம் செய்ய இப்பொழுது நீண்ட கைப்பிடி உள்ள பிரஷ் கடைகளில் கிடைக்கிறது.

வாரத்தில் ஒருமுறை சந்தனம் மற்றும் பன்னீர் கலந்த கலவையை முதுகில் தடவவும். உலர்ந்த பிறகு கழுவிவிடவும். இது முதுகிற்கு நல்ல பொலிவைத் தரும்.

முதுகை ஸ்கரப் செய்வதால் உயிரிழந்த சருமம் அகன்று முதுகு புத்துயிர் பெறும்.

கடையில் கிடைக்கும் ஸ்கிரப் உபயோகிக்க விருப்பமில்லை என்றால், வீட்டிலேயே தயாரித்துக் கொள்ளலாம். இரண்டு தேக்கரண்டி சர்க்கரையுடன் ஆறு தேக்கரண்டி எலுமிச்சை சாற்றைச் சேர்க்கவும். இதைக்கொண்டு முதுகை நன்றாகத் தேய்த்து பின் கழுவவும்.

இது மட்டுமல்லாமல் நேராக நிமிர்ந்து நடப்பதும் உங்கள் முதுகுக்கு அழகு சேர்க்கும்.

# இறால்—சைனஸ் ஸ்டைல்

**தேவையான பொருட்கள்**



| | |
|---|---|
| உரித்த இறால் | — 500கிராம். |
| தக்காளி சோஸ் | — 2 மேசைக்கரண்டி |
| மிளகாய் வற்றல் | — 1 மேசைக்கரண்டி |
| சைனீஸ் உப்பு | —1 சிட்டிகை (3 விரல் நுனியளவு) |
| கோர்ன் பிளோர் | — 4 மேசைக்கரண்டி |
| இஞ்சி, பூண்டு விழுது | — $2\frac{1}{2}$ மேசைக்கரண்டி |
| முட்டை வெள்ளைப்பகுதி | — 1 |
| உப்பு | — 1 தேக்கரண்டி |
| தண்ணீர் | — 4 மேசைக்கரண்டி |
| எண்ணெய் | — 1 லீட்டர். |

**செய்முறை**

முட்டையின் வெள்ளைப்பகுதி, 3 மேசைக்கரண்டி கோர்ன் பிளோர், $\frac{1}{2}$ தேக்கரண்டி உப்பு, தண்ணீர், எண்ணெய் இவற்றைச் சேர்த்து ஒரு கலவையைத் தயாரிக்கவும்.

அந்தக் கலவையில் இறாலை 20 நிமிடம் வரை ஊற வைக்கவும்.

தக்காளி சோர்ஸ், சைனீஸ் உப்பு, மீதமுள்ள கோர்ன்பிளோர், இஞ்சி, பூண்டு விழுது, மிளகாய் வற்றல் விழுது ஆகியவற்றை ஒன்றாகக் கலக்கவும்.

தேவையான அளவு எண்ணெயைச் சூடாக்கி தக்காளி சோஸ் கலவையை ஒரு நிமிடம்வதக்கவும்.

இதில் இறாலைக் கலந்து மேலும் 5 நிமிடம் வதக்கவும்.

இறால் சைனீஸ் ஸ்டைல் ரெடி. பரிமாறுங்கள். உண்டு மகிழுங்கள்— பாராட்டு மழையில் நனையுங்கள்.

# விநோத உயிரினங்கள்

அன்று வாரச்சந்தை. ரமணி தன் அப்பா கேசவனின் கையைப் பிடித்துக் கொண்டு நடந்தான். ரமணியின் பார்வை சாலையோரம் இருந்த ஒரு கடையின் மீது பதிந்தது.

அங்கே ஒரு பச்சைக்கிளியை கூண்டில் அடைத்து விற்பனை செய்துகொண்டிருந்தான் ஒருவன். அதைக் கண்டதும் அவன் ''அப்பா எனக்கு அந்தக் கூண்டுக்கிளி வேணும்'' என்றான்.

''பறவையை கூண்டில் அடைப்பது பாவம். அதை அப்படியே வீட்டில் வளர்ப்பது அதைவிடப் பாவம்'' என்றார். அதற்கு ரமணி ''ஊஹூம் முடியாது. எனக்கு அது வேணும்'' என்று அடம்பிடித்தான். ஒரு கூட்டுக்கிளியை வாங்கி அவனிடம் கொடுத்தார் கேசவன்.



உற்சாகமாக அப்பாவின் கையைப் பிடித்துக் கொண்டுநடக்கத்தொடங்கினான். ''ரமணி கூண்டுக் கிளியுடன். ரமணி பறவையை சிறையில்அடைப்பதுதவறு. கொஞ்சநாளைக்குப்பிறகுகிளியை திறந்து விட்டு விடலாம்'' என்றார் கேசவன். அதற்கு அவன் ''அதெல்லாம் முடிறாது'' என்றான் உறுதியாக. கேசவன் பதில் பேசவில்லை. இருவரும் நடக்கத் தொடங்கினர். மறுவாரம் தன் அறையில் அமர்ந்து படித்துக் கொண்டிருந்தான் ரமணி.

''ஏம்பா, இந்தப் பூட்டு நல்லா பூட்டுமா?'' கேட்டாள் ரமணியின் தாய் கலா. ''பூட்டிப் பாரேன்'' என்றார் கேசவன். உடனே ரமணி இருந்த அறைக் கதவை இழுத்துப் பூட்டினாள் கலா. பூட்டிட்டேன் அப்பா என்றாள் கலா. திரும்பி கதவைப் பார்த்தார் கேசவன். மறுகணம் ஐயையோ என்று ரமணி அலறினான். பின் ''அந்தப் பூட்டோட சாவி போன மாசமே காணாமல் போயிட்டுது. மாற்றுச் சாவி போடணும்னு வச்சிருந்தேன். பூட்டுக்கடைக்காரர் ஊரில் இல்லை. இதைப்போய் பூட்டிட்டியே! கதவை திறக்கு முடியாதே'' என்றார் பதட்டத்துடன்.

''ரமணிஅறையிலேயே அடைபட்டு கிடக்க வேண்டியதுதான். நாளை காலை கடை திறந்ததும் பூட்டுக்கடைக்காரரிடம் போய் சாவி வாங்கி வர்றேன். உள்ளே குளியல் அறை இருக்கு. பேசாமல் உள்ளேயே இரு. வேறு வழியில்லை'' என்றார் கேசவன் நிதானமாக.

''அப்போ, சப்பாடு'' என்றான் ரமணி. ''ஜன்னல் வழியாக தர்றோம்.'' நாளை காலைவரை எனக்கு சிறை வாழ்க்கையா? என்று புலம்பிய ரமணி, வேதனையோடு அன்றிரவு தூங்கினான்.

இரவு தனியே படுத்து உறங்கிப்போனான். அம்மாவின் பக்கத்தில் படுத்து உறங்கியவனுக்கு அனிமை கசந்தது. வெளியே கூண்டில் அடைபட்டிருக்கும் இந்தப் பச்சைக் கிளிக்கும் இப்படித்தான் இருக்கும். நினைத்துக் கொண்டே தூங்கி விட்டான் ரமணி.

பொழுது விடிந்தது காலை காப்பியும், டிபனும் ஜன்னல்வழியே அம்மா கொடுத்தாள். சாப்பிட்டான். கதவை எப்போது திறப்பார்கள்? ஒரு கைதியைப்போல ஆவலுடன் காத்திருந்தான் ரமணி. மணி பத்து அடித்தது. வெளியே போன அப்பாவைக் காணோம். அதோ வந்து விட்டார். அவர் கையில் ஒரு சாவி. கதவை மெல்லத் திறந்தார் கேசவன். வெளியேஓடிவந்தரமணி அருகே நின்ற அம்மாவை ஓடிவந்து கட்டிக்கொண்டான். பின்நடந்துசென்று கிளிக் கூண்டைத் திறந்தான். பச்சைக்கிளியை வெளியே எடுத்தான்.

கதவருகே சென்று அதை விட்டான். வான வெளியில் சிறகடித்து சுதந்திரமாகப் பறந்து சென்றது அந்த பச்சைக்கிளி, ''ஏன்டா கிளியை வெளியே விட்டே'' கேட்டார் அப்பா.

'கிளியை கூட்டில் அடைப்பது பாவம்பா' என்றான் ரமணி. ஒருநாள் அறையில் அடைபட்டு கிடந்ததே உனக்கு நரகமா தோணிச்சி. பாவம் கிளி! ஆயுள் பூரா அதை அடைச்சிவைச்சா அது எவ்வளவு சிரமப்படும்' என்ற கேசவன், ரமணியைப் பார்த்தார். என்னப்பா, நான் செஞ்சது சரிதானே? கேட்டான் ரமணி.

ரொம்பச்சரி என்றார் கேசவன் சிரித்தபடி. இந்த விவகாரமே அவனுக்கு புத்தி வரவேண்டும் என்பதற்காக கேசவன் நடத்திய நாடகம் என்ற உண்மை ரமணிக்கு எப்படித் தெரியும்.

# இலங்கையின் அம்சங்கள்

1. உயரத்தில் கூடிய மலைச்சிகரம் – பீதுறுதாலகால 2524 மீட்டர்
2. உயரத்தில் கூடிய நீர்வீழ்ச்சி – பம்பரகந்த 262 மீட்டர்
3. மிகப் பெரிய பள்ளத்தாக்கு – தும்பறை பள்ளத்தாக்கு
4. மிக நீளமான ஆறு – மகாவலி கங்கை 335 கிலோ மீட்டர்
5. பெரிய ஆற்று வடிநிலப்பரப்பு – மகாவலி வடிநிலம் 10448 கி.மீட்டர்
6. அதிக மழைவீழ்ச்சி பெறும் இடம் – வட்டவளை 5500 மில்லி.மீட்டர்
7. பரப்பளவில் கூடிய நீர்த் தேக்கம் – சேனநாயக்க சமுத்திரம் 75 கி.மீட்டர்
8. பரப்பளவில் கூடிய கடனீரேரி – யாழ்ப்பாணக் கடனீரேரி 542 கி.மீட்டர்
9. நிலப்பரப்பில் கூடிய மாகாணம் – வடமாகாணம் 10472 கி.மீட்டர்
10. நிலப்பரப்பில் கூடிய மாவட்டம் – அனுராதபுரம் 7189 கி.மீட்டர்
11. அதிக குளிருடைய இடம் – கந்தபளை
12. அதிக கைத்தொழில் நிறுவனங்களை கொண்டுள்ள மாவட்டம் – கொழும்பு
13. மிக நீளமான 'ஏ' தரத்து பிரதான வீதி – கொழும்பு – மட்டக்களப்பு 'ஏ'4 வீதி
14. அதிகளவில் நெல்லை உற்பத்தி செய்யும் மாவட்டம் – குருநாகல்
15. நீர்ப்பாசனக் குளங்கள் அதிகம் உள்ள மாவட்டம் – முல்லைத்தீவு 18 குளங்கள்

*செ. கபிலினி – யா/ மானிப்பாய் மகளிர் கல்லூரி.*

# சிறார்களின் கைவண்ணம்




# இரண்டின் அழகு

| | | |
|---|---|---|
| வருவதும் போவதும் இரண்டு | – | இன்பம், துன்பம் |
| வந்தால் போகாதவை இரண்டு | – | புகழ், பழி |
| போனால் வராதவை இரண்டு | – | மானம், உயிர் |
| தானாக வருபவை இரண்டு | – | இளமை, முதுமை |
| நம்முடன் வருபவை இரண்டு | – | பாவம், புண்ணியம் |
| அடக்க முடியாதவை இரண்டு | – | ஆசை, துக்கம் |
| தவிர்க்க முடியாதவை இரண்டு | – | பசி, தாகம் |
| நம்மை விட்டு பிரியாதவை இரண்டு | – | பந்தம், பாசம் |
| அழிவைத் தருபவை இரண்டு | – | பொறாமை, கோபம் |
| எல்லோருக்கும் சமமானவை | – | இறப்பு, பிறப்பு. |

ஆர். திவ்யா
கிங்ஸ்ரன் சர்வதேச பாடசாலை.

# புவிசார் தகவல்கள்

*01) பசுபிக்சமுத்திரப் பகுதியின் பரப்பு எவ்வளவு?*
*196, 980000 சதுர மைல்.*

*02) நில மேற்பரப்பு எவ்வளவு?*
*57, 510, 000 சதுர மைல்.*

*03) நீர்ப் பரப்பு எவ்வளவு?*
*13, 944, 0000 சதுர மைல்*

*04) துருவ சுற்றளவு எவ்வளவு?*
*24869 சதுர மைல்*

*05) நிலநடுக்கோடு விட்டம்?*
*7926.07 சதுர மைல்*

*சுப்ரமணியம் – சுபாஜினி*
*கல்விளான், சிவபுரம்.*

# நாட்டின் தேசிய விளையாட்டு

| | | |
|---|---|---|
| இலங்கை | - | எல்லே / கரப்பந்தாட்டம் |
| இந்தியா | - | ஹொக்கி / கபடி |
| அவுஸ்திரேலியா | - | கிரிக்கட் |
| பாகிஸ்தான் | - | ஹொக்கி |
| துருக்கி | - | மல்யுத்தம் |
| ஜப்பான் | - | கராத்தே / ஜூடோ |
| ஸ்கொட்லாண்ட் | - | கால்பந்து |
| கனடா | - | பனிஹொக்கி |
| ஐக்கிய அமெரிக்கா | - | பேஸ்போல் |
| ஸ்பெயின் | - | ஜல்லிக்கட்டு |

*அ. கிருசாந்தினி*
*மல்லாவி.*



# சாதனைகளை விரும்பாத ஆஸி.வீரர்கள்?

விளையாட்டிலும் சரி வாழ்க்கையிலும் சரி சாதனைகளுக்கு என்றுமே தனி மதிப்பும், மரியாதையும் உண்டு. சாதனையை விரும்பாதவர்கள் யாருமே இருக்க முடியாது. ஆனால், இதற்கெல்லாம் ஆசைப்படாதவர்கள் போல ஆஸி வீரர்கள் சமீப காலமாக பேசி வருகின்றனர். அதைத்தான் ஜீரணிக்க முடியவில்லை. சாதனைகளுக்காக தங்கள் நாட்டு ரசிகர்களே வெறுப்பேறும் அளவுக்கு நீண்ட ஆண்டுகள் கிரிக்கெட் ஆடிய இவர்கள் கூறுவதை ஏற்றுக் கொள்ளலாமா?

இதோ இந்த சாதனை விரும்பிகளை பற்றி நீங்களும் தெரிந்து கொள்ளுங்கள்.

சர்வதேச கிரிக்கெட் அரங்கின் தலைசிறந்த துடுப்பாட்ட வீரர்களுள் ஆலன் போடரும்




ரிக்கி பொண்டிங்

ஒருவர். ஆஸி.அணியின் அற்புதமான தலைவரும் கூட. இவர் ஆடிய காலத்தில் 2 சாதனைகளை இலக்காக எண்ணி ஆடினார். ஒன்று இந்திய அணியின் முன்னாள் தலைவர் கவாஸ்கர் டெஸ்டில் எடுத்த 10 ஆயிரம் ஓட்டங்களைக் கடக்க வேண்டும், மற்றொன்று அதிக டெஸ்ட் ஆட்டங்களில் பங்கேற்க வேண்டும் என்பதுதான். பொதுவாக, ஆஸி அணியின் சிரேஷ்ட வீரர்களுக்கு நிகரான மாற்று வீரர்கள் இருப்பார்கள். போடர் இடத்தை பிடிப்பதற்காக மார்க் டெய்லர், மார்க்வோ என முக்கிய துடுப்பாட்ட வீரர்கள் வரிசையில் காத்திருந்தனர். இவர்களை எல்லாம் மதிக்காமல் 38 வயது வரை ஆடி எப்ப ஓய்வு பெறுவார் என சக வீரர்களாலேயே கேட்கப்பட்டவர். கவாஸ்கரின் (10,122) சாதனையை முறியடித்த பிறகும் இவர் அணியில் நீடித்தார். அந்தக் காலகட்டங்களில் அப்படி ஒன்றும் சிறப்பாக இவர் இல்லை. இவர் 156 டெஸ்ட்களில் விளையாடி 11 ஆயிரத்து 174 ஓட்டங்களை குவித்துள்ளார். இன்றளவும் முறியடிக்கப்படாத இந்த சாதனையை நோக்கித்தான் சச்சின் சென்று கொண்டிருக்கிறார்.

அலன்போடர், ஸ்டீவ்வோ இருவரின் வெற்றிக்கு பின்னால் இருந்து பெரிதும் உதவியவர் இயன்ஹீலி. எதிரணி வீரர்கள் சதம் அடித்தாலும், சாதனைகள் நிகழ்த்தினாலும் ஓடி வந்து பாராட்டை தெரிவிக்கக் கூடியவர். மெக்டர்மட், மெக்ராத், பிளமிங், கிலெஸ்பி ஆகியோரின் அற்புதமான பந்து வீச்சில் தனக்கென்று ஏகப்பட்ட பிடிகளை பிடித்து முன்னேறியவர். இவருக்கு 'சவாலாக' அமைந்தவர் ஆஸி.அணியின் முன்னாள் தலைவரான ரோட்னி மார்ஷ். இரும்பு கையுறைகளை கொண்டவர் என்று இவருக்கு ஒரு பட்டப்பெயரே உண்டு. இவர் 96 டெஸ்ட்களில் விளையாடி 355 பேரை தனது விக்கெட் காப்பால் ஆட்டமிழக்கச் செய்திருக்கின்றார். தனிப்பட்ட முறையில் விக்கெட் காப்பாளராக கடுமையாக உழைக்கக் கூடியவர். இவரின் சாதனை மீது ஹீலிக்கு ஒரு கண். விடாமல் விரட்டிக் கொண்டே இருந்தார். வயது ஏற, ஏற இவரால் ஆட்டமிழந்த வீரர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துக் கொண்டே போனது. திடீரென்று இவருக்கு போட்டியாக முளைத்தார் ஆடம் கில்கிறிஸ்ட். இவரின் ஆட்டத்திறன் தேர்வாளர்களை வெகுவாகக் கவர்ந்தது.

விக்கெட்காப்பாளரான ஹீலியை டெஸ்ட் ஆட்டத்திற்கு மட்டும் விக்கெட் காப்பாளராக நியமித்தனர். ஒரு நாள் ஆட்டத்திற்கு கில்கிறிஸ்ட் விக்கெட் காப்பாளரானார். மார்ஷின் சாதனையை இவர் முறியடிக்கும் வரை இவரின் பணியும் தொடர்ந்தது. முடிவில் 119 டெஸ்ட் வரை தாக்கு பிடித்து 395 பேரை ஆட்டமிழக்கச் செய்த சாதனையை நிகழ்த்திய பெருமையோடு கிரிக்கெட்டுக்கு டாட்டா காட்டிவிட்டுப் போய்விட்டார்.



ஷேன் வோர்ன்

டெஸ்ட் கிரிக்கெட்டில் அதிக வெற்றிகளை பெற்ற சாதனைத் தலைவர் என்ற பெருமையை பெற்றவர் ஸ்டீவ்வோ. போராட்ட குணமுடைய இவரின் கிரிக்கெட் வாழ்க்கை ராஜமரியாதையுடன் நிறைவு பெற்ற போதும், இவர் தனது அணிக்காக நீண்ட ஆண்டுகள் (18 ஆண்டுகள்) கிரிக்கெட் ஆடியவர் என்ற பெருமையோடு இந்தியாவுக்கு எதிராக சிட்னியில் நடந்த டெஸ்ட் ஆட்டத்தோடு ஓய்வு பெற்ற போதும், நிர்ப்பந்தத்தின் அடிப்படையிலேயே இவர் விடை பெற்று சென்றதாக கூறப்படுகிறது.

ஆஸி அணி இந்த ஆண்டு இறுதியில் இந்தியா வருகிறது. இதில் இந்தியாவை அதன் மண்ணிலே டெஸ்ட் தொடரை வீழ்த்தி ஓய்வு பெற வேண்டும் என்று விரும்பினார் ஸ்டீவ் வோ. ஆனால், பொண்டிங் ஒரு நாள் போட்டிகளில் தலைவராக திறம்பட அணியை நடத்திச் செல்ல இவரின் பாடு திண்டாட்டமானது.

வோ டெஸ்டில் கவாஸ்கரின் அதிக சத (34 சதங்கள்) சாதனையையும், டெஸ்டில் அதிக ஓட்டம் குவித்து போடரின் சாதனையையும் முறியடிக்க விரும்பினார். ஆனால், 32 சதங்களோடு, 10,927 ஓட்டங்கள் குவித்து இரண்டாம் இடத்தையே இவரால் பெற முடிந்தது. மேலும், 168 டெஸ்டில் விளையாடி அதிக ஆட்டங்களில் விளையாடிய வீரர் என்ற பெருமையோடு விடை பெற்றார். மேலும், கடந்த ஆண்டு இவரது தலைமையிலான அணி ஸிம்பாப்பேயை எதிர்த்து ஆடிய போது, மேத்யூ ஹெய்டன் 380 ஓட்டங்களை குவித்து உலக சாதனை நிகழ்த்தினார்.

இந்த ஆட்டத்தில் ஆஸி ஷேன் போர்ன் வலுவான நிலையில் இருந்த போது, லாராவின் 375 ஓட்டச் சாதனையை ஹெய்டன் முறியடித்ததும் 'டிக்ளேர்' செய்திருக்கலாம். ஆனால், ஹெய்டன் 400 ஓட்டங்களை கடக்க வேண்டும் என காத்திருந்தார் வாக். ஹெய்டன் 380 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். இந்த சாதனையை ஆன்டிகுவாவில் மேற்கிந்திய தீவுகள் அணியின் தலைவர் லாரா முறியடித்து 400 ஓட்டங்கள் குவித்தார்.

இந்த சாதனையைத்தான் இப்போது வீணாக தற்போதைய ஆஸித் தலைவர் பொண்டிங்கும், துணை தலைவர் கில்கிறிஸ்டும் சர்ச்சையாக்கி வருகின்றனர். மேலே, நாம் கூறியவர்கள் எல்லாம் அந்த அணியின் சாம்பிள்கள் தான். இந்த அணியில் பல வீரர்கள் சாதனையை எதிர்பார்த்து ஆடியவர்கள் தான். ஏன், வால்ஷின் 519 விக்கெட் சாதனையை ஷேன்வோன் முதலில் முறியடிக்க வேண்டும் என ஆஸி வீரர்கள் விரும்பினர்.

தற்போது தமது அணியின் முரளிதரன் இந்த சாதனையை நெருங்கியதும் முரளிதரன் பந்து வீச்சு பற்றி தேவையில்லாமல் சர்ச்சையை கிளப்பிவருகின்றனர். சாதனையே தங்களுக்காகத்தான் என்பது போல ஆடிவரும் இவர்கள் மற்ற வீரர்களின் சாதனைகளை விமர்சனம் செய்வதை இனியாவது நிறுத்திக் கொள்வார்களா?

# ஒலிம்பிக் போட்டியில் பிரிட்டிஷ் இளவரசி

அந்தக் காலத்தில் பட்டத்து இளவரசிகள் குதிரை மீது ஒய்யாரமாக அமர்ந்து பவனி வந்தனர். இவர்கள் அரச பரம்பரை அந்தஸ்தை பறைசாற்றவே இப்படி உலா வந்தனர். ஆனால், இப்போது காலம மாறி விட்டது. இதற்கேற்ப இளவரசிகளும் மாறிவிட்டனர். ஆம். சும்மா குதிரைச் சவாரி செய்வதை காட்டிலும் குதிரையேற்றப் போட்டியில் சாதிக்க துடிக்கிறார் பிரிட்டன் இளவரசி சாரா பிலிப்ஸ். இவர் ஏதென்ஸ் ஒலிம்பிக் வாய்ப்புக்காக காத்திருக்கிறார் என்பது தான் வியப்பு அளிக்கும் விஷயம்.



சாரா பிலிப்ஸ்

உலகில் மன்னர் ஆட்சி அனேகமாக ஒழிந்த போதும் பிரிட்டனில் மட்டும் அதன் மவுசு குறையவில்லை. அங்குள்ள ஊடகங்களில் இயன்றளவு மன்னர் குடும்பத்து செய்திகளுக்கு தான் அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது. இந்த வகையில் இளவரசி சாரா பிலிப்ஸ் எதிர்வரும் ஓகஸ்டில் (13–29) நடக்க உள்ள ஏதென்ஸ் ஒலிம்பிக் போட்டிக்கு ஆயத்தமாகி வரும் செய்தி மக்கள் மத்தியில் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

இரண்டாம் எலிசபெத் மகாராணியின் மகள் ஆனுக்குப் பிறந்தவர் தான் சாரா. இவர் இளம் பருவத்தில் இருந்தே விளையாட்டில் மிகுந்த ஆர்வம் கொண்டவராக இருந்தார். பெற்றோர் குதிரையேற்றப்போட்டிகளில் முத்திரை பதித்தவர்கள். இவரது அப்பா மார்க் பிலிப்ஸ் 1972இல் நடந்த மூனிச் ஒலிம்பிக் குதிரையேற்றத்தில் தங்கம் வென்றார். இதே போல் அம்மா ஆன் 1976 இல் மான்ட்ரியலில் நடந்த ஒலிம்பிக் போட்டியில் பிரிட்டன் சார்பில் பங்கேற்றார்.

இப்படி குடும்பமே குதிரையேற்றத்தில் பிரகாசிக்க சாராவுக்கும் ஒலிம்பிக் ஆசை வந்தது. இதற்காக தீவிர பயிற்சி மேற்கொண்ட இவர் உள்ளூரில் நடந்த பல்வேறு போட்டிகளில் பங்கு கொண்டார்.

பர்க்ளி குதிரை ரேசில் இரண்டாவதாக வந்த இவர் 2002 இல் நடந்த ஐரோப்பாவின் இளம் குதிரை வீராங்கனைகளுக்கான போட்டியில் வெள்ளிப்பதக்கம் வென்றார். பின்னர் பிரிமியர் லீக் போட்டியிலும் ஜொலித்தார்.

இவர் பங்கேற்ற போட்டிகளில் எல்லாம் அசத்த ஏதென்ஸ் ஒலிம்பிக் குதிரையேற்றப் போட்டிக்கான 14 பேர் கொண்ட உத்தேச அணியில் இடம் பிடித்தார். இதில் இருந்து 5 பேர் மட்டுமே ஒலிம்பிக் போட்டிக்கு தேர்வு செய்யப்படுவர் என்பது குறிப்பிடத்தக்கது. இதற்கான அறிவிப்பு எதிர்வரும் ஜூலையில் வெளியிடப்படும்.

22வயதான சாரா, பிரிட்டிஷ் மன்னர் குடும்பத்தின் பத்தாவது வாரிசு ஆவார். சார்ள்ஸ், டயானா போல் சர்ச்சை எதிலும் சிக்காத இவர் ஒலிம்பிக்கில் சாதிப்பதையே குறிக்கோளாக கொண்டுள்ளார். இளவரசி என்பதற்காக பிரிட்டிஷ் ஒலிம்பிக் குழுவில் விசேஷ சலுகைகள் எதுவும் தரப்படமாட்டாது. மற்ற வீரர்களைப் போல் கடின உழைப்பு மூலமே அணியில் இடம்பெற முடியும்.

இந்த நிலையில் ஒலிம்பிக் உத்தேச அணியில் இடம் பெற்றது குறித்து சாராவிடம் கேட்டதற்கு "குதிரை மீது அமர்ந்து தடைகளை தாண்டி அதிவேகமாக செல்லும் குதிரையேற்றப்போட்டி கடினமானது தான். இப்போட்டியில் எனக்கு இருந்த ஆர்வம் காரணமாகவே இந்த அளவுக்கு முன்னேற்றம் கண்டுள்ளேன். உத்தேச அணியில் இடம் பெற்றது மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது. ஒலிம்பிக்கில் எனது பெற்றோரைப் போல் சாதிக்க விரும்புகிறேன்" என்று கூறினார்.

# தற்கொலைகளை தடுக்கும் பிரெட் லீயின் அறக்கட்டளை

அவுஸ்திரேலிய வீரர்கள் கடும் போக்கானவர்கள், மைதானங்களில் ஏனைய வீரர்களுடன் முரண்படுபவர்கள். எதிர் அணி வீரர்களின் மனதைப் புண்படுத்துபவர்கள்; என்றெல்லாம் அனைவருக்கும் தெரியும். ஆனால், அந்த அணியிலும் மனிதாபிமானம் உள்ளவர்கள்—ஏனைய கஷ்டப்பட்டவர்களுக்கு உதவி செய்பவர்கள்—இருக்கத்தான் செய்கிறார்கள். இதனைத்தான் விதி விலக்கு என்று கூறுவார்களோ?



பிரெட்லி

கடந்த வாரம் அவ்வாறு இளகிய மனம் படைத்த ஆஸி.வீரர் ஸ்டீவ்வோ இந்தியாவின் கொல்கத்தாவில் உள்ள அநாதை சிறுவர் சிறுமியர்களுக்கு அங்குள்ள "உதயன்" இல்லத்தினூடாக உதவி வருவதைப் பார்த்தோம். இந்த வாரம் ஆஸி.அணியின் அதிவேகப் பந்து வீச்சாளர் பிரெட லீ தொடர்பாக பார்ப்போம். பிரெட் லீ கடிகார நிறுவனம் ஒன்றின் விற்பனை பிரதிநிதியாக கடந்த வாரம் இந்தியாவுக்கு சென்றிருந்தார். கிரிக்கெட் தவிர விளம்பரத்தில் உழைக்கும் பிரெட் லீ அதன் மூலம் வரும் வருவாயைக் கொண்டு மெல்போர்னில் அறக்கட்டளை அமைப்பொன்றை உருவாக்கியுள்ளார். அவுஸ்திரேலியாவில் தற்கொலைக்கு முயற்சி செய்யும் இளைஞர்களுக்கு வாழ்க்கையில் புதிய நம்பிக்கையை ஏற்படுத்தும் பணியை இந்த அறக்கட்டளை மேற்கொள்கின்றது. இதனூடாக தற்போது பல நூற்றுக் கணக்கான இளைஞர்கள் பயன்பெற்று வருகின்றனர். அறக்கட்டளையின் தொலைபேசி இலக்கம், முகவரி என்பவற்றை பிரபலப்படுத்தி தற்கொலை எண்ணம் தோன்றுகின்றவர்களை தம்முடன் தொடர்பு கொள்ளச் செய்து அவர்களின் மனவலிமையையும், போராட்ட குணத்தையும் அதிகரிப்பதுடன் அவர்களின் தற்கொலை முயற்சிகளுக்கான காரணத்தையும் அறிந்து இயன்றவரை அதனையும் நிவர்த்தி செய்கின்றது பிரெட் லீயின் இந்த அறக்கட்டளை.

இந்த அறக்கட்டளை தொடர்பாக பிரெட் லீ தெரிவித்ததாவது:–

"எமது அறக்கட்டளையுடன் தொடர்பு கொள்கின்றவர்கள் நாளுக்கு நாள் அதிகரிக்கின்றார்கள். விளையாட்டில் சாதிக்கும் போது ஏற்படும் திருப்தியைவிட அதிகமாக நான் இத்தனை உயிர்களைக் காக்கின்றேன் என்பது எனக்கு திருப்தி அளிக்கின்றது. ' இவ்வாறு பிரெட் லீ' மேலும் தெரிவித்தார்.

# ஊடக சுதந்திரத்திற்கான ஒரு சுதந்திர நிகழ்ச்சி

(கடந்த வாரத் தொடர்ச்சி......)

1983 ஜூலை 16 ஆம் திகதி சற்றடே றிவியூ, சுதந்திரன் பத்திரிகைகள் அரசாங்கத்தால் சீல்வைக்கப்பட்டன.

1987 ஒக்டோபர் 10 இல் ஈழமுரசு, முரசொலி, ஈழநாடு பத்திரிகைக் காரியாலயங்கள் இந்திய இராணுவத்தால்குண்டு வைத்து தகர்க்கப்பட்டன.

1989 இல் பிரபல பத்திரிகையாளர் றிச்சட் டி சொய்சா அரச படைகளால் கடத்திச் செல்லப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டார்.

1994 ஒக்டோபர் 28 ஆம் திகதி டெய்லி நியூஸ், தினகரன் ஆகிய பத்திரிகைகளின் முதற்பக்கங்கள் பிரதம மந்திரியின் காரியாலயத்தில் வைத்து திருத்தம் செய்யப்பட்டன. சுதந்திர பத்திரிகையாளர்களின் கூற்றுப்படி டெய்லி நியூஸ் பத்திரிகையின் 17, 000 பிரதிகளும், தினகரன் பத்திரிகையின் 25, 000 பிரதிகளும் வாபஸ் பெறப்பட்டு புதிய பிரதிகள் முன்பக்கத்திருத்தங்களுடன் திரும்பவும் அச்சிடப்பட்டன. தலைப்புச் செய்தி ''நான் பாதுகாப்பு படைகளில் பூரண நம்பிக்கை கொண்டுள்ளேன்.'' பிரதமர் எனமாற்றப்பட்டது. அடுத்துவந்த பல நாட்களில் இப்பத்திரிகைகளில் முதற் பக்கத்தை அச்சிடுவதற்கு முன்னர் அலரி மாளிகைக்கு அனுப்பப்பட வேண்டி இருந்தது. ஆனால் வேறு மாற்றங்கள் செய்யப்பட்டதாக அறியப்படவில்லை.

## பத்திரிகைகள் மீதான அரசின் அடாவடித்தனங்கள்

1996 இல் T.N.L முகாமையாளர் இசினி விக்கிரமசிங்க பெரேரா பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டார். இவர் T.N.L நிறுவனத்தின் தலைவரின் மகளும் ரணில் விக்கிரமசிங்கவின் மருமகளுமாவார்.

1998 இல் வீரகேசரி வவுனியா செய்தியாளர் மாணிக்கவாசகம் மற்றும் ஸ்ரீ கஜன் இருவரும் பயங்கர வாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டனர்.

1999 இல் தினகரனின் பருத்தித்துறைச் செய்தியாளர் திருச்செல்வம் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டார்.

19.10.2000. அன்று B.B.C, சூரியன் எப்.எம், வீரகேசரி ஆகிய உள்நாட்டு சர்வதேச ஊடகங்களின் யாழ்ப்பாண செய்தியாளர் மயில்வாகனம் நிமலராஜன் சுட்டுக் கொல்லப்பட்டார். இவரைச் சுட்டவர்கள் நினைக்கலாம் தாம் சுட்டது கெட்டித்தனம் என்று.

ஆனால், அரசபடைகளின் மனித உரிமை மீறல்கள், செம்மணிப் புதைகுழிவிவகாரம், தேர்தல் மோசடி போன்ற அரசபடைகளின் நடவடிக்கைகளை வெளியிட்டமைக்காகவே அவர் கொலை செய்யப்பட்டார்.

1998 ஏப்ரல் சண்டே டைம்ஸ் பாதுகாப்பு செய்தியாளர் இக்பால் அத்தாஸ் வீட்டில் வைத்து அச்சுறுத்தப்பட்டார்.

இப்படியான சம்பவங்கள் இன்றுவரை நடைபெறுகின்றன.

## பத்திரிகையாளர் மாணிக்கவாசகத்தின் கருத்துக்கள்

அடுத்து மாணிக்கவாசகம் தனது செவ்வியில் தமிழ் ஊடகவியலாளர்கள் சுதந்திரமாக தமது பணியை முன்னெடுக்க முடியாதிருப்பதையே உணரமுடிகிறது. தமிழ் ஊடகவியலாளருக்கு தனிப்பட்ட பாதுகாப்பு மட்டுமல்ல தொழில்சார் பாதுகாப்பும் வழங்கப்படுவது இல்லை. ஒரு இக்கட்டான நிலை வரும் போது அவர் சார்ந்த நிறுவனம் அவருக்கு குரல் கொடுக்க மறுக்கின்றது. இது உண்மை.

1997 இல் T.N.L ஐ சேர்ந்த சிரேஷ்ட ஊடகவியலாளர் தாக்கப்பட்டார். அதற்கு ஊடகம் குரல் கொடுக்க மறுத்து விட்டது.

போர் நடைபெறுகின்ற இடங்களுக்கு 1992 இற்கு முன்னர் செய்தியாளர்கள் சென்று இருக்கிறார்கள். அதன் பின்னர் இன்றுவரை கூட்டங்கள், மேடைப் பேச்சுக்குச் சென்று அடிவாங்கியவர்கள் எம்மில் இருக்கின்றனர். அதேபோல் வெளிநாட்டு ஊடகவியலாளரான லண்டன் சன்டே டைம்ஸ் பத்திரிகையில் பணிபுரிபவர்வன்னிக்குச்சென்று திரும்பி வரும்போது தாக்கப்பட்டு ஒரு அவயவத்தையும் இழந்தார்.

உண்மையில் அவரை நேரில் கண்டு கதைத்தபோது, சப்பாத்துக்காலால் கூட உதைபட நேர்ந்ததாக அவர் கூறினார். இதனை அப்போது வெளியிட முடியாத நிலையில் இருந்தோம் என்றார்.

## பத்திரிகையாளர் வித்தியாதரனின் செவ்வி

யாழ்ப்பாணத்தில் 17 வருடங்களாக யுத்தம் மலிந்த பூமியில் செயலாற்றிய என். வித்தியாதரனின் செவ்வி உண்மையில் ஊடகவியலாளர் அனைவரையும் மெய்சிலிர்க்க வைத்தது.

''சிங்கள ஊடகங்கள் இனவாதப் போக்கில் செயற்படுகின்றன. தமிழ் ஊடகங்களும் நடுநிலையாகச் செயற்படவில்லை என்று கூறப்படுகின்றது. இது பற்றி உங்கள் கருத்து என்ன?''

— என்று அவரிடம் கேட்கப்பட்டது.

''சமாதான நிலைமைகளில் நடுநிலைமை என்பதற்கு திட்டவட்டமான அர்த்தத்தை — வியாக்கியானத்தைக் கொடுக்கலாம். ஆனால் இன்று நிலவுவதும் அசாதாரண நிலை — சிங்கள பேரினவாதம் தனது அடக்கு முறையை — அதிகாரத்தை — நிலைநாட் முயல்கிறது.

தமிழினம் ஒரு விடுதலை வேள்வியை முன்னெடுத்து நிற்கிறது. தனது எதிர்காலத்தை — எதிர்காலச் சந்ததியின் இருப்பை — நிறுத்துவதற்காக உயிர்த்தியாகப் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறது தமிழினம். அத்தகைய இனத்தின் நீதிக்காக — அந்த மக்களின் அபிலாசைகளுக்காக — உழைப்பதைத் தவிர தமிழ் ஊடகங்களுக்கு வேறு 'நடுநிலை'ப் போக்கே இல்லை. தமிழ் ஊடகங்கள் அனைத்துமே இந்த யதார்த்தத்தை — உண்மையை — புரிந்து கொண்டு அதன்படி செயற்படுகின்றன என்றே நான் கூறுவேன்.

இதைவிட்டு, சாதாரண காலத்தைப் போல — யுத்த நெருக்கடியும் விடுதலைப் போர் தீவிரமும் சூழ்ந்து நிற்கும் இக்காலத்தில் — ஓரினம் வாழ்வா, சாவா என்ற நிலையில் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கும் போது — இரண்டு இனங்களுக்கும் இடையில் ஒரு நடுநிலைப் போக்கு என்று விதண்டா வாதம் பேசுவது சுத்த அபத்தம் என்றே கருதுகிறேன்'' — என்றார் அவர்.

அலுவலக நேரத்தில் ஸ்ரீலங்கா விமானப் படைக்கு சொந்தமான விமானம் குண்டு மழை பொழியும் போது கூட பதுங்கு குழிக்குள் இருந்து செய்தித்தாள் அச்சிட்டவர்கள் இவர்கள். உண்மையில் துணிச்சலான ஊடகவியலாளர் இவர்கள் தான் என்பதை சர்வதேச மட்டத்தில் எடுத்துக் காட்டியவர்கள். அவருடன் அப்போது பணியாற்றிய ஊழியர்களில் இரண்டுபேர் இறந்தனர். இருவர் அவயவங்களை இழந்தனர். இவ்வாறான மிகவும் வளர்ச்சியடைந்த துணிச்சலான பத்திரிகையாளர்கள் அப்போது இருந்தார்கள்.

இதனைவிட, வித்தியாதரன் குறிப்பிட்டது, உண்மையில் தமிழ் மக்கள் ஆகிய எம்மவரின் நெஞ்சங்களைத் தொட்டது. அது இனவாதத்தை தூண்டி கட்சிகளுக்கு சார்பாக பேசப்பட்டு வரும் இனவாதத்தை வளர்க்கும் பெரும்பான்மை ஊடகங்கள் பற்றியதாகும். அதேநேரம் தமிழ், முஸ்லிம் சிறுபான்மைச் சமூகம் சமாதானத்தை எதிர்பார்த்துக் கொண்டு எதிர்காலம் கேள்விக்குறியான நிலையில் இருக்கும் போது பத்திரிகா தர்மம் நடு நிலை வகிக்க முடியாது. சிறுபான்மையினரை இது விடயத்தில் ஊக்குவிப்பது இன்றியமையாததாகும்.

## இந்தியப் பத்திரிகையாளரின் கருத்து

இந்தியாவைச் சேர்ந்த பத்திரிகையாளர் உண்மையில் ஓர் அருமையான கருத்தை வழங்கினார். அப்படி இலங்கையிலும் நடக்குமாக இருந்தால் ஊடகவியலாளர் எவரும் பாதிக்கப்பட்டவராக கருதப்படமாட்டார்கள்.

அதாவது இந்திய சுதந்திரப் போராட்டத்தோடு வளர்ந்தவர்கள் ஊடகவியலாளர்கள். எந்த நிலையிலும் ஒன்றாகவே தாக்கப்படுகின்றனர். சுதந்திரம் கிடைக்கும் போதும் ஒன்றாக கிடைக்கிறது. இலங்கையில் அப்படி இல்லையே. ஒருவரை மற்றவர் வீழ்த்த வேண்டும். குறிப்பாக தமிழ்ப்பத்திரிகைகளை வீழ்த்தி பேரினவாதப் பத்திரிகையை வளர்க்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள்.

ஆனால், ஒன்றை ஒத்துக் கொண்டார் இலங்கைத் தமிழரும் இந்தியத் தமிழரும் ஒற்றுமையானவர்கள். ஊடகங்களும் சின்னத்திரைகளுமே அவர்களது சுய உரிமையை கொச்சைப்படுத்துகின்றன என்பதை ஒத்துக் கொண்டார்.

## தயாபரனின் செவ்வி

அடுத்து சூரியனின் பிராந்திய செய்தியாளர் தயாபரனின் செவ்வியை நோக்கின் உண்மையில் மக்களுக்காக அதாவது கல்வி கற்றும் மாணவரின் எதிர்காலப் பிரச்சினையை கருத்தில் கொள்ளாது அவரையும் தாக்கி மாணவர்களையும் அரசபடைத் தரப்பு தாக்கியது. அடுத்து நெல்லியடியிலும் ஊடகவியலாளர் எனத்தெரிந்தும் தாக்கினர். இதே போல மானிப்பாய் பகுதியிலும் தாக்கினர்.

## சூரியன் வலையில், பாலேந்திரன் காண்டீபன் தயாரித்து வழங்கிய நிகழ்ச்சியில் இருந்து

எனவே இதில் இருந்து நாம் பார்த்தால், தாம் செய்யும் எந்த அட்டூழியங்களும் சர்வதேச மட்டத்திற்கும் போகப்படாது என்பதனை மனதில் வைத்து திட்டமிட்டு நடத்தப்பட்டவை என்றே நாம் கூறலாம். இதனைவிட மனதை இன்னும் உருக்கிய சம்பவம் யாழ்ப்பாணம் மாம்பழம் சந்திப்பகுதியில் நடந்தது. அது ஊடகவியலாளர் ஒருவரை அடித்து மண்டை உடைக்கப்பட்ட சம்பவமாகும். இவை அனைத்தும் சர்வதேச மட்டத்திற்கு தெரிந்தவையே.

உண்மையில்தேவராஜா அதாவது வீரகேசரிப் பத்திரிகை வாரஆசிரியர் கூறிய இரண்டு காரணங்களும் நம் நாட்டில் இல்லை. அதாவது கொழும்பு பல்கலைக்கழகத்தில் டிப்ளோமா இன் ஜேனலிசம் இருக்கிறது. பட்டப்படிப்போ முதுமானியோ இல்லை. மற்றும் வெளிநாட்டுக்கு பலவருடங்களிற்கு முன் இலங்கை வானொலி தேசிய சேவை கலைஞர்களுக் கெல்லாம் பயிற்சி அளித்தது போல் தற்போதய நிலைகளில் இல்லை.

ஆனால் இதே நிகழ்ச்சியில் சிவநேசச்செல்வன் பேசும்போது, இதழியல் கல்லூரி தொடக்கப்படுவதாகவும் ஏறக்குறைய 1 லட்சம் பணமாவது செலவாகும் என்றும் அதற்கு புலமைப்பரிசில் திட்டம் வழங்க வெளிநாடுகள் முன்வந்தால் வழங்குவோம் என்றும் கூறினார். அது ஒரு நல்ல விடயமாக இருந்தாலும் இந்த வாய்ப்பு பணமுள்ள மாணவர்களுக்கே முக்கியமானதாக இருக்கின்றது. புலமைப்பரிசில் கிடைக்காத பட்சத்தில் ஒரு ஏழை மாணவன் ஊடகவியலாளன் ஆக முடியாது.

சிங்கள ஊடகவியலாளர் ஒருவர் தனது சொந்தக் கருத்தை தமிழில் கூறினார். உண்மையில் அருமையானது. ஊடகம் என்பது சிலரை, சில கட்சியை, சில தனிநபரைச் சார்ந்து சேவையாற்ற வேண்டிய நிர்ப்பந்த நிலை ஏற்பட்டுள்ளது. இன்னுமொரு முக்கிய விடயம், தமிழரே தமிழை பிரபல்யமாக பேச மறுக்கும் போது தமிழையும் தாய் மொழியாக பேச முனைந்து பேசியது பெருமைப்பட வேண்டியது.

## பேராசிரியர் சிவத்தம்பி கூறியவை

இதனை விட பேராசிரியர் சிவத்தம்பி குறிப்பிட்ட ஊடகவியலாளர் பாதிப்பு என்பது ஒட்டுமொத்தமான பிரச்சினையாக உள்ள வியடமாகும். காரணம் பாதிக்கப்பட்டவர்கள் தமிழர்கள். கடந்த ஆறு, ஏழு மாதங்களாக ஊடகம் சம்பந்தமான பிரச்சினைகள் வானலை வளிகளில் தவழ்வதாக குறிப்பிட்டார். அது உண்மை.

சிவராமின் வீட்டிற்குள் நீதிமன்ற ஆணையின்றி சோதனை நிகழ்ந்தது பற்றிக் கேட்ட போது, இப்படியான சட்டத்திற்கு முரணான நிலையில் செயற்படுவது கூடாது. ஊடகத்திற்கும், ஊடகவியலாளனுக்கும் சுதந்திரம் வேண்டும் என்று கூறினார். ஆனால், இன்று வரை எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இதனோடு மற்றும் ஒரு முக்கியமான வினாவினை தயாரிப்பாளர் காண்டீபன் தொடுத்திருந்தார். அதாவது அவர்களுக்கு உயிருக்கு உத்தரவாதம் கொடுக்க வேண்டும் என்பது. அதற்கு பிரதி அமைச்சர் கூறியுது என்னைப் பொறுத்தவரை பொருத்தமற்ற ஒன்றாகவே நான் குறிப்பிடுவேன்.

தனியான அடையாள அட்டைகளை வழங்கல் வேண்டும் என்பது சரி. ஆனால், ஊடக அடையாள அட்டையோடு செய்தி சேகரிக்கும், புகைப்படம் எடுக்கும் கலைஞர்களையும் தேடி அடிக்கிறார்களே.

மற்றும்அவர்களுக்கு என்று தனியான கூட்டம் கூடி ஆராயவேண்டும் என்று கூறினார். சென்ற ஆண்டு யாழ்.பிரதேச செயலகத்தில் கூடி ஆராய்ந்து கருத்துக்கள் பெற்றார்கள். என்ன செய்தார்கள்?

அத்தோடு, உழைப்புக்கேற்ற ஊதியம் தேவை அவர்களின் ஊதியம் சம்பந்தமான பிரச்சினையை உங்களால் தீர்க்க முடியுமா என்று கேட்கப்பட்டபோது, பிரதி அமைச்சர் கொடுத்த பதில் மிகவும் வேதனையானது. அரச ஊடக வியலாளனாக இருந்தால் உத்தரவாதங்கள் வசதிகள் செய்து கொடுக்கப்படும் என்றார். அப்படிச் செய்வது முற்றிலும் தவறு. அரசு சார்ந்த ஊடகங்கள் உண்மைக்குப் புறம்பானவை. அரசுக்கு விலை போவபை, கட்சிசார்ந்திருப்பவை, உண்மைகளை மறைக்கின்றன. இவர்களுக்கு ஏன் ஊதியம்? இவர்களுக்கு ஏன் பாதுகாப்பு உத்தரவாதம்.

உண்மையில் பிரதி அமைச்சர் கூறியது ஒன்று மனம் வருந்தத்தக்கது. தனியார்

## திருநாவுக்கரசு சிந்துஜா கொழும்பு பல்கலைக்கழகம்

ஊடகங்கள் எல்லாம் ஒரு கட்சி சார்ந்து ஒரு கட்சியை ஆட்சிக்கு கொண்டுவர வேண்டும் என்று எதிர்ப்பார்த்தன. ஆனால், அது முடியவில்லை என்றார். ஆனால், தனியார் ஊடகங்களைப் பொறுத்தவரை நடுநிலையாகவே அவை இருப்பதாக (தமிழ் மக்களைப் பொறுத்தவரை) எமக்குப்படுகிறது.

(முற்றும்)

அவுஸ்திரேலியாவில்
சுடர்ஒளி
பெற்றுக்கொள்ள
எமது விநியோகஸ்தர்கள்
M.K.S.International
23-25 Pultney St.
Dandenong 3175
Australia :- 03 97 013165

சுவிஸில் உங்கள் அபிமான
சுடர்ஒளி
விளம்பர முகவர்
MILITAR STR.84
8004 - ZURICH
SWITZERLAND

# பெரும்பான்மையைத் தக்கவைத்துக் கொள்வதற்கான அரசின் பிரயத்தனங்கள் பலனளிக்குமா?



13 ஆவது நாடாளுமன்றத் தேர்தலின் பின்பு பதவிக்கென தெரிவாகியிருக்கும் அரசு எதிர்கொண்டுள்ள மிக முக்கியமாதும், தலையானதுமான விவகாரம் அது தனது பெரும்பாண்மையை நாடாளுமன்றில் நிருபிக்க இருப்பதாகும்.

எதிர்வரும் 18 ஆம் திகதி நாடாளுமன்ற குழுக்களின் பிரதித்தலைவர், மற்றும் பிரதிச் சபாநாயகர் தெரிவின்போது அரசு எதிர் நோக்கியுள்ள அதன் பெரும்பான்மைப் பலம் நிருபணமும் பிரதான விவகாரமாக மாறியிருக்கிறது.

## பங்காளிகளை ஜனாதிபதி சமரசப்படுத்த வேண்டிய நிலை

அரசின் கூட்டுக் கட்சியில் அங்கம் வகிக்கும் 42 ஆசனங்களைக் கொண்ட ஜே.வி.பி. கட்சி அரசின் சமாதான முயற்சிகள், மற்றும் நோர்வேயின் தலையீடு, கண்காணிப்புக் குழுவின் நடவடிக்கைகள் என்பவற்றில் அரசுக்கு மிகுந்த தலைவலியை ஏற்படுத்தியிருக்கின்றது.

ஏற்கனவே, கடந்த வருடத்தின் போது தம்மால் இடைநிறுத்தப்பட்ட சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்காவிடில் மேற்குலகம் நாட்டின் அபிவிருத்திக்கென வழங்கும் நிதிகள் கிடைக்காமல் போய் விடும் என்ற நெருக்கடி நிலைக்குள் பேச்சுக்களை மீண்டும் நோர்வேயின் அனுசரணையுடன் ஆரம்பித்த ஜனாதிபதி, தனது சமாதான நடவடிக்கைகளை திரும்பவும் இடைநிறுத்துவதா அல்லது தொடர்வதா என்பதில் ஒரு முடிவை எடுக்க முடியாத நிலைக்குள் தள்ளப்பட்டிருக்கிறார்.

யுத்த நிறுத்தம் முறையாக கடைப்பிடிக்கப்படுகின்றதா என்பதை கண்காணிக்கும் குழுவில் மேற்குலகின் பிரசன்னத்தை மறுதலித்து அதற்குப் பதிலாக ஆசிய நாட்டவர்களின் பிரசன்னத்தையே ஜே.வி.பி வலியுறுத்தியுள்ளது. அதுமட்டுமன்றி இந்தியாவின் தலையீட்டையே பேச்சுக்களின் போது பெரிதும் விரும்புவதாக கூறியுள்ள ஜே.வி.பி.யினர் நோர்வே மீதான தமது நம்பிக்கையீனத்தையும் வெளியிட்டிருக்கிறார்கள்.

மேலும், அமைச்சர் கதிர்காமர் புதுடில்லி விஜயத்தின் போது விடுதலைப்புலிகளை தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகளாக ஏற்றுக் கொண்டுள்ளதை ஜே.வி.பியினர் கடுமையாகச் சாடியுள்ளனர்.

## அரசுக்கான ஆதரவு குறித்து சிஹல உறுமய

ஊ என சத்தமிடுவதன் மூலம் புலிகளை விரட்ட முடியாது என்று கூறியுள்ள ஹெல உறுமயவினர், இடைக்கால தன்னாட்சிக்கான அலகு தொடர்பாக சம்பந்தன் எம்.பி நாடாளுமன்றத்தில் தெரிவித்திருக்கும் கருத்துக்களுக்கு அரசு தனது நிலைப்பாட்டை வெளியிட வேண்டும் என காட்டமான தொனியில் தெரிவித்திருக்கிறார்கள்.

மேலும் தமது நடுவு நிலைமையின் போது அரச தரப்பாலும், ஜே.வி.பியினராலும் தனக்கேற்பட்ட சோதனைக்கும் – வேதனைக்கும் ஜனாதிபதியிடம் பரிகாரம் கேட்டிருக்கிறது ஹெல உறுமய கட்சி. கதிர்காமரின் சமாதான முயற்சிகள் குறித்த பேச்சுக்களை கடுமையாகச் சாடியுள்ள ஹெல உறுமய தனது நடுவு நிலைமையில் இருந்து விலகி அரசுக்கு எதிராக வாக்களித்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்றே தோன்றுகிறது.

## ஐ.தே.கட்சியின் புதிய வியூகங்கள்

அடுத்த 6 மாதகாலத்தினுள் பொதுத் தேர்தல் ஒன்றை எதிர்பார்க்குமாறு தனது கட்சி உறுப்பினர்களுக்கு அறிவித்துள்ள ஐ.தே.கட்சியின் தலைமை, கடந்த ஆட்சிக் காலத்தின் போது மக்களுக்கான நலன்புரி நடவடிக்கைகளில் கவனம் செலுத்தாமல் விட்ட தவறையும் ஒத்துக் கொண்டு, அடுத்த கட்ட முதல் நடவடிக்கையாக மக்களுக்கான அபிவிருத்தித் திட்டங்களில் தான் கவனம் செலுத்தப் போவதாக கூறியிருக்கிறது. மறுபுறத்தில் தனது நாடாளுமன்றத்துக்கான உறுப்பினர் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கான ஏற்பாடாக, ஐக்கிய தேசியக் கட்சி எம்.பிக்களை விலைக்கு வாங்கும் முயற்சிகளிலும் அரசு இறங்கியிருக்கிறது. இந்த நடவடிக்கைகளுக்கென தனது கட்சியின் இரண்டு சிரேஷ்ட அமைச்சர்களை நியமித்து ஐ.தே.கட்சி உறுப்பினர்களை பிரித்தெடுக்கும் நடவடிக்கைகளில் அரசு இறங்கியிருக்கிறது.

## தமிழ் தரப்பினர் அரசை நோக்கிய ஆட்சேபனைகள்

எதிர்வரும் நாடாளுமன்றக் கூட்டத்தின் போது ஜனாதிபதியின் கட்சியை ஆதரிப்பதற்கான எந்த சூழ்நிலைகளோ, நடவடிக்கைகளோ தமிழரசுக் கட்சி எம்பிக்களுக்கு ஏற்படாது என்றே கூற வேண்டும். ஆயித்தியமலை விடுதலைப்புலிகளின் முகாம் மீதான தாக்குதல்கள், கந்தப்பளை தமிழர்கள் மீதான இனவாத வன்முறை நடவடிக்கைகள், தமிழ் எம்.பிக்கள் தொடர்பாக கதிர்காமர், தெரிவித்திருக்கும் அவநம்பிக்கையான கருத்துக்கள் மற்றும், மேற்குலகின் சமாதான நடவடிக்கைகளை ஏற்க மறுக்கும் பங்காளிக் கட்சிகளின் நடவடிக்கைகளை அரசு பார்த்துக் கொண்டிருக்கின்ற நிலைமை எல்லாம் சேர்ந்து அரசுக்கெதிரான ஒரு எதிர் நிலைப்பாட்டினையே தமிழ் எம்.பிக்கள் எடுப்பார்கள் என நிச்சயமாக எதிர்பார்க்கலாம்.

இவற்றுக்கும் மேலாக கருணாவின் செயற்பாடுகளுக்கு மறைமுகமான ஒத்துழைப்புக்களை இராணுவ ரீதியாக வழங்க அரசு எடுக்கும் முயற்சிகள், கொழும்பில் தமிழர்களின் வீடுகள் மீதான சோதனைக் கெடுபிடிகள் என்பன குறித்தும் தமிழ் எம்.பிக்கள் தமது கடும் கண்டனத்தையும் விசனத்தையும் அரசுக்கும் தெரிவித்திருக்கிறார்கள்.

## மலையகக் கட்சிகளுடனான அரசின் பேச்சுக்கள்

தத்தமது பெரும்பான்மைப் பலத்தினை நிரூபிப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ள அரசும், எதிர்க்கட்சியான ஐ.தே.கட்சியும், மலையக நாடாளுமன்ற உறுப்பினர்களை தம்பக்கம் இழுத்துக் கொள்வதில் மிகவும் குறியாக இருக்கிறன.

பிந்தியதாக, ஆறுமுகன் தொண்டமானுடன் நீண்ட நேரத் தொலைபேசி மூலமாக ஜனாதிபதி உரையாடியிருக்கிறார். கந்தப்பளை வன்முறைகள் தொடர்பாகவும் தொண்டமான் மாற்று நடவடிக்கைகள் பற்றி பேசியிருக்கிறார். ஜனாதிபதியும் அதற்கு உடன்பட்டிருக்கிறார். மறுபுறத்தில் ஐக்கிய தேசியக் கட்சியும் இ.தொ.காங்கிரஸ் சார்பில் தெரிவான முத்து சிவலிங்கம் என்பவரை பிரதி சபாநாயகர் பதவிக்காக தாம் சிபார்சு செய்ய இருப்பதாக ஐ.தேசிய முன்னணி தெரிவிக்கிறது.

## பிரதமர் மகிந்த கூறியுள்ள விடயங்கள்

பிரதி சபாநாயகர் தெரிவு மறைமுக வாக்கெடுப்பாக அல்லாமல் பகிரங்க வாக்கெடுப்பாக நடைபெற இருப்பது தமக்குப் பெரும் பிரச்சினையாக இருப்பதாக கூறியுள்ள பிரதமர், பெரும்பான்மை பலத்தை நாடாளுமன்றில் பெற்றுக் கொள்வதற்கான ஏனைய கட்சிகளுடனான கலந்துரையாடலில் தமக்கு திருப்திகரமான முன்னேற்றங்கள் ஏற்பட்டிருப்பதாகவும் கூறியுள்ளார்.

## முஸ்லிம் காங்கிரஸின் நிலைப்பாடு

சமாதானப் பேச்சுக்களின் போது, தனித்தரப்பாக தம்மை இணைத்துக்கொள்ள ஆவன செய்யப்பட வேண்டும் என அரசைக் கோரியுள்ள முஸ்லிம் காங்கிரஸுக்கு நாடாளுமன்றக் குழுக்களின் தலைவர் பதவியை வழங்குவதற்கு அரசு இணங்கியிருக்கிறது. மறுபுறத்தில் சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த ஒருவரை பிரதி சபாநாயகர் பதவிக்கு ஐ.தே.முன்னணி பிரேரித்தால் அதற்கு தாம் ஆதரவளிக்கப் போவதில்லை என்று ஹெல உறுமய தனது ஆட்சேபனையைத் தெரிவித்திருக்கிறது.

## கட்சிகளின் தளம்பலான நிலைமைகள்

மொத்தமாக நிலைமைகளைப் பார்க்கும் போது, அறுதிப் பெரும்பாண்மை என்பது ஆளும் கட்சிக்கோ அல்லது, பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.கட்சிக்கோ கிடைக்கப் போவதில்லை என்ற நிலைமைகள் தெளிவாக புலப்படுவதால், தென்னிலங்கையின் சிறுபான்மை சிங்கள மற்றும், மலையக, முஸ்லிம் கட்சிகள் எந்தப் பக்கம் சாய்வதென்ற ஓர் உறுதியான முடிவை எடுக்கமுடியாமல் மதில்மேல் பூனையாக பதுங்கியபடி இருப்பதையே அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

முதலாவது நாடாளுமன்ற அமர்வு முடிவடைந்தமைக்குப் பின்பு குறிப்பாக முஸ்லிம், மலையக கட்சிகள் ஆளும் தரப்பின் செயற்பாடுகள் குறித்த தமது விமர்சனங்களை அல்லது எதிர்பார்ப்புக்களை வெளிப்படையாகக் காட்டுவதில் ஒரு தயக்க நிலைமையைக் கொண்டிருப்பதையே அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

ஹெல உறுமய தன்வசம் கொண்டிருக்கும் 9 ஆசனங்கள், சில சந்தர்ப்பத்தில் ஆளும் தரப்புக்கோ அல்லது எதிர்த்தரப்புக்கோ கிடைத்து விட்டால் என்ற நப்பாசையில் ஹெல உறுமயவின் எதேட்சையான இனவாதப் பிரசாரங்களை இருதரப்புகளுமே பார்த்துக் கொண்டு மௌனமாக இருக்கின்றன.

சிறுபான்மைக்கட்சி உறுப்பினர்கள் இது விடயத்தில் கூட்டான ஒரு முடிவினை எடுத்து தமது மக்கள் சார்பான முக்கியமான பிரச்சினைகளுக்கான தீர்வை முன்வைப்பார்களாயின் அதுவே அவர்கள் தமக்கு வாக்களித்த மக்களுக்கு செய்யும் மிகச் சிறந்த பிரதியுபகாரமாக அமையும்.

தமது அற்ப சலுகைகளுக்காக விலை போவார்களா? அன்றேல், கூட்டாக சிந்தித்து ஆரோக்கியமான முடிவை சிறுபான்மை கட்சிகள் எடுக்குமா என்பதை அநேகமாக 18 ஆம் திகதி நாடாளுமன்ற அமர்வு வெளிப்படுத்திவிடும்.

– மயூரன் –

# வசந்த காலம்

கிளிநொச்சி விவசாயபீடத்தில் நாம் இருவரும் ஒன்றாகப் பயிற்சி பெற்றோம். தாரணி ஒருதலையாக என்னை நேசித்தவள். அந்த நேரம்தான் எனது திருமண அழைப்பிதழை அவள் முன் நீட்டினேன். மனதில் அவளுக்கு வேதனையாயிருந்தாலும் அதனை அவள் வெளிக்காட்டவில்லை. நாம் நல்ல நண்பர்களாகவே இருந்து வந்தோம்.

என் திருமணம் இனிதே நடந்தேறியது. என் மனைவி மிகவும் நல்லவள், அன்பானவள் எமது நட்பின் ஆழத்தை உணர்ந்தவள். மொத்தத்தில் என்னை நன்கு புரிந்து கொண்டவள் என்பதில் எனக்குப் பெருமை. எமது நட்பின் ஆழத்தை உணர்ந்து அவள் செயல்பட்டதால் நான் அவளை உயர்வாகவே கருதினேன்.

ஒரு கிழமை தாரணி வராவிட்டால் எனது மனைவி ஏதாவது பொய் சொல்லி அவளை வரவழைத்து விடுவாள். அவளும் பதறியடித்து ஓடி வர இவள் வாசலில் சிரித்து கொண்டு நிற்பாள். நல்ல மனைவி எனக்கு அமைந்ததால், எமது நட்பும் எதுவிதத் தடையும் இன்றி வளர்ந்து கொண்டு போனது. நானும் அப்போது அதிக பாசத்தை என் மனைவி மீது கொட்டினேன். அப்படி நாம் சந்தோஷமாக இருந்த காலத்தில்தான் – கொஞ்ச நாட்களுக்கு முன்புதான் – தாரணிக்கு வெளிநாட்டு சம்பந்தம் ஒன்று கூடிவந்தது.

''ரகு எனக்கு கலியாணத்தில் விருப்பம் இல்லை. எங்கட நட்பு முறிந்துவிடும் என்ற உணர்வு எனக்கு இருக்கிறது. நான் இப்படியே இருக்கப் போகின்றேன்.''

''நீ என்ன தாரணி சின்னப்பிள்ளை மாதிரி. வயது வந்தா எல்லாப் பெற்றோரும் தங்களுடைய கடமையைச் செய்வார்கள். தங்களுடைய பிள்ளையை ஒருத்தன் கையில் பிடித்து கொடுத்தால் தான் இவர்களுக்கு நிம்மதி. நீ தனியே வாழ முடியுமா? எங்கட நட்பை உணர்ந்தவன் அதனை அனுசரித்துப் போவான். சந்தோஷம் ஓம் என்று சொல்'' என்றேன். ஒருவாறு அவள் திருமணத்திற்கு சம்மதித்து விட்டாள்.




தாரணியின் வெளிநாட்டுப் பயணமும் நல்லபடியாக அமைந்தது. அங்கு சென்ற சில தினங்களின் பின் அவளுடைய வருங்கால கணவன் ஒரு வெள்ளைக்காரியை அழைத்துவந்து தனது மனைவி என அறிமுகம் செய்தபோது அவனது பெற்றதாய் உட்பட அவளுமே ஆடிப்போனாள்.

உடனே தாய் நாடு திரும்ப அவள் விரும்பாததால் அங்கேயே சில காலம் இருந்துவிட்டாள். அப்படி இடிந்து இருந்தவளுக்கு அடுத்த இடியான செய்தி என் மனைவி அழகான ஆண் குழந்தையைக் கொடுத்துவிட்டு இறையடி சேர்ந்த செய்தி......

வாசலில் நின்று யாரோ அழைக்கும் சத்தம். எழுந்து சென்று கதவைத் திறந்த எனக்கு ஆச்சரியம். வாசலில் தாரணி!

தாரணியைக் கண்டதும் என்னையும் மீறி அழுகை பற்றிக் கொண்டது. எனினும் நான் கட்டுப்படுத்திக் கொண்டேன். ஆனால், அவளால் முடியவில்லை. அவள் அழுது தீரும் மட்டும் நான் மௌனமாக இருந்தேன்.

நாட்கள் ஓடிச் சென்றன. ரகு தானாகவே தாரணியிடம் பேச்சுக் கொடுத்தான். ''ஏன் தாரணி நீ உனக்கென்று ஒரு வாழ்க்கையை அமைத்து கொள்ளலாமே! உனது எதிர்காலத்தை ஏன் நீ நினைத்துப் பார்க்காமல் இருக்கிறாய்.'' ''ஏன் என்னால் தனித்து வாழ முடியாதா? ஒரு ஆளால், முடியுமானால் ஏன் என்னால் முடியாது?'' ''உன்னோட கதைக்க இயலாது. ஆண், துணையில்லாமல் வாழ முடியும். பெண், துணையில்லாமல் வாழ்ந்தால் சமூகம் அவளை ஒரு மாதிரியான பார்வையிலே பார்க்கும்.''

''ரகு நான் வரும்போது ஒரு முடிவோடு தான் வந்தேன் என் வேண்டுதலை நீ நிராகரிக்கலாம். அதுக்காக நான் வருத்தப்படமாட்டேன். நிச்சயம் நான் நம்பினது கிடைக்கும்.''

''என்ன புதிராக பேசுகிறாய்''

''மனுசனுடைய வாழ்வே புதிர் தானே. நான்..... நான்..... உங்களோட வாழ ஆசைப்படுகின்றேன்.'' ''என்ன தாரணி? நீ நட்பு நட்பு என இருந்து விட்டு.....'' ''ஏன் நட்பு காதலாக மாறக் கூடாது. சந்தர்ப்பம் சூழ் நிலை அப்படியாகிவிட்டது. எனக்கென்று புதிய வாழ்க்கையை ஆரம்பிப்பதை விட இப்ப எனக்கு நீங்க தரப்போகும் வாழ்க்கையை நான் சந்தோஷமாய் ஏற்பேன். எனக்கு இதில் தான் சந்தோஷம் கிடைக்கும். எனக்கு வாழ்க்கை ஒன்று தராவிட்டாலும் பரவாயில்லை உங்களுக்கு மனைவியாக வாழ்வதை விட உங்கள் குழந்தைக்கு தாயாக இருப்பதில் ஆனந்தமடைகின்றேன். நன்றாக யோசித்து முடிவு செய்யுங்கள்.''

''எனக்கு என்தாயின் சம்மதம் எப்பொழுதோ கிடைத்து விட்டது. இரவு முழுவதும் யோசித்தேன். நிச்சயம் என்னால் என் குழந்தைக்கு பாதுகாப்பும் கொடுக்க முடியாது. அவனை எப்பவும் அன்போடு கவனிக்க ஒருதாய் வேண்டும். ஓர் ஆண் மகனை பாதுகாக்கும் பொறுப்பு தாயிற்கே அதிகம். அவன் நல்லவனாக வரவேண்டும். நிச்சயம் தாரணி நல்ல தாயாக இருப்பாள். அவளும் வாழ்வில் சோர்ந்து போனவள். ஒன்றை இழந்தவனுக்கு தான் அதன் இழப்பும் வேதனையும் புரியும். நான் வாழ்வு கொடுப்பதில் என்ன தவறு?''

நட்பு காதலாக மாறியது. அதிகாலை எழுந்து பட்டுவேட்டி சரசரக்க மாப்பிள்ளை கோலத்துடன் தாரணிக்காக காத்திருந்தான் ரகு.

(யாவும் கற்பனை.)

– ஆமோஸ்.நிஷா –

# விஜயிடம் 'மாமியார் வீடு எப்படி?' என்று கேட்டபோது









இளைய தளபதி விஜய் இலங்கைக்கு கடந்த 9ஆம் திகதி வருகை தந்திருந்தார்.

அவரது நடிப்பில் வெளிவந்து தற்போது வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கும், கில்லி திரைப்படம் - வசூலில் புதிய சாதனையை ஏற்படுத்தியதை முன்னிட்டு நடைபெற்ற விழாவில் கலந்து கொள்ளவே அவர் இலங்கைக்கு வருகை தந்திருந்தார்.

இந்த திரைப்படத்தின் இலங்கை விநியோகத்தர் அன்ரனிராஜாவின் அழைப்பின் பேரில் அவர் வருகை தந்தமை குறிப்பிடத்தக்கது.

அன்றைய தினம் பி.ப.3.20 மணியளவில் செய்தியாளர் சந்திப்பு ஒன்று ஹோட்டல் ஹொலிடே இன்னில் நடைபெற்றது.

இந்த சந்திப்பு செய்தியாளர்களுக்கு என அறிவிக்கப்பட்டிருந்த போதும், பார்வையாளர்களும் கூடவே அனுமதிக்கப்பட்டிருந்தார்கள்.

அங்கு வருகை தந்த விஜய் முதலில் தனது உரையை நிகழ்த்தினார். அவர் தனது உரையில் நானும் உங்கள் நாட்டவன்தான் என்னை அன்போடு இங்கு அழைத்து வந்த அன்ரனிராஜாவுக்கு நான் நன்றி தெரிவிக்கிறேன், தமிழர்கள் எங்கெல்லாம் வாழ்கிறார்களோ, அவர்கள் எல்லோரும் நமது உறவினர்கள் என்றே நான் நினைக்கின்றேன்.

அந்தவகையில், என்னை அன்போடு நேசிக்கும் உங்களுக்கு என் நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன். குறிப்பாக ஊடகவியலாளராகிய உங்கள் அனைவருக்கும் என் நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றேன் - என விஜய் தெரிவித்தார்.

அதன்பினனர் - 'கில்லி' படம் இலங்கையில் திரையிடப்பட்டுள்ள திரையரங்க உரிமையாளர்களுக்கு நினைவுக் கேடயம் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார்.

நடிகர் விஜய், இப்பரிசுகளை கையளித்தார், விசேடமாக கில்லி திரைப்படத்தினை முன்னிட்டு மட்டக்களப்பில் நடைபெற்ற சைக்கிளோட்டப் போட்டியில், முதல் மூன்று பரிசுகளை பெற்றவர்களுக்கும் இங்கு விஜயின் கையால் பரிசுகள் வழங்கப்பட்டன.

இதன் பின்னர் பத்திரிகையாளர்களுக்கு நன்றி தெரிவித்த அவர், அவர்களது கேள்விகளுக்குப் பதிலளித்தார்.

* அண்மைக் காலமாக உங்கள் படங்களில் ரஜனியின் படங்களில் வரும் வசனங்கள் வெளிப்படுகின்றனவே இதன் உள்ளார்ந்த நோக்கம் என்ன?

நான் கதையைமட்டுமே கேட்பேன், என் கரேட்டர் எப்படி என்கிறதையே பார்ப்பேன், டயலக் விசயங்களெல்லாம் அது டையரக்டரோட சொய்ஸ்.

* நீங்கள் நடிப்பு துறைக்கு வந்திருக்காவிட்டால் என்ன செய்திருப்பீங்கள்?

சினிமா துறையிலே தான் இருந்திருப்பேன் - ஒரு டைரக்டராகவே, புறொடியுசராகவோ இருந்திருப்பேன்.

* நீங்கள் இந்த துறைக்கு வந்ததற்கு காரணம் என்ன?

காரணமென்று பெரிசா ஒன்னுமில்லிங்க படிப்பு வரல்ல நடிக்க வந்துட்டேன்.

* இலங்கை ரசிகர்கள் எப்போதும் இந்திய கலைஞர்களை கௌரவப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் - இந்த வகையில், இலங்கையிலுள்ள கலைஞர்களை உங்களுக்குத் தெரியுமா?

இதோ அமர்ந்திருக்காரே 'சனத்குணதிலக்க' இவரை மட்டும் தான் தெரியுமுங்க.

நீங்கள் ஒரு நடிகர் அந்தவகையில் உங்களை கவர்ந்த நடிகரென்று யாரை குறிப்பிடுவீர்கள்.

சுப்பர் ஸ்டார் ரஜனிகாந்த் சார்தான். அதனால் மற்றவங்க யாரும் குறைஞ்சவங்கல்ல, ஒவ்வொருவர்கிட்டேயும் ஒவ்வொரு குவாலிட்டி புண்டு.

* நீங்க நடிச்ச படங்களிலே உங்களுக்கு பிடிச்சபடம் கரேக்டர் எது என்று கூறுவீர்களா?

''கில்லி''தான்

* ஒருகலைஞன் என்ற முறையில் எமது நாட்டில் வடகிழக்கில் பலர் ஊனமுற்றுள்ளார்கள், இவர்களுக்கு உதவிவழங்கும் நோக்கில் ஏதேனும் உதவிகளை செய்ய நீங்கள் முன் வருவீர்களா?

இந்த மாதிரி உதவிகளை எனது ரசிகர் மன்றம், சார்பாக நான் செய்து கொண்டுதான் இருக்கிறேன், அந்த வகையில் இங்கே யாராச்சும் முன்வந்து செய்தா நிச்சயமாக நான் முழு ஒத்துழைப்பும் தருவேன் - என்றார்!

* உங்கள் பிளஸ்பொயின்ட்! என்ன? மைனஸ் பொயின்ட்! என்ன? என்ற கேள்வி ஒன்று தொடுக்கப்பட்டது.

சற்று யோசித்துக் கொண்டே என்ன சொல்லலாம் என தவிச்ச அவருக்கு அன்ரனிராஜா காதில் ஏதோ சொன்னார்.

சுதாகரித்துக் கொண்ட அவர். பிளஸ் பொயின்ட ரசிகர்கள் தான் என்றார்.

அப்போது இக்கூட்டத்திற்கு லண்டனில் இருந்து, வருகை தந்த ரசிகை ஒருவர் கேள்வி ஒன்றை தொடுத்தார்!

* நீங்கள் லண்டனில் ஒரு கல்யாணத்திற்கு வந்திருந்த நேரம் எவருடனும் அதிகம் பேசாது ஒரு ''சைப் பெசன்டாக'' நடந்து கொண்டதாக சொன்னார்கள். ஆனால், இங்கு நீங்கள் மிக நகைச்சுவையாக பேசி சிரித்து கதைக்கிறீர்களே அது எப்படி என கேட்டார்?

இது ஒரு பத்திரிகையாளர் சந்திப்பு இதுல நான் பதில் சொல்ல வேண்டியது எனது கடமை, அதனால் சிரிச்சு தான் ஆகணும் உண்மையில் நான் ஒரு ''சைப் பெசன்டு''தான் என்றார்.

* பாடல் காட்சிகளின் போதும், இப்போது நேரில் பார்க்கும் போதும் நீங்கள் சட்டையை வெளியில் போட்டுக் கொண்டு உடுப்பு மீது அவ்வளவு கவனம் செலுத்தாமல் இருக்கிறீர்களே இதற்கு ஏதும் விசேட காரணம் உண்டா?

விசேட காரணம் என்று ஒன்னும் இல்லை - பாத்திரத்திற்கு ஏற்றப்போல உடையை போடுகிறேன் அவ்வளவு தான்.

* இலங்கை இந்திய கூட்டுத்தயாரிப்பாக ஒரு தமிழ் திரைப்படத்தை இலங்கையில் தயாரிப்பதற்கு யாரும் முன்வந்தால் நீங்கள் நடித்து தருவீர்களா?

நிச்சயமாக யாராவது முன் வந்தால் நான் எனது முழு ஒத்துழைப்பையும் தருவேன் என்றார்.

* வடக்கு - கிழக்கு மாகாணத்திலே உங்களுக்கு ரசிகர்கள் அதிகமாக இருக்கிறார்கள், அவர்களை பார்க்க வேண்டும் என நீங்கள் நினைக்கவில்லையா? அதற்கான ஏற்பாட்டை செய்து நாம் அழைத்தால் வருவீர்களா?

ஆம் நிச்சயமாக வருவேன், இந்த வருகை அவசரமாக மேற்கொள்ளப்பட்டது மறுபடி வரும்போது வடக்கு - கிழக்கிற்குச் சென்று பார்க்க வேண்டும் என விரும்புகிறேன், அழையுங்க வருவேன் என்றார்.

* நம்ம நாடு உங்களது மாமியார் வீடு இங்கு வந்து பார்க்கும் போது உங்களுக்கு எவ்வாறான உணர்வு ஏற்பட்டது?

இந்த கேள்வியை கேட்டபோது - விஜய் என்ன பதில் சொல்வதென தடுமாறிவிட்டார் - அதனை உணர்ந்து கொண்ட அந்தனிராஜா எழுந்து அவருக்கு காதில் ஏதோ சொன்னார்.

அதை கேட்ட பின் சிரித்துக் கொண்டு சபையைப் பார்த்து அவர் - நம்ம ஊரில மாமியார் வீடுன்னு வேறு அர்த்தம் - என்ன விவகாரமோ என யோசித்து விட்டேன். என சிரித்தபடி பதில் எதுவும் சொல்லாது மழுப்பிக் கொண்டார்.

''கில்லி'' படத்தில் ஆரம்பத்தில் இடம்பெறும் சண்டைக் காட்சி யதார்த்தமாக இல்லாது! 'அட்டிபிஸலாய்' இருக்கிறதே?

இதற்கு காரணம் என்ன என்றுஒருகேள்வி தொடுக்கப்பட்டது.

அந்த காட்சியில வாற பில்டிங் மெட்ராஸில உள்ளது, அங்குள்ள சிறுவர்கள் பலர் சர்வசாதாரணமாக ஒரு கட்டடத்திலிருந்து மறுகட்டடத்திற்கு பாய்ந்து செல்வதை அங்கு வந்து பார்த்தால் தெரியும், அதன் பிரதிபலிப்பாகவே இக்காட்சி எடுக்கப்பட்டது என தெரிவித்தார்.

மிக இனிமையாகவும் நகைச்சுவையாகவும் எல்லோரையும் கவரும் விதத்திலும் இப்பேட்டியை வழங்கிய விஜயிடம், அவரை பார்க்க வந்திருந்த ரசிகை ஒருவர் கில்லி படத்தில் வரும் ''அப்படி போடு போடு' பாடலை பாடும் படி



கேட்டார்.

அந்த பாடலின் சில வரிகளைப் பாடி சபையோரின் ஏகோபித்த கைதட்டல்களையும் பெற்றரார் விஜய்.

*சந்திப்பு -- ராகவி --*

# மதவாதத்துக்கு விழுந்த மரண அடி

பக்கத்து வீடு

—எஸ்.சுரேந்திரஜித்—




உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடான இந்தியாவின் தேர்தல் முடிவுகள் அகில உலகத்தாலும் எவ்வளவு ஆவலுடன் எதிர்பார்க்கப்பட்டனவோ அவ்வளவுக்கு அதிர்ச்சியையும் பரபரப்பையும் ஏற்படுத்தியுள்ளன.

543 தொகுதிகளில் 335 தொகுதிகளை வெல்லும் எனப் புகழப்பட்ட ஆளும் மதவாத பி.ஜே.பி.கூட்டணி தலைகுப்புறக் கவிழ்ந்து விட்டது. பிரதமராக வருவதற்கு 60 சதவீதத்துக்கு மேற்பட்ட இந்தியர்களால் விரும்பப்படுபவர் என பத்திரிகைகளினால் கணிக்கப்பட்ட முதியவர் வாஜ்பாய் தொங்கு முகத்துடன் அரசை விட்டு வெளியேறி இருக்கிறார்.

வெறும் 28 சதவீத இந்தியர்களால் பிரதமர் பதவிக்கு விரும்பப்பட்ட சோனியா காந்தி பிரதமர் பதவியை பெறுகிறார். இப்படியும் நடக்குமா? என்று சொல்லும் அளவுக்கு பாரத தேசத்தின் வாக்காளர் பி.ஜே.பியை தூக்கி எறிந்து விட்டனர். இத்தாலியர் ஒருவரை அரியணை ஏற்றியுள்ளனர்.

## பொய்த்து விட்ட கருத்துக் கணிப்புகள்

ஜனவரியில் எடுக்கப்பட்ட கணிப்புகள் பி.ஜே.பி அமோகமாக வெல்லும் எனக் கூறின தேர்தலுக்குப் பின்னான கணிப்புகள் தொங்கு நாடாளுமன்றம் வரும் என்றன. பி.ஜே.பிக்கு பெரும்பான்மைக்கு குறைவாக இடங்கள் வரும் என்றெல்லாம் தெரிவிக்கப்பட்டது. இவை எல்லாம் பொய்யாகி கடைசியில் காங்கிரஸ் கட்சி வந்தே விட்டது டில்லி அரியணைக்கு.

இந்தியாவின் வரலாற்றிலேயே கணிப்புகள் பொய்யாகி முடிவுகள் தலைகீழாக வந்திருப்பது முதன் முறையாக இத்தேர்தலிலேயே. எட்டு ஆண்டுகள் மத்திய ஆட்சியை இழந்த நிலையில் வாழ்வா சாவா போராட்டத்தில் இந்தத் தேர்தலில் இறங்கிய காங்கிரஸ் வெற்றி பெற்று விட்டது கடைசியில்.

## பி.ஜே.பி கவிழ காரணம் என்ன?

பி.ஜே.பி. கவிழ்ந்ததற்கு காரணங்கள் பல. 1998, 1999 தேர்தல்களில் அதன் கூட்டணிகள் சிறந்த வலுவான கூட்டணிகள் ஆகும். அந்த இரு தேர்தல்களிலும் கூட்டணி என்று காங்கிரஸ் எதுவுமே வைத்துக் கொள்ளவில்லை.

இம்முறையோ பி.ஜே.பி.யைவிட காங்கிரஸ் சிறப்பாக கூட்டணிகளை அமைத்தது. கடந்த தேர்தலில் தான் போட்டியிட்ட தொகுதிகளில் கிட்டத்தட்ட 110 தொகுதிகளை கூட்டணிக் கட்சிகளுக்கு முதன் முறையாக ஒதுக்கியது.

இவ்வாறு வலுவான கூட்டணி சேர்வதற்கு அடிப்படைக்காரணம் இந்தியாவின் மதசார்பின்மை பாரம்பரியத்துக்கு உண்டான அச்சுறுத்தலே.

குஜராத்தில் அப்பாவி முஸ்லிம்களின் இரத்தத்தை சிந்திய கொடுமையை இந்தியாவின் அறிவுஜீவிகளும் காந்தியவாதிகளும் சிறுபான்மை மதத்தினர்களும் வெகுஜன ஊடகத்தினரும் ஏற்கவே இல்லை. இவர்கள் காங்கிரஸை முழுமையாக ஆதரித்தனர்.

பி.ஜே.பியின் மதவெறி அதிகரிக்க அதிகரிக்க மதச்சார்பற்ற சக்திகள் காங்கிரஸ் பின்னால் அணிதிரண்டது முக்கியமான விடயம்.

## சோனியா வெளிநாட்டவர் என்பது எடுபடவில்லை

சோனியா வெளிநாட்டவர் என்ற பி.ஜே.பியின் தாக்குதலை உண்மையில் சோனியா எதிர் கொள்ளவில்லை. அவர் சார்பில் பேசியவர்கள், இடதுசாரித்தலைவர்களும் கருணாநிதி முதலிய செல்வாக்கு மிக்க பிராந்திய தலைவர்களுமே. சோனியா பிரதமராக வரலாம் என இவர்கள் கடுமையாகப் பிரசாரம் செய்தனர். லல்லு பிரசாத் யாதவ் இதில் தன் உயிரைக் கொடுத்து பிரசாரம் செய்தார்.

ராஜீவுடன் பகைத்து கட்சியை உடைத்து பிரதமரான வி.பி.சிங் கூட சோனியா பிரதமராவது சரியே என்று கூறி இருந்தார். வி.பி.சிங் தனது பழைய பகையை கூட மறந்து சோனியாவை ஆதரித்தது கூட பி.ஜே.பியை ஒழிக்க வேறு வழியில்லை என்பதாலேயே.

வி.பி. சிங்கும் இடதுசாரிகளும் மதசார்பின்மையை உயிர் கொடுத்தும் காப்பவர்கள். இதைவிட ஒருகாலத்தில் சோனியா அந்நியர் என பிரச்சினையைக் கிளப்பிய சரத்பவார், முலயம் சிங் போன்ற தலைவர்களும் சோனியா பிரதமராவதை எதிர்க்கவில்லை என்ற தேர்தலுக்கு முன்பு சொல்லியிருந்தனர்.

இவையெல்லாம் சோனியா அந்நியர் என்ற பி.ஜே.பியின் தாக்குதலை புஸ்வாணமாக்கி சோனியாவுக்கு வழியை இலகுவாக்கிவிட்டது. உண்மையில் சோனியாதான பிரதம வேட்பாளர் என உறுதியாகச் சொல்லகாங்கிரஸ் தயங்கியபோது இந்தத் தலைவர்கள் முன் வந்து அவரை பிரதமராக மக்களுக்குக் காட்டினர்.

எதிரணியில் தலைவர் இல்லை; அவர்களின் பிரதமர் யார்? எங்களுக்கு வாஜ்பாய் இருக்கிறார் என பி.ஜே.பி. தலைவர்கள் எள்ளி நகையாடினர். ஆனால், வாக்காளர் தங்கள் பிரதமரை அடையாளம் கண்டு கொண்டனர். "கருணாநிதிதான் கிங்மேக்கர், இந்திராவை, வி.பி.சிங்கை, தேவகௌடாவை, குஜ்ராலை பிரமராக அவர் அடையாளம் காட்டினார். அவரே சோனியாவையும் காட்டுகிறார்" என தி.மு.க தலைவர் ஒருவர் முன்னர் கூறியது நூறு வீதம் உண்மையாகிவிட்டது.

## இந்தியா ஒளிர்கிறது கை கொடுக்கவில்லை

இந்திய பொருளாதாரம் முன்னேறி இருப்பதை பற்றி பி.ஜே.பி. அதிகம் பீற்றிக் கொண்டது. "இந்தியா ஒளிர்கிறது" என்ற அதன் கோஷம் உண்மையில் அதனையே திருப்பித் தாக்கியுள்ளது.

பொருளாதார வளர்ச்சியில் வந்த பயன்கள் கிராமப் புறமக்களை அடையவில்லை. சில குறிப்பிட்ட மேல்தர, மேல்மத்திய தர வர்க்கத்தினக்கே சிறிது வாழ்க்கை முன்னேற்றம் வந்தது. விவசாயிகளும், வறியவர்களும் காங்கிரஸை பலமாக ஆதரித்து வாக்களித்துள்ளனர். உண்மையில் இந்தியா ஒளிர்கிறது என்ற பி.ஜே.பி. பிரசாரம் வறியவர்களை அவமதிப்பதாகவே அவர்கள் கருதினர்.


சோனியாகாந்தி

என்றாலும் கூட்டணிக் கணக்கே பி.ஜே.பி வீழ்ச்சிக்கும் காங்கிரஸ் எழுச்சிக்கும் பிரதான காரணம் என்பதை மறுக்க முடியாது. குறிப்பாக தமிழகம், பீஹார் ஆந்திரா, மகராஷ்டிரா, ஜார்கண்ட் மாநிலங்களில் காங்கிரஸ் அமைத்த கூட்டணிகளே டில்லி சிம்மாசனத்தினை அதற்குப் பெற்றுத் தந்துள்ளன.

பீஹாரில் பி.ஜே.பி.யின் முன்னால் கூட்டாளியான தலித் தலைவர் பாஸ்வான், காங்கிரஸின் இயற்கைக் கூட்டாளியான லல்லு ஆகியோர் கொண்ட கூட்டணி பிஜேபியை வீழ்த்திவிட்டது. மொத்தம் 37இல் 26 இக்கூட்டணி வென்றுள்ளது.

ஆந்திராவில் 1999 இல் சந்திரபாபு நாயுடு கட்சி 29இடங்களையும் பி.ஜே.பி 7 இடங்களையும் வென்றனர். இன்று நாயுடு 5, பிஜேபி பூஜ்யமாகி விட்டது.

காங்கிரஸ் 7 இல் இருந்து 29 ஆகிவிட்டது. அதன் பங்காளிகள் 7 இடங்களில் வென்றுள்ளனர்.

தெலுங்கானா கோரும் TRS கட்சியுடன் கூட்டணி வைத்தது காங்கிரஸுக்குநல்லமேல் பலன் தந்துள்ளது. சட்டசபைத் தேர்தலில் அமோக பெரும்பான்மையை காங்கிரஸ் கூட்டணி பெற்றுள்ளது.

## பி.ஜே.பியின் கோட்டைகள் சரிவு

பி.ஜே.பியின் கோட்டையான பீஹாரிலும் ஜார்கண்டிலும் பி.ஜே.பி. கட்சி தோற்றுள்ளது. ஜார்கண்டின் 14 இடங்களில் ஒன்று மட்டுமே பி.ஜே.பிக்கு கிடைத்துள்ளது. காங்கிரஸ் தனது நிலையை 2 இல் இருந்து 6ஆக்கியுள்ளது. ஜேஎம்எம் கட்சிகள் 6 இடங்களை வென்றன.

மகாராஷ்டிராவில் சரத்பவார்—சோனியா பகையால் கடந்த முறை இருகட்சிகளாக போட்டியிட்டு 16 இடங்களை வென்ற இவர்கள் (காங்கிரஸ் 12, பவார் கட்சி 04) இம்முறை கூட்டுச் சேர்ந்ததால் மொத்தம் 48 இல் 24 இடங்களை வென்றுள்ளனர்.

## தமிழக நிலைவரம்

தமிழகத்தின் கதைதான் மிகச் சுவராஸ்யமானது. மதமாற்ற தடைச்சட்டம், கோயில் அன்னதானம் என்று இந்துத்துவ நாடகம் ஆடிய ஜெயலலிதாவின் மீது மாநில பி.ஜே.பி. தலைவர்கள் காதல் கொண்டதே பிஜேபியின் இன்றைய தோல்விக்குப் பிரதான காரணம்.

எந்த இந்துத்வத்தால் பிஜேபி ஒரு பெரிய கட்சியாக வளர்ந்ததோ அதே இந்துத்வநாடகத்தை அம்மா ஆடுவதைக் கண்ட பரவசத்தால் மெய்மறந்து தி.மு.க., ம.தி.மு.க.என்ற நம்பத் தகுந்த பங்காளிகளை பிஜேபி. உதறியது.

தி.மு.க.கூட்டணிக்கு கிடைத்த அமோகவெற்றி மூலம் தமிழகம் ஒரு போதும் அகில இந்திய அரசியல் போக்கை அடையாளம் காணத் தவறாது என்பது மீண்டும் உண்மையாகியுள்ளது.

உண்மையில் தமிழகமே பிஜேபியை வீட்டுக்கு அனுப்ப பிள்ளையார் சுழியிட்டது. ஒரு போதும் இல்லாதவாறு சகல கட்சிகளும் ஓரணியில் திரண்டது அம்மாவின் தோல்விக்கு பிரதான காரணம். தலித்கட்சிகள் மூன்றாவது அணி அமைத்தாலும், அது தி.மு.க அணியை பாதிக்கவில்லை.

வைகோவை சிறைவைத்து அரச ஊழியரைப் பகைத்து பத்திரிகைகளை விரோதித்து, மதமாற்றத் தடைச்சட்டம் கொண்டு வந்து சிறுபான்மையினரை எடுத்தெறிந்து, கோயில்களில் பலியிடுவதைத் தடுத்து தலித்துகளை பகைத்து; தன்னை பதவிக்கு கொண்டு வந்த காங்கிரஸை மறந்து ஆடாத ஆட்டம் ஆடிய ஜெயலலிதா அடங்கிப் போய் விட்டார்.

பதவிக்கு வந்தபின்பு நடந்த சட்டசபை இடைத்தேர்தல்களை வென்ற மமதையால் தன்னால் எல்லாம் இயலும் என நம்பினார். ஓரிருவர் தவிர அ.தி.மு.கவின் வேட்பாளர் சகலரும் புதிய அனுபவமில்லாதவர்கள். தான் கூறினால் ஆடு, மாடு கூட எம்.பியாகலாம் என அவர் தப்புக் கணக்குப போட்டு விட்டார்.

1996 இலும் தி.மு. க. – த.மா.கா. கூட்டணியிலும் அவர் பூஜ்யத்துக்குப் போனார்.; ஆனால் அப்போது 5 ஆண்டுகள் முடிந்திருந்தன. இப்போதோ மூன்றே ஆண்டுகள்தான் ஆகியுள்ளது. அதிலும் சோனியா கணவனைக் கொன்றவருடன் சேர்கிறார், கணவன் பக்தி இல்லாதவர்; அந்நியர் என்பதால் இந்திய கலாசாரம் தெரியாமல் அப்படி நடக்கிறார் என்று ஜெயலலிதா வாய்க்குவாய் பேசியதை தமிழகம் ஏற்கவில்லை இத்தாலியராயினும் மணந்தபின் ஜெயலலிதாபோல அல்லாமல் ஒரே கணவனுடன் வாழ்ந்த சோனியாவைத் தாக்குவதில் சற்றும் இங்கிதமில்லாமல் நடந்து கொண்டார்.

## ரஜனிக்கு ஏற்பட்ட பரிதாப நிலைமை

இத்தேர்தலில் தமிழகத்தின் தீர்ப்பு அரசியல் சூனியமான ரஜனிகாந்த்தை தலைகுனிய வைத்துள்ளது. 1996 இல் அம்மாவுடன் பகைத்து த.மா.கா. — தி.மு.க கூட்டணியை ஆதரித்து அது வென்ற போது ஏதோ தன்னால் தான் வெற்றிவந்ததாக நினைத்த ரஜனி 1998 இலும் பி.ஜே.பி. — அ.தி.மு.க கூட்டணியை எதிர்த்து வாக்களிக்க கேட்டார். ஆனால், வாக்காளர்கள் மறுத்தனர்.

இம்முறையோ தனது சொந்த நலனுக்காக, தனது படத்தை பா.ம.க எதிர்த்ததால் — தமிழக மக்கள் ஜெயலலிதாவின் கொடுமையைத் தாங்கவேண்டும் எனக் கேட்டார்.

1996 இல் பொது நலனுக்காக ஜெயலலிதாவை பதவி நீக்க உத்தரவிட்ட அவர் இம்முறை தனது சொந்த நலனுக்காக அதைவிட கொடுமைசெய்யும் ஜெயலலிதாவை ஆதரித்தார்.

ரஜனியின் எதிர்ப்பை குறித்து பா.ம.க அதிகம் வெளியில் பேசவில்லை. இனி அவர்கள் ரஜனியை எள்ளி நகையாடுவார்கள். அப்போது ரஜனி அரசியலும் செய்ய முடியாமல் திரைப்படமும் செய்ய முடியாமல் போகலாம்.

அரச ஊழியர் தன்னை எதிர்ப்பர் எனத் தெரிந்து ஜெயலலிதா அவர்களது பெயரை பல இடங்களில் வாக்காளர் பட்டியலிலிருந்து நீக்கினார்.

இருந்தும் பெரும்பாலான தொகுதிகளில் 2 இலட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் தி.மு.க அணி வென்றுள்ளது. அ.தி.மு.க. சார்பில் நாய் பூனை நின்றாலும் வெல்லும் எனக் கூறக் கூடிய பெரியகுளம், திருநெல்வேலி தொகுதிகளைக்கூட அம்மா கோட்டை விட்டு விட்டார். பெரியகுளத்தில் சசிகலா அக்காள் மகன் தினகரன் தோற்றார்.

தமிழகத்தில் ஓரளவு முன்னேறிவந்த பி.ஜே.பி. சாண் ஏற முழம் சறுக்கி மீண்டும் பூஜ்யத்துக்கு வந்துள்ளது. வைகோவை சிறையிட்டதன் பலனை இப்போது நன்கு உணர்கின்றனர். கடந்த முறை பி.ஜே.பி கூட்டணிக்கு தமிழகத்திலிருந்து 25 எம்.பிக்கள்; இப்போது பூஜ்யம். 1998 இல் 30 எம்.பிக்கள் கிடைத்தனர்.

வடக்கே ஹரியானா, டெல்லி, ஹிமாசல் பிரதேசத்தில் கடந்த முறை பூஜ்யமாக இருந்த காங்கிரஸ், முறையே 10 இல் 9, 7 இல் 6, 4 இல் 3 என வெற்றிகளைக் குவித்துள்ளது. அனைவரது புருவத்தையும் உயர்த்த வைத்தது குஜராத்தாகும்.

முஸ்லிம்களை எரித்த பின்பு வந்த சட்டசபைத் தேர்தலில் அமோக வெற்றி கண்ட கொலைகாரர் மோடி கணிசமான தோல்வி கண்டார். 26 இல் 21 இடங்களை சென்ற முறை வென்ற பி.ஜே.பி.யின் இடங்களில் 14 குறைந்தது.

பெரிய மாநிலமான உத்தரப்பிரதேசத்தில் 1996 இல், 58 இடங்களை வென்ற பி.ஜே.பி. இம்முறை 19 ஆக சுருங்கிவிட்டது. முலாயம் கட்சி 38 இடங்களை வென்று தள்ளியுள்ளது. மாயவதியும் தனது எண்ணிக்கையை அதிகரிக்க முடிந்தது. காங்கிரஸ் கடந்த முறைவெற்றியை (10 இடங்கள்) தக்கவைத்துக் கொண்டுள்ளது. ஜம்முகஷ்மீரிலும் பி.ஜே.பி. கவிழ்ந்தது. 6 இல் 4 இடங்களை காங்கிரஸ் கூட்டணிக்கு வந்துள்ளது.

பி.ஜே.பிக்கு ஆறுதல் தருவது கர்நாடகா பஞ்சாப், ஒரிசா, சத்தீஸ்கர், ராஜஸ்தான், மத்தியபிரதேஷ் மாநிலங்கள். கர்நாடகா சட்டப்பேரவையிலும் அது கணிசமான இடங்களை வென்றாலும் ஆட்சியமைக்க சில இடங்கள் போதாது.

ஒரிசாவில் கூட்டணி சட்டசபை தேர்தலிலும் (147 இல் 92 இடங்கள்) லோக்சபா தேர்தலிலும் (21 இல் 18) நல்ல வெற்றி கண்டது. பஞ்சாயில் காங்கிரஸ் ஆட்சிக் கெதிராக பி.ஜே.பி. கூட்டணி கட்சியான அகாலி தளம் வென்றுள்ளது. (13 இல் 11 இடங்கள்)

## இடது சாரிகளுக்கு கிடைத்த வெற்றி

சுதந்திரத்தின் பின்பு இடதுசாரிகள் தமது மிகப் பெரிய வெற்றியை இத் தேர்தலில் கண்டுள்ளனர். மேற்கு வங்கத்தில் 42 இல் 35 ஐயும், கேரளாவில் காங்கிரஸை வீழ்த்தி 20 இல் 18 இடங்களையும் வென்று மொத்தம் 62 இடங்களை பெறுகின்றனர்.

இத்தாலியின் வடக்கு ட்யூரின் பகுதியில் 1947 இல் பிறந்த சோனியா 21 வயதில் இந்திராவின் மருமகளானார். மாமியார் கனவு கூட கண்டிருக்கமாட்டார். பிரதமர் பதவியை சோனியா ஏற்பாரென.

***


STUDY IN LONDON

LONDON ல் உள்ள சர்வதேச அங்கீகாரம் பெற்ற பல்கலைக்கழகங்களிலும், கல்லூரிகளிலும் உயர் கல்வி கற்க விரும்பும் மாணவர்களுக்கான...

இலவச வழிக்காட்டல் கருத்தரங்கு.

கலந்துகொள்ளும் மாணவர்களில் 05 வருக்கு 50 % கட்டணக் கழிவு வழங்கப்படும். (குலுக்கல் முறையில்)

JULY / SEPTEMBER 2004 இற்கான அனுமதிகள் தற்பொழுது ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

இடம் : MMIC மண்டபம், வெள்ளவத்தை. (Elephant House Super Market மேல் மாடியில்)

காலம் : 23-05-2004 (ஞாயிற்றுக்கிழமை)

நேரம் : குழு 1 - காலை 9.30 - 12.00 வரை. குழு 2 - மாலை 2.00 - 5.00 வரை.

Call us & Reserve yours seats! 0114-203646.

Courses Offered :
HND/BSC/BA/MSC/MA/BBA/BTEC/MBA.

| | | |
|---|---|---|
| Business Studies | Engineering | Marine Engineering |
| Computing | E-commerce | Tele comminication |
| Marketing / Law | Internet Computing | Banking & Finance |

தகுதியான மாணவர்களுக்கு முதல் வருடம் விலக்களிக்கப்படும் (First Year Exemptions).

G.C.E. (A/L) ல் 1 பாடங்களில் சித்தியடைந்தவர்களுக்கு, கட்டணக்கழிவுகள் உண்டு.

G.C.E. (O/L) ஆங்கில பாடத்தில் D சித்தி பெற்றவர்களுக்கும் விசேட வழிவு உண்டு.

பட்டதாரிகளுக்கு, நேரடி MBA, வழிகாட்டு இலவச புலமை பரிசில்களும் உண்டு.

அடிப்படை அனுமதிக்கான தகமைகள் : G.C.E. (O/L).

மேலதிக விபரங்களுக்கு...

EBS International (Pvt) Ltd.
162B-1/1, Galle Road, Dehiwela. Tel/Fax : 0114-203646.
(Opp. to E-Bert Silva Petrol Shed)

**கடந்த ஞாயிறு அன்று யாழ். நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்ற சமகால அரசியல் ஆய்வரங்கில் அரசியல் யதார்த்தவாதி மு.திருநாவுக்கரசு, இலங்கையின் உள்நாட்டு அரசியலின் வரலாற்றுப் போக்கை சர்வதேச அரசியலுடன் ஒப்பிட்டு ஆய்வுரை நிகழ்த்தினார். இதனைத் தொகுத்து அளித்தவர் யாழ். ஆத்மா.**

# அரசியல் தீர்வின் இறுதிப் பொதி போரேதான்!

பண்டாரநாயக்கா வம்சத்தின் அரசியல் சகாப்தத்தை முடிவுக்குக் கொண்டுவரும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் கருப்பைக்குள் ஜே.வி.பி. என்ற அரசியல் கட்சி தனது சிசுவை வளர்த்துக்கொண்டிருக்கிறது என்று ஈழத்தின் மூத்த அரசியல் திறனாய்வாளர்களுள் ஒருவரான மு.திருநாவுக்கரசு யாழில் இடம்பெற்ற சமகால அரசியல் ஆய்வரங்கில் தெரிவித்துள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை யாழ். நாவலர் கலாசார மண்டபத்தில் நிறைந்து வழிந்த யாழ். குடாநாட்டின் அரசியல் ஆர்வலர்கள் மத்தியில் இலங்கையின் உள்நாட்டு அரசியலின் வரலாற்றுப்போக்கை சர்வதேச அரசியலுடன் ஒப்பிட்டு தனது ஆய்வினை அவர் சமர்ப்பித்தார்.

உலக மயமாதலின் விளைவாக உலக நாடுகளின் இறைமை என்பது பொருளாதார ரீதியில் அர்த்தமிழந்து போனமையால் நாடுகளுக்கு இடையிலான எல்லைக்கோடுகள் என்பன வெறும் அரசியல் எல்லைகளாகவே உள்ளன என்றும் சர்வதேச முதலாளித்துவ ஏகாதிபத்தியத்தின் மாகாணங்களாக உலக நாடுகள் மாறுகின்றன என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

## பிராந்திய சுயாட்சியா? சமஷ்டியா? தனிநாடா?

திறந்த சந்தைப் பொருளாதாரத்தின் சமநிலையை உள்நாட்டு இனப்போர்கள் பாதிப்பதனால் இனங்களின் உரிமைகளை உறுதிப்படுத்தி இனப்பிரச்சினைகளுக்கான தீர்வுகளை இலகுபடுத்தவும், விரைவுபடுத்தவும் அமெரிக்கா விரும்புகிறது.

அத் தீர்வுகளுக்காக பிராந்திய சுயாட்சி, சமஷ்டி ஆட்சி , தனி நாடாகப்பிரிந்து செல்லுதல் போன்ற மூன்று வகையான தீர்வுகளை அமெரிக்கா உலகின் வெவ்வேறு பகுதிகளில் சந்தர்ப்பம் சூழ்நிலையைப் பொறுத்து பிரயோகித்திருக்கின்றது என்பதை அவர் உதாரணங்களுடன் விளக்கியிருந்தார்

ஸ்கொட்லாந்தில் ஒற்றையாட்சியின் கீழ் (UNDER UNITARY RULE) பிராந்திய சுயாட்சியும் பொஸ்னியா— ஹெர்சக்கோவினாவில் சமஷ்டியின் கீழ் (UNDER CONFEDERATION) அதிகாரப்பகிர்வும் கிழக்குதிமோரில் பிரிவினை மூலம் தனிநாடு அமைக்கப்பட்டும் அரசியல் தீர்வுகள் காணப்பட்டுள்ளன என்பதை தொட்டுக்காட்டினார்.

## உலகிலேயே சிறந்த சமஷ்டி மாதிரி

பொஸ்னியா— ஹெர்சக்கோவினா பிராந்தியத்தின் இனப்போருக்கு அமெரிக்கா முன்வைத்திருந்த மாதிரியில் உள்ள சிறப்பான அம்சங்களை தொட்டுக்காட்டிய அரசியல்திறனாய்வாளர், இதுவரை உலகில் முன்வைக்கப்பட்ட சமஷ்டி மாதிரிகளுள் சிறந்ததாக அது உள்ளது என்பதையும் விளக்கினார்.

அங்குள்ள கூட்டு ஜனாதிபதி முறையை (Collective Presidency) அவர் உதாரணமாக விளக்கினார். சமஷ்டி பிராந்தியங்களின் அரசியல் அதிகாரங்களையும் அவர் விளக்கினார்.

மேலும், அச்சமஷ்டி அரசு திறந்த சந்தைப்பொருளாதாரத்தையே கடைப்பிடிக்க வேண்டிய அழுத்தம் அத்தீர்வினூடரக அமெரிக்காவால் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் தீர்வின் உத்தியோகபூர்வ ஆவணத்தின் உரையில் அது இடம்பெற்றிருப்பதையும் அவர் சுட்டிக்காட்டினார். அச்சமஷ்டித் தீர்விலுள்ள சில எதிர்மறையான அம்சங்களையும் அவர் விளக்கினார்.

## இடதுசாரிகளை விழுங்கிய பண்டாவும், பண்டாக்களை விழுங்கும் ஜே.வி.பியும்

உலகப் போருக்கு முந்திய பனிப்போர்க் காலத்தில் இலங்கையில் மாறிமாறி ஆட்சிக்கு வந்த ஐக்கிய தேசியக்கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி என்பன அமெரிக்காவையும், இந்தியாவையும் மாறி மாறி வளைத்து தமது காரியங்களை ஆற்றி வந்ததையும் அவர் தெளிவுபடுத்தினார்.

அன்றைய காலங்களில் சந்தர்ப்பவாத போர்வைக்குள் ஒரு இடதுசாரிபோல நடித்து குளிர்காய்ந்த எஸ்.டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா சமசமாஜிகளையும் கம்யூனிஸ்டுகளையும் விழுங்கிய அரசியல் நாடகத்தை சுவாரஸ்யமாக அவர் விளங்கப்படுத்தினார்.

அது இன்றைக்கு தலைகீழாக பண்டாரநாயக்காக்களின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கருப்பைக்குள் ஜே.வி.பி. என்ற இன்னொரு செங்கொடிக் கட்சி அரசியல் பிரசவத்துக்காக வளர்கிறது என்பதையும் விளக்கினார்.

பண்டாரநாயக்காக்களின் அரசியல் சகாப்தம் முடிவுக்கு வருவதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

## இந்தியாவையும் அமெரிக்காவையும் கையாளும் முதிர்ச்சி

1987இல் ஜே.ஆர் ஜெயவர்த்தனா சாணக்கியமாக தமிழர்களுக்கு எதிராக இந்தியாவைத் திருப்பியபோது சிங்கள அரசாங்கம் பெற்றிருந்த கைமேல் பலனை தற்போது லக்ஷ்மன் கதிர்காமர் ஊடாக ஜனாதிபதி சந்திரிக்கா பெற முயற்சிக்கிறார்.

அன்று இந்தியாவின் வருகையை எதிர்த்த ஜே.வி.பி. இன்று இந்தியாவின் தலையீட்டைக்கோரி நிற்கிறது. இது நிலைமை தலைகீழாகிவிட்டதைக் காட்டுகிறது.

மேலும் ஆட்சியிலுள்ள இன்றைய அரசாங்கமும் சரி இதற்கு முந்திய ரணில் அரசாங்கமும் சரி அமெரிக்காவையும் இந்தியாவையும் ஒரே நேரத்தில் கையாளத்தக்க முதிர்ச்சிக்கட்டத்தை அடைந்துள்ளது என்றும் அவர் கூறினார்.

## சமாதானத்தீர்வு இல்லவே இல்லை

தென்னிலங்கையின் தற்போதைய அரசியல் களத்தை மிகத் தெளிவாகப் படம் பிடித்துக்காட்டிய அவர், இலங்கை இனப்பிரச்சினைக்கு சமாதானப் பேச்சுக்களினூடாக அரசியல் தீர்வு இல்லவே இல்லை என்று அடித்துக்கூறினார்.

இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வுக்கான இறுதிப்பொதி போர்தான் என்றும் ஆணித்தரமாகத் தெளிவுபடுத்தினார்.

## பண்டாரநாயக்காவின் சகாப்தம் மலையேறுகிறதா?

தென்னிலங்கையில் விவசாயிகள் சமூகம், கடற்றொழிலாளர் சமூகம் என்பவற்றின் உறுதியான ஆதரவுத்தளத்தைக் கட்டி வளர்த்துக்கொண்டு கிட்டத்தட்ட தான் போட்டியிட்ட அத்தனை தொகுதிகளிலும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் வேட்பாளர்களைக் காட்டிலும் விருப்பு வாக்குகள் அதிகளவில் பெற்றுள்ள ஜே.வி.பி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முதுகிலேறி நின்றுகொண்டு வேகமாக வளர முற்படுகிறது.

முன்னாள் பிரதமர் ரணில் விக்கரமசிங்கவை மிரட்டி மிரட்டி தனது அரசியல் ஆயுளை இலகுவாக நகர்த்துவதற்கு பதிலாக, ஜே.வி.பியினால் விரட்டப்பட்டுக்கொண்டிருக்கும் அவல நிலை ஜனாதிபதிக்கு ஏற்பட்டுள்ளது.

பண்டாரநாயக்கா வாதம் விகாரமடைந்து ஜே.வி.பி. வாதமாகிவிட பண்டாரநாயக்காக்களின் அரசியல் வகிபங்கு படிப்படியாக அற்றுப்போக ராஜபக்ஷ குடும்பம் அரசியல் அரங்கேறுவதையும் அவர் எடுத்துக் கூறினார்.

## தீர்வை விரும்பும் சர்வதேசமும் போரைநோக்கிய ஜே.வி.பியும்

இக்கட்டத்தில் ஜனாதிபதி போரைத் தொடங்குவதற்கு நினைப்பாராகில் அது அவரது தற்கொலைக்கே ஒப்பாகும். போரை ஆரம்பிப்பது என்பது ஜே.வி.பியை அரசியல் ரீதியில் மிகவும் உத்வேகமாக வளர்த்துவிடும். ஜே.வி.பி படைகளுக்கு முப்பதினாயிரம் பேரைத் திரட்டப்போவதாக ஏற்கனவே களத்தில் இறங்கி வேலை செய்கிறது.

ஆகையினால் ஜனாதிபதி சந்திரிகா அடுத்துவரும் ஒருகாலகட்டத்தை போரற்ற காலமாகக் கடத்தவே விரும்புவார் என்பது தெளிவாகிறது.

எனினும், போர் எழுச்சி, தேசபக்தி போன்றவிடயங்களை உதட்டளவில் உரைத்துக்கொண்டு தனக்குக் கிடைத்துள்ள விவசாயம், மீன்பிடித்தொழில் துறைசார்ந்த பொதுமக்கள் சக்தியை திரட்டும் வகையில் முன்னுதாரணமாக அரசியல், பொருளாதார வேலைத்திட்டங்களை முன்னெடுக்கும் ஒரு தீவிர சக்தியாக வளர்வதற்கு ஜே.வி.பி சமாதான காலத்தை உபயோகப்படுத்தலாம்.

அவ்வாறே ஜே.வி.பி போரைத்தூண்டி ஒரு போரை வெடிக்கவைப்பதன் மூலம் தன்னை ஒரு சக்திமிக்க கட்சியாக வளர்த்தெடுக்கவும் திட்டங்களைக் கொண்டிருக்கலாம்.

எனினும் தமிழினத்தின் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு பேச்சுவார்த்தை மேசையில் எக்காலத்திலும் காணமுடியாதவாறு தென்னிலங்கை அரசியல் சூழல் எழுந்து நிற்கிறது.

ஆனால் சர்வதேசச் சூழல், உலகின் இன்றைய உலகமயமாதலின் கீழ் திறந்த சந்தைப்பொருளாதாரத்தையும் அதன் சமநிலையையும் பாதிக்கும் போர்களும் போராட்டங்களும் அரசியல் வழிமுறைகளுடாக தீர்க்கப்பட வேண்டும் என்ற அடிப்படையிலான எத்தனிப்புகளிலேயே அதன் கவனம் இருக்கும்.

இவ்வாறாக உள்நாட்டு வெளிநாட்டு சூழ்நிலைகள் ஒன்றுக்கொன்று மிகவும் துருவப்பட்டு முரண்பட்டதாக இருக்கும் நிலையே ஈழத்தமிழினத்தைப் பொறுத்தவரையில் சாதகமாக இருக்கும் எனவும் அவர் விளக்கினார்.

## இந்தியா என்ன செய்யும்?

இந்தியா இலங்கை விவகாரத்தில் பங்காற்றும் வகையில் தலையீடு செய்ய வேண்டும் என்ற கோரிக்கை கதிர்காமரிடமிருந்து வந்தாலென்ன ஜனாதிபதியிடமிருந்து வந்தாலென்ன இந்தியா இவ்விவகாரத்தில் இனிமேல் தலையிட விரும்புவதற்கான தெரிவுகள் இல்லையென்றே சொல்லலாம்.

சிலவேளை இந்தியா தலையிட விரும்பினால்கூட நேர்வேவகிக்கும் பங்கை இந்தியா தட்டி வீழத்திவிட்டே அவ்விடத்தைத் தான் எடுத்துக் கொள்ள விரும்பும்.

தனது பிராந்திய நலன் என்ற ஒரு ஒற்றைப்பாதைக்கூடாக சென்று இலங்கை விவகாரத்தைக் கையாண்ட இந்தியா முன்பு ஒரு கசப்பான அனுபவத்தைச் சம்பாதித்தது.

தனது மாநிலங்களுக்குள்ள உரிமைகளுடன் கூடிய தீர்ப்பொன்றை அரசியல் பொருளாதார வரலாற்றுக்காரணங்களுக்காக இலங்கை இனப்பிரச்சினைக்குப் பிரயோகிப்பதை இந்தியா விரும்பமாட்டாது. இந்தியாவின் விருப்பு வெறுப்புகள் என்னவாகவிருப்பினும் இந்தியா இலங்கை இனப்பிரச்சினைகளில் இக்காலகட்டத்தில் நேரடியாகத்தலையிடாது என்பது ஜனாதிபதி சந்திரிகாவுக்கும், வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமருக்கும், ஜே.வி.பிக்கும் நன்கு விளங்கும் என்பதையும் தனது ஆய்வில் அவர் சுட்டிக்காட்டினார்.

தமிழ்நாட்டிலுள்ள தமிழ்மக்களின் உரிமைக் கோரிக்கைகளுக் அப்பால் காஷ்மீர் மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தில் ஈழத்தமிழரின் உரிமைப்போராட்டம் வந்துமுட்டிவிடும் என்று இந்தியா பயங்கொண்டுள்ளமையையும் அவர் விளக்கினார்.

## விடுதலைப்புலிகள் நாடாளுமன்றத்தை பயன்படுத்தும் யுக்தி

தமது போராட்ட இயக்கத்தின் நிறுவன ரீதியான இலக்குகளை எய்துவதில் விடுதலைப்புலிகள் தெரிந்தெடுத்த மிகச்சிறந்த யுக்தியாக பார்க்கப்படும் விடயம் என்னவெனில் தமது அரசியல்பலத்தை நிரூபிக்கும் வகையில் இருபத்தியிரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களை அங்கு அனுப்பியமையாகும்.

இதன் மூலம் கொழும்பின் நாடாளுமன்ற ஜனநாயகச் சமநிலையில் தமது நேரடியான கையாளுகையை மேற்கொள்ளும் வாய்ப்பை விடுதலைப்புலிகள் மிகவும் நன்றாகப் பயன்படுத்தத் தொடங்கியமை மிகவும் பாராட்டத்தக்க விடயமாகும்.

## ரணில் வென்றிருந்தால் ஆறு மாதத்துள் போர் வெடித்திருக்கும்

13ஆவது நாடாளுமன்றத் தேர்தலில் மீண்டும் ரணில் பிரதமராகியிருந்தால் அவர் அரசாங்கத்தை அமைத்திருந்தால் மீண்டும் ஆறு மாத காலத்திற்குள் போர் வெடித்திருக்கும்

விடுதலைப்புலிகள் முன்வைத்துள்ள இடைக்காலத் தன்னாட்சி அதிகார யோசனைகளை மேசையில் வைத்து பேச்சுக்களை ஆரம்பித்திருந்தால் நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதியும் ஜே.வி.பி போன்ற தீவிர அரசியல் சக்திகளும் ரணில் மேற்கொண்டிருந்திருக்கக்கூடிய முயற்சிகளுக்கு பெரும் நெருக்கடிகளை ஏற்படுத்தி போரை வெடிக்கச் செய்திருப்பர்.

அந்நிலையில் புலிகளுக்கும் போராடுவது தவிர்க்க முடியாததாகியிருக்கும். ஏதோ ஒரு வகையில் தீர்வு காண வேண்டும் என்ற சர்வதேச அழுத்தமும், பேச்சுக்கு சாதகமாக நிறைவேற்று அதிகாரமும் நாடாளுமன்ற ஜனநாயக பலமும் ஒரே கட்சியிடம் இருப்பதும் மீண்டும் போரைத் தொடங்கி ஜே.வி.பியை ஓங்கி வளரச் செய்யக்கூடாது என்ற ஜனாதிபதியின் முடிவும் மீண்டும் போர் உடனடியாக வெடிக்கும் சாத்தியங்களை மிகவும் குறைத்துவிட்டுள்ளது.

தனக்குக் கிடைத்துள்ள அமைச்சுக்களுடாக விவசாயிகளுக்கும், மீனவத் தொழிலாளர்களுக்கும் முன்மாதிரியான பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களை முன்வைத்து போரில்லாத சூழலில் தன்னை அரசியல் ரீதியாக வளர்த்தெடுக்க ஜே.வி.பியும் முனைவதாகவே தெரிகிறது.

எனினும் இன்னமும் சரியான எதிர்வுகூறலைச் செய்வதற்கு ஜே.வி.பி அடுத்த சில மாதங்களுக்குள் என்ன வகையான நகர்வுகளை மேற்கொள்ளப்போகிறது என்பதைக் கவனமாக அவதானிக்க வேண்டியுள்ளது எனவும் அவர் விளக்கினார்.

## சிங்கள இனவாதத்தின் பலமான தூணாக விளங்கும் ஊடகத்துறை

கடந்த தேர்தல் காலங்களில் இலத்திரனியல் ஊடகத்துறையையும் அச்சு ஊடகத்துறையையும் மிகப்பரந்த அளவில் ஜே.வி.பி பயன்படுத்தியது.

மேலும் தமிழர்களுக்கான உரிமை மறுப்பை மிகப்பலமான முறையில் நன்கு திட்டமிட்டு பேணிவருவது சிங்கள ஊடகத்துறை என்பது அதனது தீர்க்கமான முடிவாகும்.

சிங்கள சமூகத்தை என்றைக்கும் தமிழ் மக்களுக்கு எதிரான சமூக யதார்த்தத்துடன் பேணிவரும் சிங்கள ஊடகத்துறை, தனது போக்கை அரசியல் தீர்வுக்கான சாதகமான சூழலாக உருவாகும் வகையில் மாற்றாத வரை சிங்களவர்கள் மத்தியில் மாற்றம் தெரியப்போவதில்லை.

சிங்கள மக்கள் போரற்ற சூழலை விரும்புகிறார்கள். எனினும் தமிழர்களுக்கான உரிமைக்கையளிப்பை விரும்பும் நிலையில் அவர்கள் இல்லை என்பதையும் அவர் விளக்கினார்.

## கருணா விவகாரத்துக்கும் சர்வதேச சக்திகளுக்கும் தொடர்பு உண்டா?

ஆய்வின் முடிவில் சபையிலிருந்த அரசியல் ஆர்வலர்கள் கேள்விகள் கேட்க சந்தர்ப்பம் கொடுக்கப்பட்டது.

அங்கு பிரசன்னமாகியிருந்த ஊடகவியலாளர் ஒருவர் ''கிழக்கு நெருக்கடியில் சர்வதேச சக்திகளின் தொடர்பு உள்ளதாகப் பார்க்கப்படுகிறது. அதனையிட்டு தங்களின் கருத்து என்ன?'' என்று கேட்ட போது எடுத்த எடுப்பிலேயே இந்தியாவுக்கோ, அமெரிக்காவுக்கோ இவ்விடயத்தில் தொடர்பு இருக்கக்கூடிய ஏதுக்கள் இல்லை என்பதை சில நிமிடங்கள் செலவழித்து அவர் விளங்கப்படுத்தினார்.

தான் உளவுத்தகவல்களின் அடிப்படையில் இவ்விளக்கத்தைத் தராதபோதிலும் கட்டமைப்பு ரீதியாக தனது அரசறிவியல் தளத்தில் நின்று பார்க்கும்போது இந்த முடிவுக்கே வரமுடிகிறது என்றும் அவர் சொன்னார்.

எனினும் கருணா நெருக்கடியை பிந்திய நிலையில் சர்வதேச சக்திகள் விடுதலைப்புலிகள் மீதான அழுத்தமாகப் பயன்படுத்தக்கூடிய ஏதுக்கள் உருவாகியிருக்கலாம் என சற்று நழுவலாகப் பதிலளித்தார்.

இந்தியாவைப் பொறுத்தவரை கருணா விவகாரத்துக்கூடாக வடக்கையும் கிழக்கையும் பிரிக்கும் சூழ்ச்சி இருந்திராது என்றும் வடக்கிலிருந்து கிழக்கைப்பிரித்தால் வடக்கு பலமிழந்து போக பின்பு இலங்கை மீதான தலையீட்டுக்கான சந்தர்ப்பம் இந்தியாவுக்கு இல்லாது போய்விடுவதை இந்தியா விரும்பவில்லை எனவும் அவர் விளக்கினார். ஏற்கனவே தமிழ் ஊடகங்களின் வழிநடத்தலின்படி யாழ்ப்பாணத்தவர் மத்தியில் தோன்றியிருந்த அபிப்பிராய வளர்ச்சியிலிருந்து சற்று வேறுபட்டதாக இவரின் விடை அமைந்திருந்தமை இங்கு குறிப்பிடவேண்டிய அம்சமாகும்.

–யாழ்.ஆத்மா –

# மேல் கொத்மலைத் திட்டமும் அதற்கு எதிரான போராட்டமும்

வேதாளம் சொல்லும் கதையைக் கேட்டு அதற்கு தகுந்த பதில் விக்கிரமாதித்தனால் கொடுக்கப்பட்டதும் வேதாளம் மீண்டும் முருங்கை மரத்தில் ஏறிக் கொள்ளும் கதை ஐதீகமானது.

எனினும் இந்த வேதாளம் முருங்கை மரம் என்ற சொற்பதங்கள் பல்வேறு விடயங்களுக்கும் சுட்டிக் காட்டப்பட்டு வருகின்றன.

மீண்டும் முருங்கை மரம் ஏறிய வேதாளம் என்ற வசனத்தை, தலவாக்கலை மேல் கொத்மலை நீர்த்தேக்க திட்டத்துக்கு எதிராக கடந்த ஞாயிற்றுக்கிழமை நடந்த ஆர்ப்பாட்டம் நினைவுபடுத்துகிறது.

மேல்கொத்மலைத் திட்டத்தை ஒரு சாரார் எதிர்ப்பதும் ஒரு சாரார் ஆதரிப்பதும் ஏன்? இதற்கு அப்பால் நின்று பார்ப்பவர்களை, தலையைப் போட்டுப் பிய்த்துக் கொள்ள வைக்கிறது இந்த விவகாரம்.

சரி! மேல் கொத்மலை மின் உற்பத்தி திட்டத்தின் மூலம் பாதிப்பு ஏற்படும் என பல அமைப்புகள் உட்பட மலையகத்தின் பிரதான தொழிற்சங்கமான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் போன்ற தொழிற் சங்கங்கள் தமது பலத்த எதிர்ப்பை தெரிவித்து வருகின்றன.

சுமார் இருபது வருடங்களுக்கு முன்னர் அப்போதிருந்த ஜே.ஆரின் அரசு இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தத் திட்டமிட்டது.

கொத்மலை நீர்த்தேக்கத் திட்டம் முடிவுற்ற கையோடு அப்போது மகாவலிக்கு அமைச்சராக விருந்த காமினி திஸாநாயக்க தலவாக்கலையில் மேல்கொத்மலை நீர்த்தேக்கத் திட்டத்தை அமுல்படுத்த திட்டமிட்டார். அதற்கிடையில் றந்தனிகல, விக்டோரியா போன்ற நீர்த்தேக்கத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்தமையால் மேல் கொத்மலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்த முடியாமல் போனது.

அதன் பின்னர் ஏற்பட்ட அரசியல் நெருக்கடிகள், பொருளாதாரக் கெடுபிடிகள் காரணமாக உரிய நேரத்தில் இத்திட்டத்தை அமுல் செய்வது காலதாமதமானது.

பின்னர் ஐ.தே.கட்சி அரசு 2001 ஆம் ஆண்டு பதவிக்கு வந்ததும் முதன் முதலாக அதன் கவனம் மேல்கொத்மலைத் திட்டம் பக்கம் திரும்பியது.

அதன்படி அப்போது மின்சக்திக்குப் பொறுப்பாக இருந்த அமைச்சர் கரு ஜெயசூரியவினால் இ.தொ.காவின் பலத்த எதிர்ப்புக்கு மத்தியில் அடிக்கல் நடப்பட்டது.

இ.தொ.கா இதற்கெதிராக போர்க்கொடி தூக்கியது. தலவாக்கலை நகர் மத்தியில் பாரிய மேடை ஒன்றை அமைத்து எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தையும் கூட்டத்தையும் நடத்தியது.

ஆனால், அடுத்த மாதமே அமைச்சரவை கூட்டத்தில் இத்திட்டத்தை அமுல்படுத்தியே தீருவது என முடிவெடுக்கப்பட்டது. அப்போது அமைச்சரவையில் இருந்த இ.தொ.கா. தலைவர் ஆறுமுகன் தொண்டமான் அமைச்சரவையில் எவ்வித எதிர்ப்பும் காட்டவில்லை என தெரிவிக்கப்பட்டது.

உண்மையிலேயே இத்திட்டம் அமுல்படுத்தப்பட்டால் மலையகத்தின் பிரதான நான்கு நீர்வீழ்ச்சிகள் இல்லாமல் போய்விடும். இதில் டெவன், சென்கிலேயர் போன்றவை அடங்கும்.

தலவாக்கலைக்கு போகும் போது மிகவும் ரம்மியமாக அமைந்திருக்கும் இயற்கையாகவே அமைந்த நீர்வீழ்ச்சிகள் இல்லாமல் போய்விடும் என்பது கசப்பான உண்மை.

அதைவிட பல விவசாயக் காணிகள் பாழடைந்து விடும் எனவும், இதன் காரணமாக மண்சரிவு போன்ற அனர்த்தங்களுக்கு முகம் கொடுக்க வேண்டிய சிக்கலான நிலை தோன்றும் எனவும் எச்சரிக்கப்பட்டிருக்கிறது.

இதைத் தவிர திட்டம் அமுல்படுத்தப்பட்டால் அங்கு தொழில் காரணமாக வரும் பெரும்பான்மை இனத்தவர்கள் அங்கேயே தங்கிவிடுவர். இதனால் அங்கு பெரும்பான்மையாக வாழும் தமிழர்களின் பலம் சிதறடிக்கப்பட்டுவிடும் என கூறப்படுகிறது.

உண்மையில் இந்த வாதம் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டிய ஒரு விடயமாகும். இந்த திட்டம் ஆரம்பிக்கப்பட்டால் அது முடிவுற சுமார் ஐந்து வருடங்கள் பிடிக்கும். அத்தோடு இதன் பொருட்டு வேலைக்கு வரும் ஆயிரக்கணக்கானவர்கள் அங்கேயே தங்க வேண்டிய நிலை ஏற்படும். மறுபுறம் நீர்த்தேக்கத்தை அண்மித்த பகுதியில் வாழுபவர்கள் அங்கிருந்த வெளியேறவேண்டி வரும்.

சுமார் ஐந்து வருடகாலம் ஒரு பகுதிக்குள் பழக்கப்பட்டவர்கள் அங்கிருந்து பின்பு வெளியேறுவார்கள் என்று நம்ப முடியாது. இப்படியான வாதங்களுக்கு மத்தியில் இத்திட்டத்தை ஆதரிப்பவர்களின் வாதத்தைப் பார்ப்போம்.

இத்திட்டம் அமைக்கப்படுவதால் தலவாக்கலை நகரம் புதுப் பொலிவு பெறும். பெருந்தெருக்கள் அமைக்கப்படும். பல ஆயிரக்கணக்கான தமிழர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும். நீர்த்தேக்கம் அமையும். பிரதேசத்திலிருந்து வெளியேற்றப் படுபவர்களுக்கு நஷ்டஈடு வழங்கப்படும். அவர்களுக்கு நவீன வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படும். புதிய பாடசாலைகள், நகர மண்டபங்கள் என பல்வேறு முன்னேற்ற வழிகள் ஏற்படும். அது மட்டுமன்றி தமிழர் பகுதியில் அமைக்கப்படும் மின் நிலையத்தால் மின்சாரம் இல்லாத பெரும்பாலான இடங்களுக்கு மின்சாரம் கிடைக்கும். பொருளாதார ரீதியாக இப்பகுதி மக்கள் வளம் பெறுவர். இப்படி வாதிடப்படுகிறது.

எனவே, எப்படியான வாதபிரதிவாதங்கள் இருந்தாலும் இத் திட்டத்தை அமுல்படுத்த அரசு பின்வாங்கப் போவதில்லை என்பது தெரியவந்துள்ளது.

காரணம், நீர்த்தேக்கத் திட்டத்தால் பாதிப்புறும் பகுதிகள் என கூறப்படும் பகுதிகளில் வசிப்பவர்கள் கையொப்பமிட்ட மகஜர் அரசாங்கத்திடம் கொடுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தை அமுல்படுத்த தாம் விரும்புவதாக அவர்கள் அந்த மகஜரில் தெரிவித்துள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை கூட தலவாக்கலை நகரைத் தவிர்ந்த வேறு பகுதிகளில் இருந்து சென்றவர்களே ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். ஆர்ப்பாட்டம் நடந்த போது கூட அப்பகுதியில் வசிக்கும் சிங்களவர்கள் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தி இருக்கின்றனர்.

தாம் வாழும் பகுதியில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டத்தை அப்பகுதியில் வாழ்பவர்கள் ஆதரிக்கும் போது வெளியார் மட்டும் ஏன் எதிர்க்கிறார்கள் என கேள்வி கேட்கின்றனர்.

எது எப்படியாயினும் மலையகத்துக்கு தீங்கு ஏற்படும் எந்த விடயமானாலும் மலையகத்தவர் ஓரணியில் அணிதிரண்டு அதை எதிர்க்க வேண்டும்.

– ஆ.வரதன். –






# டேஸ்ட்கடை தனிகாசலம்

மலையகத்தில் பல்வேறு இடங்களில் பெருந்தோட்டத் தமிழர்கள் மீது அண்மைக் காலமாக மேற்கொள்ளப்பட்டுவரும் இனவாத தாக்குதல் சம்பவங்கள்பற்றி சில முற்போக்கு இளைஞர்கள் கூடி விவாதித்துக் கொண்டிருந்தனர்.

இங்கிரிய பகுதியில் எதுராகல தோட்டத்தில் இனவாத கும்பல் ஒன்றின் தாக்குதலில் கொல்லப்பட்ட அந்தோனிமுத்துவின் இறுதிக் கிரியையில் கலந்து கொள்வதற்காக சென்றிருந்த தணிகாசலம், ஒரு மூலையில் அமர்ந்துகொண்டு கதைத்துக் கொண்டிருந்த இளைஞர்களின் பேச்சைச் செவிமடுத்தார்.

காலங்காலமாக மலையக தமிழர் மீது குறிவைத்து மேற்கொள்ளப்படும் காட்டுமிராண்டித் தனமான செயல்கள் பற்றி மலையகத் தலைமை வெறும் கண்டனம் மட்டும் தெரிவித்துவிட்டு மௌனம் சாதிப்பதை இனியும் பார்த்துக் கொண்டிருக்க முடியாது என்று இளைஞர்கள் காரசாரமாக விவாதித்துக்கொண்டிருந்தனர்.

மெல்ல அவர்களுக்கு அருகில் சென்ற தணி அண்ணன் தன்னை அவர்களிடம் அறிமுகப்படுத்திக் கொண்டார். அந்த கூட்டத்தில் இருந்த இளைஞன் ஒருவன் "அண்ணே! இனியும் நாம பொறுக்க முடியாது. கந்தப்பொலவில் இரண்டுபேரை சுட்டுக்கொன்றனர். அவர்களை அடக்கம் செய்த நிலத்தின் ஈரம் காய முன்னரேயே இங்கிரியாவில் அந்தோனிமுத்து கொலைசெய்யப்பட்டிருக்கிறார். இனி அடுத்த அடுத்த நாளில் என்ன நடக்குமோ தெரியாது. தெரணியகல, எட்டியாந்தோட்ட, தெனியாய போன்ற இடங்களில் தோட்டத் தமிழர் இந்த இனவாதிகளால் தாக்கப்பட்டிருக்காங்க. பலர் சொந்த வீட்ட விட்டுவிட்டு வெளியேறி இருக்காங்க."

"கந்தப்பொல தாக்குதல்ல கொல்லப்பட்டவங்களுக்கு ஜனாதிபதி நட்டஈடு கொடுத்தாங்க. அவங்க குடும்பத்துக்கு அனுதாபம் தெரிவிச்சாங்க, இப்படியே செய்யிறத எல்லாம செஞ்சுபுட்டு அதுல பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்ட ஈடு கொடுத்தா மட்டும் பாதிக்கப்பட்டவங்களின் உயிர திரும்ப கொண்டு வந்திட முடியுமா?" என்று மற்றொரு இளைஞன் கேள்வி எழுப்பினான்.

இவர்களின் வாதப்பிரதிவாதங்களை அமைதியாக அவதானித்துக் கொண்டிருந்த தணி அண்ணன், "தம்பிகளா இந்தப் பிரச்சினைய நம்ம ஆளுங்க சந்திச்சிருக்காங்க தெரியுமா?

நம்ம பாட்டன் பூட்டன் காலத்தில் இருந்து இந்த நாட்டுல நம்மவங்க எத்தனையோ இன்னல்களைச் சந்திச்சிருக்காங்க! முல்லோய தோட்டம் பறிபோன போது அதற்கு எதிராக குரல் கொடுத்த கோவிந்தன், தலவாக்கலை டெவன் தோட்டம் பறிபோன போது அதற்கெதிராக



போராடி மடிந்து போன சிவனு லட்சுமணன் போன்றவர்கள் என பட்டியலில் பலர் மலையக மண்ணுக்காக போராடி செத்து போயிருக்காங்க. பொலிஸ் காரனின் துப்பாக்கி வேட்டுக்கு பலியாகி போனவர்களுக்காக மலையகத்தில் கண்டனக் கூட்டம், வேலை நிறுத்தம் இப்படி கொஞ்ச நாளைக்குச்செய்வாங்க. பெறகு அத மறந்து போவாங்க. இன்னொரு பிரச்சினை வரும் வரைக்கும் எல்லோரும் வாய்மூடி மௌனம் சாதிப்பாங்க!

அது மட்டுமல்ல மலையகத்துல சுயநலத்துக்காக அரசியல் செய்றவங்க ரொம்ப நாளாவே இருந்து வாறாங்க. ஆட்சியில் இருப்பவங்ககிட்ட ஆமா சாமி! போடுறத நிறுத்தி மலையகத்தவரின் தனித்துவம் காக்க எப்ப போராடுறாங்களோ அப்பதான் நமக்கு விடிவு கெடைக்கும். நேற்று கந்தபொல இன்று இங்கிரியா நாளைக்கு எங்க நடக்கும் என்று நம்மவங்க பயந்து போயிருக்காங்க."

கூட்டத்தில் இருந்த இளைஞன் ஒருவன் "இதுக்கு என்ன தான் தீர்வு? நாம இப்படியே அடிவாங்கிக்கிட்டே இருக்கனுமா?" என்று கேள்வி எழுப்பினான்.

தனி அண்ணன், "இல்ல தம்பி! அதற்கு நம்ம மட்டும் தீர்வு கண்டிட முடியாது. எமக்கு பலமான ஒரு அரசியல் தலைமை இருந்தா இப்படியெல்லாம் நடக்காது. நம்ம அரசியல் தலைவருங்க உறுதியா இருந்து எதையும் சாதித்தாங்க என்ற வரல ரே கிடையாது. எமக்கு இருக்கிற ஒரே ஆயுதம், வேலை நிறுத்தம் செய்யறத தவிர வேறொன்னும் இல்ல. அப்படி வேலை நிறுத்தம் செய்யிரதால தோட்டச் சொந்தக்காரனை விட அதிக நஷ்டம் அடையிறது நம்ம ஆளுங்கதான்! தொழிற்சங்க வாதிங்க வேலைநிறுத்தம் செய்யச் சொல்லிட்டு ஆடம்பர ஹோட்டல்ல நம்மலவச்சி பேரம் பேசுவாங்க.

இதுதான் காலங்காலமா நடந்துவருது. இதுக்கு தீர்வு காணனும்னா மக்கள்தான் ஒன்றுபட வேணும். இளைஞர்களாகிய நீங்கள் மொதல்ல ஒற்றுமைப் வேண்டும். அந்த ஒற்றுமை கட்சி பேதமில்லாம இருக்கனும்.

நீங்க ஒற்றுமையடைஞ்சிட்டா! மலையக தலைவங்க தானாகவே ஒங்க காலடிக்கு வருவாங்க. அதுக்கு பெறகு ஒரு பொது முடிவுக்கு வரலாம். அதுவரைக்கும் நம்ம நாலு பேரு மட்டும் பேசி எதையும் சாதித்துவிட முடியாது"

இப்படி தணி அண்ணன் சொல்லிக் கொண்டிருக்கும் போதே மலையக அரசியல் வாதிகள் சிலர் மரண வீட்டுக்குள் புகுந்தனர். அவர்களும் வழமையான அனுதாபத்தை தெரிவித்துக் கொண்டிருந்தனரே தவிர வேறெதுவும் கதைக்காமல் வாய் மூடி மௌனியாகவே அமர்ந்திருந்தனர்.

கந்தப்பொல சோகம் தணியும் முன்னரேயே அந்தோனி முத்துவின் சடலம் சவச்சாலை நோக்கி கொண்டு செல்லப்பட்டது. அவர் விட்டுச் சென்ற இரண்டு குழந்தைகளும் அப்பா, அப்பா என்று அலறிய சத்தம் கேட்டு தணி அண்ணன் உட்பட சகலரின் விழிகளிலும் நீர்பூத்திருந்தது.

– ஆ. வரதராஜ் –



# சொல்லாதே இது இரகசியம்!

கந்தப்பொல சம்பவத்தைக் கண்டித்து மலையகம் எங்கும் சோகத்தனம் அனுஷ்டிக்கப்பட்டது. சில இடங்களில் கறுப்புக் கொடிகள் போடப்பட்டன. கறுப்புக்கொடிகளை பறக்கவிட்டு சோகத்தை தெரிவிக்கவேண்டும் என்று தொழிற்சங்கவாதி ஒருவர் முதல் நாளே முந்திக்கொண்டு அறிக்கை விடுத்தார். ஆஹா! என்னதான் இருந்தாலும் இந்த மனுசன் மானிட உணர்வு மிகுந்த மனுசன்தான்: நாமதான் இந்த ஆளை தவறா எடை போட்டுவிட்டு விட்டோம் என்றார் நுவரெலியா அன்பர் ஒருவர்!

அந்த நாளும் வந்தது. மலையகத்தில் பெரும்பாலான இடங்களில் தமிழர்களின் கடைகள் இழுத்து மூடப்பட்டன. ஆனால், ஹட்டனில் உள்ள அந்த தொழிற்சங்க வாதியின் மைத்துனரின் கடை மட்டும் மூடப்படவே இல்லையாம்.

ஏனய்யா! இப்படி செஞ்சீங்க என்று கேட்டதற்கு, ஏதாவது ஒழைச்சுக்கிறதுக்கு இதுதான்யா சரியான சந்தர்ப்பம் என்று போட்டாராம் ஒரு போடு. எல்லாம் சதா மக்கள் வணங்கும் அந்த சிவனுக்கே வெளிச்சம்.

# தேர்தல் பிரசாரங்களும் விசித்திர அனுபவங்களும்

ஐந்து கட்டங்களாக நடைபெற்ற இந்திய பொதுத் தேர்தல் கடந்த 10 ஆம் திகதி நடைபெற்ற இறுதிக்கட்ட வாக்குப்பதிவுகளுடன் நிறைவு பெற்றுவிட்டது.

நடைபெற்ற தேர்தல் பிரசார வழிமுறைகளில் சினிமா பாணியிலான பிரசாரங்கள் நாடெங்கிலும் பிரதான இடத்தைப் பிடித்திருந்தன.

ரஜினிகாந்த் 'ஜக்குபாய்' என்ற படத்தில் நடிக்க இருப்பதையிட்டு, ரஜினி மன்றத்தின் ரசிகர்கள் அ.தி.மு.க.வுக்கு ஆதரவாக ஜக்குபாய் வேடத்தில் பிரசாரத்தில் ஈடுபட்டார்கள். 20 க்கும் மேற்பட்ட ரஜனி ரசிகர்கள் தோளில் மஞ்சள் சால்வையுடனும் தலையில் வெள்ளைக் குல்லாவுடனும் ஜக்குபாயின் தோற்றத்தில் பிரசாரத்தில் ஈடுபட்டமை பார்வையாளர்களை மிகவும் கவர்ந்ததாக இருந்தது.

அவ்வாறே சென்னை மயிலாப்பூரிலும் அ.தி.மு.கவுக்கு ஆதரவான அணியினர் படகோட்டி என்ற திரைப்படத்தில் எம்.ஜி.ஆர் மீனவர் போன்று தோற்றமளிக்கும் வேடத்தை பூண்டு தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டிருந்தார்கள்.

முதலமைச்சர் ஜெயலலிதாவும் 39 நாட்களில் 5000 கிலோ மீட்டருக்கும் அதிகமான துவாரம் பயணம் செய்து பிரசாரத்தில் ஈடுபட்டார்.

வழியெங்கும் தமது பிள்ளைகளுக்கு பெயர் சூட்டுமாறு விடுத்த வேண்டுகோளுக்கிணங்க 304 குழந்தைகளுக்கு அவர் பெயர் சூட்டினார். ஆங்காங்கே தாய்மார்கள் 621 இடங்களில் ஆரத்தி எடுத்தும் 807 பூரண கும்ப மரியாதைகள் செய்தும் தமது ஆதரவை முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு தெரிவித்திருக்கிறார்கள்.



ஜக்குபாய் வேடம் அணிந்த ரஜனி ரசிகர் ஒருவர்.

வாரிசு அரசியலுக்கு முடிவு கட்டுங்கள் என்ற பாரதீய ஜனதா கட்சியின் கோஷம் பிரசாரத்துக்கான அதன் நடவடிக்கைகளில் பிரதான இடத்தைப் பிடிப்பதாய் இருந்தது.

அவ்வாறே தி.மு.காவைச் சேர்ந்த தொண்டர்களும் தமது கூட்டணிக் கட்சிகளுக்கு ஆதரவு தெரிவிக்குமுகமாக தலைமுடியை சூரியன் வடிவில் கத்தரித்தும், கன்னத்தில் கைச் சின்னத்தை வரைந்தும் பிரசாரத்தில் ஈடுபட்டிருந்தனர்.

பாரதீய ஜனதாவின் பிரசாரங்களுக்கு பதிலடி கொடுக்கும் வகையில், சோனியா காந்தி டெல்லியில் நடைபெற்ற இறுதிக் கட்டப் பிரசாரத்தின் போது ''பாரதீய ஜனதாவைத் தோற்கடித்து தேசத்தைக் காப்பாற்றுங்கள்'' என்ற கோஷத்தை முன்வைத்தார்.

வாஜ்பாயின் அரசு ஊழலின் உறைவிடமாகப் போய்விட்டதாகவும், கார்கில் போரில் உயிர் நீத்த தியாகிகளுக்கு சவப்பெட்டி வாங்கியதில் கூட முறை கேடுகள் நிகழ்ந்திருப்பதாகவும் கூறியுள்ள சோனியா, அரசின் இளைஞர் நலத் திட்டத்திலும் மோசடிகள் நிகழ்ந்துள்ளதாக தனது பிரசார மேடைகளில் தெரிவித்துள்ளார்.


EXPOAiR எக்ஸ்போ எயார்
your friend in the skies...
வானில் உங்கள் நண்பன்...
யாழ் பயணத்தின் போது
ரோல்ஸ் ரொய்ஸ் இயந்திரத்தின் சொகுசுப் பயணத்தினை
அனுபவியுங்கள்!
யாழ்ப்பாணம்: 021 2223891, 021 2226297, 077 2349999
கொழும்பு: 011 4512666 (3 Lines) Fax: 011 4514700
வெள்ளவத்தை: 011 2360290, 2360291
e-mail: jaffna@expoavi.com, reservations@expoavi.com
இலங்கையின் நம்பத்தகுந்ததும் முன்னணியுமான யாழ் – கொழும்பு விமான சேவை

இப்பொழுது வெள்ளவத்தையில்.....
சுடர் ஒளி உதயன் விளம்பர முகவர்
எமது பத்திரிகைகளில் உங்களது விளம்பரங்களை பிரசுரிக்க விரும்பினால் அவற்றினை எமது வெள்ளவத்தை 4C, 6-1/1, (Fussells Lane) பசல்ஸ் லேன் இல் (பொலிஸ் நிலையத்துக்கு எதிராக) அமைந்திருக்கும் எமது விளம்பர முகவர் நிலவு.com இல் கையளிக்கலாம்.
மேலதிக விபரங்களுக்கு:–
விளம்பர முகாமையாளர்
'உதயன்' 'சுடர் ஒளி' விளம்பரப்பிரிவு
85, ஜெயந்த மல்லி மாரச்சி மாவத்தை, கொழும்பு – 14.
011 4734401 – 3, 011 2399666 – 70
வெள்ளவத்தையில்
தொடர்புகளுக்கான
தொலைபேசி இலக்கம் 071 4801391

இப்பொழுது விற்பனையில்!
ஏப்ரல் 2004 இதழ் கம்ப்யூட்டர் ருடே





- பரபரப்பான கட்டுரைகள்!
- புத்தம்புதிய தகவல்கள்!
- 'அட' என்று சொல்லவைக்கும் அசத்தல் பகுதிகள்!
- இவற்றோடு - மென்பொருள் தொகுப்பை உங்களுக்கு வழங்கும் CD அதிர்ஷ்டம் பரிசுக்கூப்பன்!





உங்கள் பிரதிக்கு முந்துங்கள்!
அச்சிட்டு வெளியிடுபவர்கள்: உதயன் பப்ளிஷர்ஸ்
Dream Grafix



பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்



இப்பத்திரிகை கொழும்பு – 06 வெள்ளவத்தை, பெரக்கும்பா பிளேஸ், 1/5ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட்மார்க் என்டர் பிறைஸ் ஸ்தாபனத்தினால் 2004 மே 17 ஆம் திகதி வெளியிடப்பட்டது.